# மாலைமண

தி.மு.க. 2ம் ஆண்டு மலர்.




..ஆசிரியர்...

# திராவிட இயக்கத் துவக்க வரலாறு

— (வியாழன்) —

நாடு — தமிழ், தெலுங்கு, மலையாளம் ஆகியவை ரு சங்க காலத்தில் தமிழ் இருந்தது என்பதை அனை அறிவர். முத்தமிழ் போற்றி க்கப்பட்ட இம் மாபெரும் நாடு டைவில் ஆரியர் நுழைவினால் காகச் சிதறி மக்கள் நான்காயிரத் து. ஏற்பட்ட சாதியினரைப் த்து ஒருவருக்கொருவர் ஒற்றுமை றவர்களாய் நெல்லிக்காய் மூட்டை ப் போலிருந்தனர்.

ஆரியம் நுழைவதற்கு முன் ஒரே ாழியாக இருந்த தமிழ், ஆரியர் ழைவுக்குப்பின், தெலுங்காகவும் லயாளமாகவும், கன்னடமாகவும் ந்தது. அவ்வாறே நாடுகளும் மக் ம் பிரிந்தனர். தமிழிலிருந்து ந்த மூன்று மொழிகளையும் ஆரி ம் விழுங்கியது. ஆனால் இவற்றின் ய் மொழியாகிய தமிழ் மட்டும் ஆரி தின் பிடியில் பன்முறை சிக்கியும் ப்பேர்தைக்கப்போது உணர்ச்சி க்க தமிழர்களால் காப்பாற்றப் ட்டு இன்றளவும் தனித்தியங்கும் ற்றலை இழந்துவிடாமல் வாழ்கிறது.

தமிழ் மொழியையும் நாட்டையும் வ்வண்ணம் பிரித்து வைத்துவிட்ட ரியம், தமிழ் மக்கள் ஒற்றுமையைச் தைக்க, சாதிப் பிரிவினைகளைக் கற் த்து, அவற்றை நம்ப, மதப் புரா ங்களை உண்டுபண்ணி; மக்களைப் டிக்காதவர்களாக்கி, விதி, கர்மவினை ன்றெல்லாம் கூறி, மக்களின் சிந் னைசக்தியை மங்கவைத்து, ஒரே இன க்கள் மட்டும் உழைக்காமல் உண்டு ளிக்க, மற்றை இன மக்கள் அவர டைய உயர்வை நாடி நிற்க நாட்டு களிலே ஓரினம் உயர்ந்ததாகவும், வை படிப்படியாகத் தாழ்ந்தவை ய் ஆக்கி, அந்நம்பிக்கை என்



சர். பி. தியாகராயர்

தளராவண்ணம் இவ்வுயர்வு வுகள் கடவுளால் உண்டாக்கப் வை என்று மதக் காரணம் கற் த்து வைத்தனர்.

எனவே, சாதி, குலம் என்பவை னவென்றே அறியாத தமிழர்க டையேபார்ப்பனர்என்போர்வாழப் றந்தவர்களாகவும், மற்றையோர் வர்களை வாழவைக்கப் பிறந்தவர்க ாகவும் ஆக்கப்பட்டு, இதற்கு ஆதார ாக தமிழர்கள் என்றும் அறிந்திராத தசம்பிரதாயம் கற்பிக்கப்பட்டுவிட் து.

இந்நிலையில் தொன்றுதொட்டுஆட்சியிலிருந்தவர்கள் ஆரியத்துக்கு அடி பணிந்து நடக்கவும், இம்முறையில் ஆட்சி அதிகாரம் ஆரியமயமானதாகி ற்ற மக்கள் அடி பணிந்து உரிமை யற்றுக் கிடக்கவுமான நிலை நீண்ட காலம் இருந்து வந்தது.

பின் வெள்ளையர் அரசாட்சி ஏற்பட்டு, அவர்கள் சாதிகுல வேறுபாடுகளுக்கு இடந்தராமல் எல்லா மக்களும் படிக்கவேண்டுமென்று கூறி; ஒடுக்கப்பட்ட மக்களுக்கு கல்வி அளித்து, அவர்களில் கற்றவர்களைப் பெரிய பதவிகளில் அமர்த்தத்தொடங்கினர்; கற்றவர்கள் எக்குலத்தவரே யாயினும் அவர்களுக்குச் சிறப்பளிப்பது என்னும் பழந்தமிழ் நாட்டுக் கொள்கையைக் கடைப்பிடிக்கத் தொடங்கினர்; இந்நிலை இந்துமத வைதிகர்களான, பார்ப்பனர்களுக்கு அச்சத்தை விளைவித்தது. இவ்வாறு எல்லா மக்களும் கல்வியறிவு பெற்றுப் பதவிகளில் அமர்ந்துகொண்டால் மத உணர்ச்சியும் குருட்டு நம்பிக்கைகளும் குறைந்துவிடுமென்றும் பார்ப்பனீயத்துக்கு இந்த மதமே ஆதாரமாகையால், இந்த மதாபிமானம் குன்றினால் மதத்தையும் கடவுள்களை ம் மோட்ச நரகங்களையும் மக்களை ஏய்க்க முடியாமல் போய்ப் பார்ப்பனீயம் ஒழிவது திண்ணமென்றும் இதனால் தங்கள் நிலை தாழ்ந்துவிடும் என்றும், தாங்கள் வாழப்பிறந்தவர்கள் என்னும் நிலைபோய், உழைக்காமல் உண்டுடுத்து வாழும் நிலை போய் மற்றையோருக்குச் சமமாக வாழும் நிலைமை ஏற்பட்டுவிடும் என்றும் பார்ப்பனர் அஞ்சினர்.

எனவே, விரைந்து ஆங்கிலம் கற்கத் தொடங்கினர்! வெள்ளையர் நட்பைப்பெற்று உயர்வடைய முனைந்தனர். அதே சமயத்தில், வெள்ளையரிடம் சில உரிமைகள் பெற்று நாட்டு மக்கள் நிலையை உயர்த்துவதென்பதற்காகத் தோற்றுவிக்கப்பட்ட காங்கிரஸ் இயக்கத்தைவிட்டுவிட்டால் அது தங்கள் இன உயர்வுக்குப் பங்கம் உண்டாக்கிவிடுமோ என அஞ்சி அதனையும் கைப்பற்றிவிட வேண்டுமென்று திட்டமிட்டு, அதிலும் ஏராளமாகச் சேர்ந்தனர். அதாவது வெள்ளையர் அரசாங்கத்திலும் பார்ப்பனர் வெள்ளையரிடம் உரிமை கேட்டு நின்ற காங்கிரசிலும் பார்ப்பனர் என்று எல்லாம் பார்ப்பன மயமாகிவிட்டது. அதாவது அதிகாரத்தைப் பயன்படுத்தியும் மதநம்பிக்கை காட்டி மக்களை ஏமாற்ற முடியாமற் போய்விட்டால் தேசியத்தைக்காட்டி ஏமாற்றித் தங்கள் உயர்வை நிலை நாட்டிக் கொள்ளவுமே அவர்கள் இவ் வண்ணம் எல்லாத் துறைகளிலும் புகுந்தனர்.

1892 முதல் 1904 வரை மாகாண சிவில் சர்விசில் 16 ல் 15 பேர் பார்ப்பனராகவும், உதவி இஞ்சினியர்கள் 21 பேரில் 17 பேர் பார்ப்பனராகவும் 140 டிப்டி கலெக்டர்களில் 77 பேர் பார்ப்பனர்களாகவும் 128 ஜில்லா முன்சீப்புகளில் 98 பேர் பார்ப்பனராகவும் இருந்தனர்.

தேசிய இயக்கமாக இருந்த காங்கிரசைத் திலகர் தலைமையில் 1907ல் சூரத்தில் கைப்பற்ற முயன்றனர். பின்னர் 1915 செப்டம்பர் 25ம் தேதி அன்னி பெசண்ட் துவக்கிய ஹோம் ரூல்" கிளர்ச்சியில் பார்ப்பனர்கள் பெரும் பங்கு கொண்டு அவ் விபக்கத்தை தம் வசப் படுத்திக்கொண்டனர்.

இவ்வாறு அரசாங்கத்திலும் ஆதிக்கம் பெற்று நாட்டில் தோன்றும் இயக்கங்களிலும் ஆதிக்கம் பெற்றுத் தங்கள் வாழ்வுக்கு உயர்வுத் தேடிக் கொண்டேயிருக்கும் பார்ப்பனர்கள் போக்கு மற்றைப் பார்ப்பனரல்லாதாரை அடிமைப்படுத்தி வைப்பதாயிருக்கிறதென்பதை உணர்ந்து கொண்ட பார்ப்பனரல்லாத தலைவர்கள் சர். தியாகராயச் செட்டியார், டாக்டர் டி. எம். நாயர், டாக்டர் நடேச முதலியார், சர், பி. டி, ராஜன், சர். ஏ. இராமசாமி முதலியார், சர். ஏ. டி. பன்னீர்செல்வம், உமாமகேசுவரம் பிள்ளை முதலியோர் 1916 நவம்பரில் சென்னையில் கூடி, பார்ப்பனரல்லாதார் உரிமையைக் காக்கத் திட்டமிட்டனர்; தென்னிந்திய நலஉரிமைச் சங்கம் எனும் பேரால் ஓர் அரசியல் கட்சி தோற்றுவித்தனர். அக் கட்சிக் கொள்கைகளைப் பிரசாரம் செய்ய, "ஜஸ்டிஸ்' எனும் பெயருடன் ஓர் ஆங்கிலத் தினசரிப் பத்திரிகை துவக்கினர்; டாக்டர் டி. எம். நாயரை அதன் ஆசிரியராயும் பி, என். இராமன் பிள்ளையை உதவியாசிரியராயும் அமர்த்தினர். "திராவிடன்" எனும் பெயருடன் ஒரு தமிழ்த் தினசரி துவக்கி, பக்தவத்சலம் பிள்ளை பி. ஏ. என்பாரை ஆசிரியராயும் சுவாமி ருத்ரகோடீசுவரரையும், பண்டித வில்வபதி ரெட்டியாரையும் உதவி ஆசிரியர்களாயும் அமர்த்தினர்; "ஆந்திரப் பிரகாசினி" எனும் தெலுங்குப் பத்திரிகையைத் துவக்கி, ஆ. சி. பார்த்தசாரதி நாயுடுவை ஆசிரியராகவும் ராகவைய நாயுடுவை உதவியாசிரியராகவும் அமர்த்தினர். இவ் வண்ணம் 3 பத்திரிகைகளும் கட்சிப் பிரசாரம் செய்துவந்தன.

ஆங்கிலப் பத்திரிகையின் பெயராலேயே கட்சியும் "ஜஸ்டிஸ்" கட்சி எனப் பொதுமக்களால் அழைக்கப்பட்டது. ஜஸ்டிஸ் கட்சியின் முதல் காரியதரிசி என்ற முறையில் சர். தியாகராயர் 1916-டிசம்பரில் ஓர் அறிக்கை வெளியிட்டார். அதில் பார்ப்பன ஆட்சி கூடாது என்பதற்கான காரணத்தையும் அரசியலில் பார்ப்பனர் அளவுகடந்து ஆதிக்கம் பெற்றுவருவதால் பிறருக்கு ஏற்படும் தீமையையும் பார்ப்பனரல்லாதாரின் நிலையையும் நன்கு விளக்கியிருந்தார். அந்த அறிக்கை பார்ப்பனரல்லாதார் கண்களைத் திறந்தது பார்ப்பனர்களைத் திகைப்படையச் செய்தது. எனவே தங்கள் உல்லாசச் சுக வாழ்விக்கு உலைவைக்க வந்த இந்த ஜஸ்டிஸ் கட்சியை, அவர்கள் மனம் போன போக்கில் தூற்றத் தொடங்கினர்; பார்ப்பனரல்லாதாரின் சிலரைத் தூண்டிவிட்டு, ஜஸ்டிஸ் கட்சியை எதிர்க்கச்செய்தனர்! தங்களால் இயன்றவகைகளிலெல்லாம் தொல்லை விளைவித்தனர்.

இந்திய வைசிராய் செம்ஸ்போர்ட் பிரபுவும், இந்திய மந்திரி மாண்டேகு பிரபுவும் 1917- டிசம்பர் 24-ல் சென்னை வந்தபோது, ஜஸ்டிஸ் கட்சியின் நாட்டு நிலைமையை நன்கு விளக்கி அவர்களிடம் ஓர் அறிக்கை சமர்ப்பித்தனர். ஹோம்ரூல் இயக்கம் சமர்ப்பித்த திட்டங்களைவிட ஜஸ்டிஸ் கட்சி அறிக்கையே உண்மையை உள்ளபடி கூறி, பார்ப்பனச் சமுதாயத்தின் உட்கிடக்கையை வெளிப்படுத்தியது. எனவே, 'ஜஸ்டிஸ்' கட்சியை ஒழிக்கப் பார்ப்பனர் முன்னை விடப் பன்மடங்கு தீவிரமாக வேலை செய்தனர்.

ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களும் ஜில்லா மாநாடுகள் கூட்டி மக்களைத் தட்டி எழுப்பத் தொடங்கினர். 1917-



டாக்டர் பி. நடேசன்

ஆகஸ்ட் 19-ந்தேதி கோயமுத்தூரில் பனகல், அரசர் தலைமையிலும் அக்டோபர் 27-28ந்தேதிகளில் பிக்காவோலில் (கோதாவிரி மாவட்டம்) செல்லப் பள்ளி குமார ராஜா தலைமையிலும், நவம்பர் 3; 4-ந்தேதிகளில் ராயலசீமா புலிவெந்தலாவில் பாரிஸ்டர் கே. சப்பாரெட்டி தலைமையிலும், நவம்பர் 11, 12-ந் தேதிகளில் பெஜவாடாவில் சர். பி. தியாகராயர் தலைமையிலும், நவம்பர் 13, 14-ந்தேதிகளில் திருநெல்வேலி, இராமநாதபுரம், மதுரை மாவட்டங்களின் தமிழ்த் தலைவர்கள் மாநாடு திருநெல்வேலி நகரில் தெப்ரோல் ஜமீன்தார் தலைமையிலும்' டிசம்பர் 9-ந் தேதி சேலம் நகரில் புதுக்கோட்டை அரசிளங்



டாக்டர். டி. எம். நாயர்


குமாரர் கே. எஸ் துரைராஜ் தலைமையிலும் ஒரே ஆண்டில் 6 மாவட்ட மாநாடுகள் நடத்தப்பட்டு, இறுதியில் சென்னை வெல்லிங்டன் தியேட்டரில் முதல் மாகாண ஜஸ்டிஸ் கட்சிமாநாடு டிசம்பர் 28, 29-ந் தேதிகளில் வேங்கடகிரி அரசர் தலைமையில் நடைபெற்றது.

(27-ம் பக்கம் பார்க்க)

# பிரஞ்சுப்புரட்சிக்கு வித்தூன்றியபிரமுகர்க

(ஈ. வெ. கி. சம்பத்)

மன்னன் பதினுலாம் லூயி: அனேகருக்கு ஆச்சரியமாயிருக்கும் மக்கள் புரட்சிக்கு, மன்னன் அதுவும்உலகின் கொடுங்கோலர் பட்டியலில்சிறப்பிடம் பெற்ற ஆணவக்காரன் பதினுலாம் லூயி புரட்சி வித்தூன்றினுை? வரலாறு தெரிந்தோர் உணர்வர். கொடுமைதான் எல்லையற்ற வேதனையைப் பரப்பும் கொடுமைதான்—எந்தப் புரட்சிக்கும் வளர்ப்புத்தாய் என்பதை பதினுலாம் லூயி சிறியவனுய் இருக்கும் போது அமைதியும் நல்லாட்சியும், சிறந்த அறிஞர்களை பிரான்சுக்கு. அணிகளாய் அமைந்திருந்தன. கார்னலி, மாலியர், ரேசினி



ஈ. வே. கி, சம்பத்


ஆகியோர் பிரெஞ்சு நாடக மேடையை ஒளிப்பிழம்பாக்கி உலகையே குலுக்கினர் போஸ்ஸே பெனிலான் டெஸ்கார்ட் டேகேஸண்டி போன்ற அறிஞர்கள் பிரான்சின் தூங்கிக் கிடந்த சிந்தனையைத் தூண்டினர். இத்தனையும் லூயி விவரம் தெரியாதவனுய் மேஜராகாமல் இந்தகாலத்தில். லூயிமேஜரானுன் அரசனுனுன். "விவரம் தெரிந்தவனுன்! வளரும் சிந்தனையை அடக்கினுன். புது எண்ணங்கள் ஊறும் ஊற்றுக்களைத் தேடித்தேடி அலைந்தனர். பெனிலான் போர்டாலு போன்ருரின் எழுத்து வன்மை கண்டு உலகம் வியந்தது பேஸ்கல் அவனது ஆட்கள் ஊற்றுவாயைத்தூர்க்ககடைசியில் லூயி ஒரு தந்திரம் கண்டான். புது எண்ணங்கள் பரவாமல் தடுக்க, சிந்தனை வளராமல் பார்த்துக்கொள்ளச் சிறந்த வழி—புலவர்களை, அறிஞர்களை, கவிஞர்களை ஆதரிப்பது, பணந்தருவது—எனக் கண்டான் வென்ருன். மன்னன் துதிபாடுவோராகப் புலவர்கள் மாறினுர்கள். அரசன் உள்ளத்தை அன்ருடம் திருப்தி செய்ய புதுப்புது கற்பனைகளை உவமைகளைத் தேடி அலைந்தனர். கவிஞர்கள். சுருக்கமாக, மக்கள் எண்ணங்களைப் பிரதிபலிக்க வேண்டிய அறிவுக் கண்ணுடிகள் மன்னனின் ருபலாவண்யத்தை எடுத்துக்காட்டும் அரண்மனைக் கண்ணுடிகளாய் மாறிவிட்டன.

மதிமந்திரி ரீஷ-லு: உலகிலேயே மன்னர்களிடம் பணியாற்றிய மந்திரிகளிலே மதிமிகப் படைத்தவனும் வலிமிகக் கொண்டவனும் ரீஷ-லு—கார்ஷனல் ரீஷ-லு இவனும் புரட்சித் தந்தைகளில் ஒருவன். இந்த உண்மை அவன் வழ்ந்த காலத்தில் அவனுக்குத் தெரியாது. பிரான்ஸில் பல சிற்றரசர்களும், பிரபுக்களும் ஆங்காங்கே கோட்டைகள் கட்டிக்கொண்டு படைகள் அமைத்துக் கொண்டு காட்டுராசர்க்களாக வாழ்ந்தனர் ஆனுல் சட்டப்படிபிரஞ்சிமன்னனுக்கு அடங்கியவர்கள்தாம் ஆனுல் அவ்வப்போது ஓரிருவர், 'ஓரிருவிஷயங்களில் அடங்காபிடாரிகளாய் மாறினதுண்டு ஆனுல் பிரான்சின் மீது படையெடுப்பில் அனைவரும் அரசனைச்சுற்றி அவனைக் காக்க அவரவர்கள் படை வரிசையுடன் அணிவகுப்பர் ரீஷ-லு அவர்கள் அத்தனை பேரின் பல்லையும்பிடுங்கி பிரான்சில் மன்னனையே, மன்னனை மட்டுமே மகத்தான சக்தியாக்க, ஒரே சக்தியாக்க முயன்ருன் வென்ருன். பிரபுக்கள் படை வரிசைகளை இழந்து கோட்டைகளைத் துறந்து, தங்கள் வட்டாரத்து வாசத்தையும் மறந்து பிரெஞ்சு மன்னனின் அரண்மனையில் தூண்களுக்கு ஒருவராய் வந்து நின்று உரத்தக் குரலில் கட்டியங்கூறி அவனிடம் பட்டங்களையும் பாராட்டுதலையும் பெறக் காத்துக் கிடந்தனர், முன்னர் இரும்புக் கவசங்களைப் பூண்ட பிரபுக்களின்மணி மார்பிலும், தலையிலும் பட்டுத்துணிகளும், பல நிற இறக்கைகள் சொருகிய பட்டுக் குல்லாயும் மிளிர்ந்தன. உடை வாள் தாங்கிய உறையைத் தாங்கிக்கொண்டி உடைகள் விதவிதமானு பட்டுக்குஞ்சங்களின் இருப்பிடமாயின. ரீஷ-லு மகிழ்ந்தான். "பிரபுக்கள் வலுவிழந்தனர். மன்னனே மகத்தான சக்தி, என் லட்சியம் ஈடேறிற்று" அந்தோ பரிதாபம்! இங்கிலேதான் பிரான்சில் பின்னுல் மக்கள் மன்னனுக்கெதிராய் கிளர்ந்து எழுந்தபோது மன்னனை 'அனுதை' யாக்கி நீதியின் கடும்பிடிகளுக்கு அவனையும் அவனது அலங்காரக் கண்மணிகளான பிரபுக்களையும் பலியாக்கியது, மன்னனை ரீஷ-லு, பிரான்சின் மகத்தான சக்தியாக—அதைவிட ஒரே சக்தியாய்—ஆக்கிய விளைவு தான் மன்னனுக்கு எதிர்ப்பு கிளம்பிய போது அவன் அருகில் நின்று அவனைக்காக்க ஆள் கிடைக்காமல் போயிற்று அவனைக்காக்கவேண்டியவர்களெல்லாம் வலுவிழந்து ரிஷ-லு வாய்பல் பிடுங்கப்பட்டு அவனுல் காக்கப்படவேண்டியவர்களாய் மாளிவிட்டனர். அவன் வீழ்ந்தபோது அவர்களும் வீழ்ந்தனர்

ஆகவே பதினுலாம் லூயியும் ரீஷலும் "பாஸ்ட்டிலி" என்னும் உலகிலியே மிகப் பயங்கரச் சித்திரவதைச் சிறைச்சாலைக்குத் திட்டமிட்டு விடுதலைக்கோட்டத்திற்குக் கால்கோள் விழாவாற்றினர்.

ரீஷ-லு மணிமுடிக்கு அடுத்தாற்போல் மடத்தை வலுவுள்ளதாக்கினுன் மடம் வளர்க்கும் மடமைதான் கொடுமைபுரியும் அரசுக்குப் பாதுகாப்பு என்ற அடிப்படையில் வேலை செய்தான் ஆகவே மடமும் அரசும் பிரான்சின் இருதலைப் படைத்த கொடும் விலங்காய் உலவி மக்களை வாட்டின.

ரூஸ்ஸோ வால்டேர் மான்ஷஸ்க்யூ டிடிராட் டிஹாால்பாக். இந்தப்பெயர்கள் பிரான்ஸில்வெறும் பெயர்களல்ல சிந்தனை விளக்குகள் கருத்துக் கருவூலங்கள் எண்ணக் கோட்டைகள். விடுதலை வேட்கை பெருக்கெடுத் தோடிய வீர ஊற்றுக்கள் புரட்சிப் பொறிகள் புதுக்கருத்துக்களைப்பொழிந்து தூங்கிக்கிடத்த பிரான்ஸை விழிப்படையச் செய்து மன்னனையும் மணி முடியையும் மடத்தலைவர்களையும் மடத்தையும் தவிடுபொடியாக்கி மக்கள் அரசு மலரச் செய்த மகான்கள் கொடுமைத் தீயிலும் வேதனைப் புயலிலும் சாகாத சாகாத்தலை. முறையின் கர்த்தாக்கள் அவர்களின் ஆயுதம் பேனு இவர்களை எதிர்த்தது பீரங்கியும் பாஸ்டிலிசிறையும் மன்னனின் பெரும் படையும்



டி. எம். பார்த்தசாரதி—மு. கருணாநிதி

பெரும்போராட்டம் பேனுஒடியவில்லை ஓய்ந்து போகவில்லை ஆனுல் வெடிமருந்து தீர்ந்தது வெடித்து வெடித்து பீரங்கிகள் ஓய்ந்தன படை வரிசை குலையவில்லை மக்களின் படைவரிசையாய் மாறிற்று மன்னன் வெம்பிப் போய் தம்தீமைகளுக்குவிலைகொடுத்து ஓய்ந்தான் இப் பேரறிஞர்களின் எழுத்துக்கள் ஒலி வாடிவு எடுத்து நாடக மேடைகளைக் கைப்பற்றிற்று வெகு நாட்களாக திட்டப் படாமல் மக்கள் உள்ளத்தில் தூங்கிக் கிடந்த விடுதலை வீணைகள் மீட்டப்பட்டன விடுதலைப் பண் நாடு முழுதும் இசைத்தது அந்த இசை மாளிகை வாசிகளுக்கு சாவோலையாய் அமைந்தது பாஸ்ட்டிலியின்ா கோட்டைச் சுவர்கள் தகர்ந்து போய் சித்திரவதைக் கூடம் மண் மேடாயிற்று இரத்த வெள்ளத்தில் விடுதலை ஓடம் சூழ்ந்தடிக்கும் சூருவளியில் குடியரசு அணையாவிளக்கு இந்த வெற்றியைப் பாரட்டியவர் பாராட்டுகிறவர் மிகச்சிலர்.



அம்பில் தர்மலிங்கம்


மன்னராட்சியில் சில வரிகள் நமது காங்கிரஸ் ஆட்சியின் வரி வி... பைச் சாதாரண மாக்கக் கூடியவை... பிரான்சின் அன்றைய வரிகள் ... செலுத்த வேண்டியவர்க... மக்கள். பிரபுக்களும் மடத்தின... விரும்பியதைத் தரக் கடமைப்ப... வர்களே ஒழிய வரிக்கு ஆளாகிய... கள் அல்ல. வரி வசூலிக்கும் கரு... மூர்த்திகளின் முறைகள் மிக விசே... மானவை. வரிதராவிடில் முத... வெய்யிலில் காயும்துணிமணிகள் பி... நிலை, கதவு, தட்டு முட்டுச்சாமான்க... அப்படியும் வரிதராவிடில்சிறைசி... யிலிருந்தும் வரிதர முடியாவிட்... முடிவாகத் தூக்குக் கயிறு வரி... விப்போர் மட்டும் 2,50,000 ... அன்றைய பிரான்சில்

வரிவகைகள்: டெய்யில்லி ... (விளைச்சல் வரி) ஒரு ஏக்கர் ... தில் 3 பவுன் 2 ஷில்லிங் 7 பென்... பெறுமானம் விளைக்கின்ற தெ... அரசனுக்குச் செலுத்த வேண்டி... 1 பவுன் 18 ஷில்லிங் 4 பெ... நிலத்துக்காரனுக்கு 18 ஷில்... போக விளைவிப்போனுக்கு 5 ஷில்... தான்.


(ii):- தலைவரி - ஓட்டுரிமை உ... ஒவ்வொருவரும் செலுத்த வேண்டி... யது.

(iii) லிங்கிட்டீம்வரி: தற்போதை... இன்கம்டேக்ஸின் தாத்தா. சம்பா... திக்கும் ஒவ்வொரு பத்தணுவிற்கும்

(அடுத்தப் பக்கம் பார்க்க)



பெருங்குரிச்சி ஜி. டி. சோமசுந்தரம்



நிழற் படம் எடுப்பவர் ம... நிழல் போல நம் செ... தொடருபவர்

(முன்பக்கத் தொடர்ச்சி)

...லுத்த வேண்டிய வரி, இது அரச ...து தேவைகளுக்குத் தகுந்தாற் ...ால் வளரவேண்டிய ஒன்று.

(iv) எய்டீஸ்வரி:— உண்ணும் ...ணவுக்குச் செலுத்தவேண்டிய வரி.

(v) கேபில்லி: வரிகளிலேயே மிகக் ...காடுமையான உப்புவரி. இது மாகா ...ரத்துக்கு மாகாணம் வேறு படும் ...ரி இல்லாத ஆர்ட்டோய்ஸ் எனும் ...தந்திர வட்டாரத்தில் ஒரு அளவு ...உப்பு மூன்றரை பிராங்கு என்றால் ...அதே அளவு உப்பு வரிவிதிக்கப்பட்ட ...மீன்ஸ் மாகாணத்தில் 62 பிராங்கு ...னில் வரி எவ்வளவு என்பதைக் ...ணக்கிட்டுக்கொள்ள இயலும்

(vi) கஸ்டமஸ் பாண்டிச்சேரிக்கும் ...ந்திய யூனியனுக்குமிடையில் கஸ் ...ம்ஸ் இருந்து வரி விதிப்பது போல் ...ரான்சில் அதே தேசத்தின் ...ல்லாக்களுக்கிடையே கஸ்டம்ஸ் ...ரி வசூல் செய்யப்பட்டது.

இந்தக் கொடும் வரிகள் தவிர கட் ...ய இலவச ஊழியம் மக்களிடம் ...ருந்து பெறப்பட்டது. ஒரு ரோடு ...போடவேண்டுமானால், ஒரு சிறு பட் ...ாளம் புறப்பட்டுப் போய் வயலில் ...லை செய்துக்கொண்டிருப்போரை, அல்லது கண்ணில் பட்ட சாமான்யர் ...களை வளைத்து ஓட்டிக்கொண்டு போய் ...வேலை வாங்குவார்கள். கூலிகிடை ...ாது உணவு கிடையாது. இடைவேளை ...ண்டு—வழிப்போக்கர்களிடம் உண ...ப் பிச்சை வாங்க. ஆளும் வர்க்கம் ...ட்டில் வறுமைச் சூருவளியைக் ...ப்பி மக்களை வாட்டினர். மக்க... புரட்சிப் புயலில் பின் ஆளும் ...க்கம்-பொடிப்பொடியாயிற்று.

...பிரபுக்கள் பிரபாவம்:—பொழுது ...பாக்கு—காம்ட்டி டிசர்ரோலோய்ஸ் ...னும் பிரபுக்குஒருவிநோதமான ...பொழுதுபோக்கு, திடீரென துப் ...பாக்கியோடு வெளியில் புறப்பட்டு ...கண்டவர்களைச் சுட்டு வீழ்த்துவது.

...அதிகாரம்:—மழை பெய்துகுட்டை ...ளில் தண்ணீர் தேங்கி தவளைகள் ...த்திக்கொண்டிருக்குமேயானால், தவ... சத்தத்தில் பிரபுவின் தூக்கம் ...டாமலிருக்க, ஊராரைத்தடியெடுத் ...கொண்டு கத்தும் தவளைகளைக் ...ட்டும் மழையில் தேடிப்பிடித்து ...அடக்கச் செய்ய அவர்களுக்கு அதி ...ாம் உண்டு.

...பரம்பரைப் 'பழக்கம்' ஊரில்நடை ...றும் திருமணங்களில், மணப் ...பெண்ணுடன் முதல் இரவைக் கழிக்



நாஞ்சில் மாவட்டத்தில் நமக்கு கிடைத்த மாணிக்கம் மனோகரன்

...கும் உரிமை அவ்வட்டாரத்துப் பிரபுவுக்கே உண்டு. புதுமை மாய்ந்தபோக பூமிக்குத்தான் கணவன் உரியவன் ஆகிறான்.

மன்னன் மகான்மியம்: மேற் ...ன்ன கோலாகலாகளின் தலைவ ...ன் பதினைந்தாம் லூயியின் ...கள் எழுத ஒண்ணு காம ...ன் வயது வரா...

ரீஜண்ட், காமவெளியீடுகளில்புதுமைக்கான பல நூதன முறைகளைக் கையாண்டான் ஒன்றுரைத்தாலே அவனைத் தெரிந்துக் கொள்ள இயலும் பாரிஸ்ஸிஸ் சரீரக் கடைநடத்தும் சர ஸாங்கிகளில் 100 150 பேரைக் கண்ணைக்கட்டி அரண்மனைக்கு ஓட்டி வந்து விருந்து வைத்து அதில் நிர்வாணமாய் அவர்களைக் கலக்க வைத்து போதை யேற்றி...... இனிவர்ணனை தேவையில்லை அவரின் சுகானுபவ முறைகள் பலவற்றில் இது ஒன்று. இது ரீஜண்ட் லீலாவிநோதம் மன்னனுக்கு வயது வந்ததும் மாதமொரு ஆசைக்கிழத்திகள் என்ற முறையில் அவரது ஆட்சி ஆரம்பமாயிற்று. மேடம் டி பாம்படார் என்ற அழகி மாதமொருத்தி பட்டியலில் சேராமல் அரண்மனையில் தங்கி விட்டாள் அரசனை ஆட்டிப்படைத்தாள் மூப்பு அவளைப் படையெடுத்தது மெருகு குலைந்தது உள்ளம் தளரவில்லை கவர்ச்சி குறைவதை உணர்ந்தாள் அதனால் அனுபவித்த ஆதிக்கத்தை இழக்கச் சம்மதமில்லை அவளுக்கு புது முறையில் மன்னனுக்குப் பணிவிடைகள் செய்ய முனைந்தாள் நாட்டின் நாலு பக்கங்களிலும் ஆட்களை அனுப்பி அழகிகளைத்தேடிப்பிடித்து அரண்மனையில் அரசனறியாமல் "ஸ்டாக்" செய்து தினமொரு புதுவிருந்தளித்து விடிந்து கசக்கியமலர்களைப்பரலோகத்திற்கு அனுப்பி வைக்க ஆரம்பித்தாள் பாரிஸில் பீதி மக்களைப் பிடித்துஉலுக்கியது திடீர் திடீர் எனச் சிறுமிகள் அழகிகள் காணமல் போயினர்தடயங்கள் அனைத்தும் அரண்மனையையே சுட்டிக்காட்டின இதற்கிடையில் மிதமிஞ்சிய போகத்தில் திளைத்திருக்கும் மன்னனது உடல் மனித ரத்தத்தில் குளித்தால் .உதம்பும் திடமும் உண்டாகும் என ஒரு அரண்மனை வைத்தியன் சொல்ல உடனே ராஜபக்தி மிகுந்த மாடம் டி பாம்படார் சிறுவர்கள் சிலரைப் பிடித்து வந்து அவர்களை வெட்டி அவர்களது இரத்தத் தடாகத்தில் அரசனைக் குளிக்கவைத்து வீரிய விருத்திக்கு வைத்தியம் செய்தாள். ஓரிரவு அரசனின் மஞ்சத்தை அலங்கரிக் பறித்து வரப்பட்ட அழகு மலர் பதினாலு வயதுடைய ஒரு சிறுமிக்கு பெரியம்மை நோய்க்கு மெள்ள பலியாகிக் கொண்டிருக்கும் அம்மென்மைஉடலை அரசன் அணைந்து படுத்தான் அவனும் அம்மை நோய்க்குப் பலியானன் அரசன் உடல் அழுகி நாற்றமெடுக்க ஆரம்பித்தது அந்தப்பக்கம் போகவே அரண்மனை ஆட்கள் மறுத்தனர் அவன் உயிருடன் அழுகிச் செத்தான்.

இந்தச் சம்பவங்களை நோக்குபவர்களுக்கு பின்னால் பிரான்சில் நடைபெற்ற புரட்சியின் போது நிலவிய மித அளவுதான் ஆச்சரியமாய் இருக்கிறதே தவிர சிந்தப்பட்ட ரத்தமல்ல இவ்வளவு கொடுமை களுக்காளான மக்களுக்கு பழி வாங்குவது ஒரு புனிதமான கடமையாய்த்தான் பட்டிருக்குமே தவிர ஒரு குற்றமாய் எப்படி...



தடை யுத்தரவை மீறி மூன்று மாதக் கடுங்காவல் தண்டனை பெற்ற நாரணமங்கலம் வீரர்கள்

## உரோமாபுரி...

(23-ம் பக்கத் தொடர்ச்சி)

50,000க்கு மேற்பட்ட உறுப்பினர்கள் —சலியாத உழைப்பாளர்கள்—முன் வைத்த காலைப் பின் வைக்காத வீரர்கள் கொண்டதாக வளர்ந்தது. இக்காலத்தில்தான் போரில் புறங்கொடா மாவீரன் 'கரிபால்டி' என்பான்' இக்கழகத்தில் சேர்ந்தான். இந்தச் சமயத்தில், இத்தாலியின் ஒரு பகுதியான 'பீட்மாண்ட்'டில் சார்லஸ் ஆல்பர்ட் என்பவன் சிம்மாசனமேறினான். அவனைச் சுதந்திரப்போருக்கு தலைமை வகிக்கச் செய்ய வேண்டுமென்று மாஜினி கருதினான். தன்னுடைய கருத்து எவ்வளவு தவறுனது என்பததை அப்போது உணரவில்லை,

எனவே, பீட்மாண்டு வேந்தனுக்கு ஒரு கடிதம் எழுதினான்: அதன் சாரம்:—

"பீட்மாண்ட் வேந்தரேறே! ஆஸ்திரியாவையும் பிரான்சையும்விட மிகப் பெரிய நாடும், பீட்மாண்ட் கிரீடத்தைவிட மிகச்சிறந்த மணிமுடியும் அடையலாம் — அகில இத்தாலியும் விடுதலை பெறுவதற்காக நடத்தப்படும் மறப்போரில் தாங்கள் தலைமை வகித்தால்!"

என்பதே அக்கடிதம்! அதைக்கண்டவுடனே பீட்மாண்ட் வேந்தன் பெருமைப்படவில்லை. மாறுகச் சீற்றங் கொண்டான். மாஜினியை உடனே சிறைப்படுத்துமாறு கட்டளையும் பிறப்பித்தான் இதையறிந்த மாஜினி மார்சேவிலேயே ஓர் ஒதுக்கிடத்தில்ஒளிந்து கொண்டான். ஆனால், அவனுடைய தோழர்கள் — இத்தாலிய இளைஞர் கழக உறுப்பினர்கள் சித்திரவதை செய்யப்பட்டார்கள். இக்காலத்தில் பீட்மாண்ட் வேந்தன் செய்தகொடுமைகள் — சித்திரவதைகள் கணக்கில் அடங்கா- பலர் கொலை செய்யப்பட்டனர். பலர் சிறைப்பட்டனர். கொடுமைகளைத்தாங்கமாட்டாமல் ஜாகோபோருபினி என்பவன் சிறையிலேயே தற்கொலை செய்து கொண்டான்.இதற்கிடையில் பிரெஞ்சு சர்க்காரால் மாஜினி அடைந்த கஷ்டங்கள் ஏராளம். ஆனால், அதற்காக அவன் தளரவில்லை பெண்வேடத்துடன்நெடுநாளைக் கழித்தான். ஸ்விட்ஜர் லாண்டில் கொஞ்சநாளைக்கழித்தான். இங்கிலாந்திலும் சிறிதுகாலம் இருந்தான் வறுமையோ, வாட்டி வதைத்தது—என்றாலும், அத்தனை சஞ்சலங்களுக்கிடையிலும் துண்டுப்பிரசுரம் வெளியிடுதல் பத்திரிகைக்கு கட்டுரை வரைதல் தன்னைப்போன்ற நாடு கடத்தப்பட்ட முக்கியஸ்தரிடம் நட்புப் பூணுதல் ஆகிய காரியங்களைத் தடையின்றிச் செய்துவந்தான்- அவனுடைய எழுத்துக்கள் மட்டும் எப்படியோ இத்தாலிய மக்களுக்குக் கிடைத்து வந்தன.

மாஜினி இத்தாலியில் வாழவில்லை அவனுடைய எண்ணங்கள் மட்டும் எப்படியோ இத்தாலியமக்களின் உள்ளங்களில் குடியேறி இருந்தன மாஜினியின் கனல்தெறிக்கும் எழுத்துக்கள். அவன் எங்கிருந்தாலும் இத்தாலியை எரிமலையாக்கிக் கொண்டிருந்தன. இத்தாலி இத்தகைய புத்துணர்ச்சி பெற்றபோது 1848-ம் ஆண்டு பிறந்தது.

1848-ம் ஆண்டு பிரெஞ்சு மக்களுக்கு பெருமை தந்த ஆண்டாகும் பாரிஸ்நகரில் லூயிமன்னன் பிலிப்பையின் சிம்மாசனத்தை இழந்தோடிய காலம் 18எ8. புரட்சியின் பெருமையை பிரெஞ்சு மக்கள் கொண்டாடும் பெருநாள் அது.

நேராகப் பாரிஸுச்க்குப் போய் குடியரசுத் தலைவரை பேட்டிகண்டான் மாஜினி. இத்தாலியன் விடுதலைக்கு பிரஞ்சுக் குடியரசு உதவ வேண்டுமென்று இறைஞ்சினன் எவ்வித கைம்மாறும் கருதாமல் இத்தாலிக்கு உதவுவேன் என்று வாக்களித்தான் பிரஞ்சுத் தலைவன் இந்த விவரங்ஜள் குமுறிக் கொண்டிருந்த மக்களுக்குத் தெரிந்தது இத்தாலின் ஒரு பகுதி மிலான்' . அது ஆஸ்திரியாவின் கீழ் 'இருந்தது அங்குள்ள மக்கள் புகையிலையை அதிகமாக உபயோகிப்பவர்கள். அதன் மீது வரி விதிப்பதால் சர்கோருக்கு ஏராளமான வருமானம்

இத்த நிலைமையை மிலான் மக்கள் கண்டார்கள் 'புகையிலை மறுத்தல்' என்ற பெயரால் ஒரு கிளர்ச்சியை ஆரம்பித்தார்கள். அந்தக் கிளர்ச்சி புரட்சியாக மாறிற்று.

ஆஸ்திரிய சர்க்கார் புகையிலை மறுப்புக் கிளர்ச்சியை அடக்க முயற்சித்ததே புரட்சியின் காரணம். சர்க்காரின் ராணுவமும், மக்களும் ஆயுதந் தாங்கிய போர். வீடுகள் தோறும் போர். வீதிகள் தோறும் ஆண்கள், பெண்கள், குழந்தைகள். கிழுங்கள் எல்லாரும் இம்மறப்போரில் ஈடுபட்டார்கள். இந்தச்சமயத்தில்பீட்மாண்ட் மன்னன் சார்லஸ்ஆல்பர்ட் ஆஸ்திரிய சர்க்காருக்கு உதவி செய்தான். ஆயினும் மக்கள் கலங்கவில்லை. கையில் அகப்பட்டதைக் கொண்டெல்லாம் ஆஸ்திரிய ராணுவத்தைத் தாக்கினர்கள், கட்டை, கல், க்ரண்டி, இரும்பு, விட்டம், பலகை, மேஜை, நாற்காலி, இவைகள் எல்லாம் மக்களின் ஆயுதங்கள் இந்தப் புரட்சி தோன்றிய செய்தி மாஜினிக்கு தெரிந்த உடனே. அவன் நேராக மிலானுக்கு வந்து மக்களை



ஆச்சாரியார் சென்னை வந்தபோது கருப்புக்கொடி காட்டிய தோழர் முனுசாமியும், டாக்டர் கணேசனும் தடியடிக்கு ஆளானக் காட்சி

உற்சாகப்படுத்தினன்,

போராட்டம் மக்களுக்கு வெற்றியாக முடியும் ஆனல் பீட்மாண்ட் வேந்தன் ஆல்பர்ட் ஒரு சூழ்ச்சி செய்து ஆஸ்திரியாவுக்கு வெற்றி தேடித்தந்தான் அதாவது: — பீட்மாண்ட் ராணுவத்தை அனுப்பி ஆஸ்திரியாவை எதிர்த்து முறியடிக்க தாங்

(26-ம் பக்கம் பார்க்க)

# சிறையைச் சீர்திருத்திய சீமாட்டி எலிசபெத் பிரை

[சத்தியவாணிமுத்து]

"தீர்ப்பு, தூக்குமேடை !"

"காரணம் ?"

"கடமையாயினும் குற்றம் குற்றமே.'!

"வேறு மார்க்கம் இல்லையா ?"

"எதுவாயினும் சரி, செய்தது குற்றம்."

"அதற்குத் தூக்குதண்டனையா?"

"ஆம்."

இது சிறையதிகாரி லார்ட் சிட்மத் (Lord Sidmouth) என்ற சீமானுக்கும் இரக்கத்தின் எல்லை (Genius of Mercy) என்று உலகோர் போற்றும் உத்தமி எலிசபெத் பிரைக்கும் நடந்த உரையாடல்.

குற்றவாளி ஓர் இளம் பெண்.

செய்த குற்றமோ மலைபோன்றதல்ல.

அவள் மனதில் தன் கடமை என்று பட்டதைச் செய்தாள்.

என் காதலன் சொல்கிறான் ஆகவே நானும் சொல்கிறேன்.

அவன் தூண்டுதலின்மேல் ஏதோ தகாத வார்த்தைகளைக் கூறினாள். சட்டம் சீறியது. அளித்தது தூக்குமேடை என்ற பரிசை,

குற்றம் எவ்வளவு சாதாரணமானாலும் தண்டனை தூக்கிலிடுவதுதான் சிறந்தது என்று சீறினார் லார்ட் சிட்மத்.

குற்றத்திற்கு ஏற்றவாறு தண்டனையளிப்பது மனிதத்தன்மை என்று வாதாடினாள் எலிசபெத் பிரை (Elizabeth Fry).

வெற்றிமாலை சீமானை நோக்கிச் சென்றது.

மரண ஓலையோ மங்கையைத் தழுவியது.

நூற்றுக்கணக்கில் தூக்கில் தொங்கினார். 'இம்' என்றால் சிறை 'ஆம்' என்றால் மரணம்,

ஒன்பது வயது நிரம்பாத பாலகன் கண்ணாடியை உடைத்தான். அதோடு இரண்டு அணா சாயத்தைத் திருடினான் என்பதற்காக துள்ளித் துடித்தான் தூக்கில் தொங்கியபடி. சிறையிலிருப்பவர்கள் மக்களாகக் கருதப்படவில்லை. ஆண், பெண், குழந்தைகள், கொலைக்காரன், கொள்ளைக்காரன், கடன்காரன், சித்தமிழந்தவர் எல்லோரும் ஒரே இடத்தில், அதிலும் இருட்டில் உண்பதும் உறங்குவதும் ஒன்றாகவைத்து பட்டியில் அடைப்பட்ட ஆடுமாடுகளைப் போல் விடப்பட்டனர். இவர்களது நிலை எப்படியிருந்திருக்கும்.


சுத்தமான காற்றும் போதுமான உணவுமில்லாமல் கைதிகள் நோயாலும், பட்டினியாலும் அங்கேயே மாண்டனர்.

திடீரென்று தீப்பிடித்து 44 கைதிகள் தப்பிக்க வழியின்றி உயிர் துறந்தனர் ஓர் ஐரிஷ் சிறையில். பெண்களின் நிலை இதைவிட மோசமானது. அங்கும் அவர்கள் மனித உற்பத்திச்சாலைகளாகத்தான் திகழ்ந்தனர். ஒழுக்கம் சிறிதுமின்றி காட்டுமிராண்டிகளாகவே காலத்தைத் தள்ளினர். இது 18-ம் நூற்றாண்டில், இன்று அகில உலகிற்கே மனித நாகரீகத்திற்கு வழிகாட்டும் இங்கிலாந்தில் இருந்த சிறைச்சாலைகளின் பயங்கரமான நிலை.

குற்றம் செய்தவனுக்கு தண்டனை. அதில் பாகுபாடோ முறையோ கிடையாது. சிறைச் சென்றவன் ஒருமுறை குற்றம் செய்தவன் மீண்டும் மக்கள் முன்னிலையில் உலாவ தகுதியற்றவனாக்கப்பட்டான். சர்க்காரால் நடத்தப்படும் சிறைச்சாலைகளில் சிறையின் அமைப்புமுறை அங்கு நடைபெறும் கோரச் சம்பவங்கள் இவற்றை நினைத்தால் நெஞ்சு வெடித்துவிடும். ஆட்சிப்பீடத்தார் சிறையில் அடிவைக்க அஞ்சுவார்கள்.

குற்றம் செய்தவர்களைத் தண்டிக்க வேண்டும்; அதனால் மேலும் பல குற்றங்கள் நாட்டில் நடைபெறாமல் தடுக்க முடியும் என்பதை உணர்ந்த ஆட்சியாளர்கள், குற்றம் செய்தவன் திருந்தி மீண்டும் அவன் உத்தமனாக வாழ வேண்டும் என்பதை உணராமலிருந்த காலமது. சிறை குற்றவாளிகளின் இருண்டஉலகம்; அதிலே அவர்கள் நடைப் பிணங்கள்.

இந்த நிலைமையை மாற்றிசிறையைச் சிங்காரச் சோலையாக மாற்றினாள் எலிசபெத்பிரை என்னும் ஆங்கிலப் பெண்மணி. மனித சமுதாயத்திலே கீழானவர்கள் கயவர்கள் உயிரென்று ஒன்று இருந்தால் போதும் வேறெதுவும் இதுகளுக்குத் தேவையில்லை என்று ஒதுக்கப்பட்ட மக்களாகிய கைதிகளின் மடமையை நீக்கி பகுத்தறிவு தந்து நடைப்பிணங்களை நல்லவர்களாக்கும் ஓர் சிறந்த பகுத்தறிவுப் பாசறையாக மாற்றினாள் சிறையை. அவளது சீர்திருத்தத்தை வரவேற்றது அறிவுடைய உலகம். சிறையில் இருந்தவர் அவள் பெயரைத் தங்கள் இதயகீதமாக ஒலித்தனர். பெண்கள் அவளை ஓர் கண்கண்ட தெய்வமாக வாழ்த்தினர்.



பன்மொழிப் புலவர்
கா. அப்பாத்துரை
எம். ஏ., எல். டி.,

1797-ம் ஆண்டு எர்ள்ஹாம் மண்டபத்தில் (Earlham Hall) ஒரு நாள் மாலை தன் உடன் பிறந்த பதினொருவரின் வேண்டுகோளையும் உதறித் தள்ளி அதற்கு முன் நாள் தான் கேட்ட சிறந்த அமெரிக்க பிரச்சாரகரின் உண்மை தத்துவங்களைச் சிந்தித்து தானும் மனித சமுதாயத்திற்கு உழைக்க கடமைப்பட்டவள் என்பதை உணர்ந்தாள் 17-வயது நிரம்பப் பெறாத பாவை நல்லாள் எலிசபெத் கர்னி (Elizabeth Gurney) தந்தை கர்னி ஓர் செல்வந்தர், பாங்கர், வாழ்க்கையில் வரட்சியே காணாத இன்ப ஊற்று அவர்களது குடும்பம். அவைகளைத் துச்சமென மதித்துத் தள்ளி சமுதாயப் பணிக்கு முன் வந்தாள் எலிசபெத்.

கிருஸ்தவர்களில் ஆலயத்திற்குச் சென்று ஆண்டவனை வழிபடுவதே தங்கள் தொழில் எனக் கொண்ட ஓர் வைதிகப்பிரிவை (Quqkers)ச் சேர்ந்தவள். அவனன்றி அணுவும் அசையாது எல்லாம் அவன் செயல். ஏன் என்றாலும் எதற்கு என்றாலும் கடவுள் ஆக்கினைக்கு ஆளாகப்பட்டு நரகத்தில் நெருப்பாற்றில் தள்ளப்படுவோம் என்ற நம்பிக்கையில் கண்மூடித்தனமாக வாழ்ந்த வகுப்பைச் சேர்ந்தவள்.

எலிசபெத் ஆடம்பரத்தை விடுத்து எளிய வாழ்க்கையை மேற்கொண்டாள். 70 சிறுவர்களைக் கொண்டு ஓர் சிறிய பள்ளியை நடத்தினாள். ஏழைகளையும் நோயுற்றவர்களையும் அணுகி உதவிச் செய்யலானாள். தந்தை கர்னியின் வேண்டுகோளுக்கிணங்க ஜோசப் பிரை என்பவரை தன் சமூகத் தொண்டினைத் தடைசெய்யக்கூடாது என்ற நிபந்தனையின் பேரில் மணம் செய்துக்கொண்டாள்.

பொதுமக்கள் அவள் உழைப்பை உணர்ந்து ஐலிங்டன் ஏழைகள் தொழிலகத்திற்கு (Islington work house for poor) பார்வையாளராக்கினார்கள். 1811-ல் மக்கள் சார்பில் பொதுத் தொண்டில் மந்திரியாக கௌரவிக்கப்பட்டு ஏழைச் சிறுவர்களுக்கு உடை, உணவு, கல்வி, வைத்தியம் முதலியவைகளை இலவசமாக அளிக்க பல நிலையங்களை ஏற்படுத்தினாள்.

இந்த நேரத்தில்தான் சிறைகளின் அவலநிலை அவளதுகவனத்தைக்கவர்ந்தன. 1813-ல் நியுகேட் (New Gate) சிறையைப்பார்வையிடநேரிட்டபோது அங்கே கண்ட காட்சிகள் அவள் இதயத்தைத் தாக்கின. இரக்கமெனும் ஒரு பொருளிலா அரக்கியல்ல அவள், இரக்கத்தின் எல்லை (Genius of Mercy) என்று பிற்காலத்தில் உலகத்தோரால் பாராட்டப்பட்டவள்.

ஆகவே சிறையில் மறுமலர்ச்சி காண அவள் மனம் தூண்டியது. சிறையில் அவளது முதல் சந்திப்பை F. A. பியூமன் (F. A. Beaumont) என்னும் அறிஞர் நெஞ்சுருகும் முறையில் விளக்குகிறார். சிறையில் இருந்த பெண்கள் அவளைக் கண்டதும் மிரண்டனர். சிலர் அவளைச் சூழ்ந்து கொன்றுவிடுவதைப் போல் பார்த்தனராம். இரு பெண்கள் பெண்புலிகளைப் போல் ஒருவர் மேல் ஒருவர் பாய்ந்து அடித்தும் புடைத்தும் நகத்தால் இரத்தம் ஒழுகக் கீறியும் சண்டை செய்துக் கொண்டிருந்தனர். நோய் தாங்க மாட்டாமல் கதறினாள் ஒருத்தி. தன் அருகில் விளையாடிக்கொண்டிருக்கும் குழந்தைக்குப் போடுவதற்காக, இறந்த குழந்தையின் மேலுள்ள சட்டையைக் கழற்றிக்கொண்டிருந்தாள் வேறொரு பெண். இதனைக்கண்ட பிரையின் மனம் உருகியது. ஓடிச் சென்று களங்கமற்று விளையாடும் அந்தக் குழந்தையை வாரியெடுத்து மார்போடணைத்துக்கொண்டாள். துக்கம் மேலிட்டவளாய் அந்தத் தாய்மார்களை நோக்கி உங்களைப் போல நானும் ஓர் தாய். நீங்கள்தான் வாழமுடியாதவர்களாக ஆக்கப்பட்டுவிட்டீர்களென்றால் நீங்கள் பெற்றெடுத்த களங்கமற்ற குழந்தைகளுமா இந்தத் தண்டனையை அடைய வேண்டும்? அவர்களும் கொள்ளைக்காரர்களாகவும், கொலைக்காரர்களாகவும் வாழவேண்டுமென்பது உங்கள் விருப்பமா? இதற்கு மாற்றமில்லையா? என்று அவர்கள் மனமிளகும்படி கேட்டாள்.

இந்தக் கேள்விகள் அவர்கள் உள்ளத்தை வேல்கொண்டு தாக்கின. தங்கள் நிலையை உணர்ந்தனர், வருந்தினர். தாங்கள் அழிந்தாலும் தங்கள் சந்ததியாவது மனிதர்களாக வாழவேண்டுமென்று கருதினர். பிறகு அவளை நெருங்கி முழந்தாளிட்டு அவளது உடையையும் கரத்தையும் முத்தமிட்டு கண்கலங்கி அவரவரது சோகம் நிறைந்த வாழ்க்கை வரலாறுகளை விளக்கினர். அவளைத் தங்கள் வாழ்க்கையை உய்விக்கவந்த ஓர் புதிய தேவதை (A New Dante) என்று அவர்கள்வாய்முணுமுணுத்தன. அவர்களது நிலைக்கு வருந்திய எலிசபெத் பிரை அவர்களைக் குற்றவாளிகளென்றே கருதவில்லை. அவர்களும் மனித சமுதாயத்தில் மலர்ந்த் வாழ்வு வாழ முடியும் என்று நினைத்தாள். அவளது முடிவு இருண்ட சிறை வாழ்வை ஒளிவிடச் செய்தது. அவள் கருத்தை ஏற்றுக்கொண்டார் நியூகேட் கவர்னர்.

வெளியில் வந்த எலிசபெத் 12 பேர்கள் அடங்கிய ஓர் குழுவை ஏ[ற்]படுத்தி முழுநேரத் தொண்டில் ஈடுப[ட்]டாள். இந்த நேரத்தில் அவளுக்குப் பல குழந்தைகள் பிறந்து குடும்பப் பொறுப்பு அதிகம் இருந்தது. அவை களைப் பொருட்படுத்தாது சிறைச் சீர்திருத்தத்தில் முனைந்தாள். கைதிகளை குற்றத்திற்கேற்றவாறு பிரித்து பெண்களைத் தனியாக ஓ இடத்தில் வைத்தாள். பைத்தியக்காரர்களை வேறொரு இடத்தில் விட்டாள்; ஒழுக்க முள்ளவர்களாக வாழ உபதேசம் செய்தாள்.

சிறையை ஓர் சிறந்த தொழிற்சா[லை]யாகவும் ஒற்றுமையுள்ள கு[டும்]பத்தைப் போல அமைதி நிலவச் செ[ய்]தாள். இவையனைத்தும் நடக்கக்கூடி[ய] காரியமா என்று எள்ளி நகையாடி[ய] அந்நாட்டு ஷெரிபுகள் பிறகு வெட்கி தலைகுனிந்தனர். இவைகளை மு[ன்]னின்று நடத்த 1817-ல் சிறைச் சீ[ர்]திருத்த சங்கத்தை நிறுவினாள்.

அதிகார மமதையாளர்கள் செ[ய்]யாத ஓர் சிறந்த காரியத்தை முத[ன்]முதலில் செய்தாள் எலிசபெத் பிரை. பேச்சுக் கலையில் தேர்ந்த இவள் [மக்]கள் கவனத்தைக் கவர்ந்தாள். 1818-[ல்] ஸ்காட்லாந்திலுள்ள ஓர் சிறையைப் பார்வையிட்டு அங்கே கைதிகள் சித்[ர]வதை செய்யப்படுவதைக் கண்டு கலங்கினாள். இவைகளைக் குறித்து ஓர் பு[த்]தகம் வெளியிட்டாள். இந்தச் சீர்திரு[த்]தத்தைப்பொதுமக்கள்மன்றம்(Hous[e] of commons) ஏற்றது. பிறகு ஸ்காட்லாந்து, இங்கிலாந்து, அயர்லாந்[து] முதலியஎல்லாநாடுகளும்பின்பற்றின.


1820-ல் ரஷ்ய நாட்டு டவ்கர் அர[சி] Dowager Empress of Russia பிரையின்சீர்திருத்தத்தை அமுலுக்குக் கொண்டுவந்தாள். மற்ற நாட்டு அரசியலார் பிரையின் உதவியை நாடினர். 1838-ல் பிரான்ஸ், சுவிட்சர்லாந்து, பிரஷ்யா, ஹாலந்து, பெல்ஜியம் முதலிய நாடுகளில் சுற்றுப் பயணம் செய்து தன் கொள்கையைப் பரப்பினாள். ஜெர்மனியில் கெய்சர்வர்த் (Institute of Kaiserwerth) நிலையத்தைப் பார்வையிட்டு அங்கே தன் கொள்கையைப் பரப்பினாள். ஓய்வின்றி உழைத்ததினால் பலம்குன்றி 1845 அக்டோபர் 12-ந் தேதி தனது 65 வது வயதில் இயற்கை எய்தினாள்.

அன்று அவள் செய்த சீர்திருத்தத்தின் அடிப்படையில்தான் இன்றுள்ள சிறைச்சாலைகள் இருக்கின்றன.


இருண்ட சிறையில் யாதொரு செயலுமின்றித்தனியாகவைப்பதினால் மனித உள்ளத்தில் எழும் உணர்ச்சிகளைத் தடுத்து உடல் நலங்குன்றி, வாழும் உளுத்த சமுதாயத்தை நாமே உண்டாக்கிய பெருங்குற்றத்திற்கு ஆளாகக்கூடாது என்று கருதினாள் எலிசபெத் பிரை.

பல வைதிக வல்லூறுகள் தாக்கியும் அரசியல் எத்தர்கள் எதிர்த்தும் அஞ்சாது தன் லட்சியமே மூச்சாக நின்று மனித சமுதாயத்திற்கு மகத்தான ஓர் தொண்டு செய்த எலிசபெத் பிரை போல் பல பெண்கள் நம் நாட்டில் சமுதாயப்பணிக்குமுன் வரவேண்டும் இதனை உலகம் எதிர்பார்க்கிறது.


# தி. மு. கழக மாவட்ட மாநாடுகள்



திருப்பத்தூர் (வ. ஆ.)
பேச்சுரிமை—எழுத்துரிமை
மாநாட்டில் நம் இலட்சியக்
கொடி



கணியூரில் நடைபெற்ற கோவை மாவட்ட
தி. மு. கழக முதல் மாநாடு: அர்ச்சுனன்
பந்தலின் முகப்பலங்காரக் காட்சி



திருப்பத்தூர் (வ. ஆ.)
பேச்சுரிமை — எழுத்துரிமை
மாநாட்டுப் பந்தலின்
முகப்புத் தோற்றம்




திருப்பத்தூர் (வ. ஆ.)
பேச்சுரிமை-எழுத்துரிமை
மாநாட்டில் தோழர் ஈ. வெ. கி.
சம்பத்




ஈழத்து அடிகள் பி.எ.



திருப்பத்தூர் (வ. ஆ.)
பேச்சுரிமை-எழுத்துரிமை
மாநாட்டில் பொதுச்
செயலாளர் அண்ணு



திண்டிவனம் சமூக சீர்திருத்த மாநாடு: நாகம்மையார் பந்தலின்
வாயிற்புறக் காட்சி



இரா. சண்முகம்
(இயக்கப் பாடகர்)

# திராவிடப் பெண்கள் முன்னேற்றக் கழகம்

[ஓராண்டுப் பணி]

[அலமேலு அப்பாதுரை]

சமுதாயத்தில் பெண்களுக்குச் சரியான உரிமைகள் வழங்கப்படாமல் இருக்கும் நிலைமையை மாற்றுவதற்காகச் சட்ட மந்திரி டாக்டர் அம்பேத்கார் பெண் இனத்தின் நன்மைக்காகவும், பெண்களின் பாதுகாப்புக்காகவும், இந்துச் சட்ட திருத்த மசோதா ஒன்றை டில்லி சட்டசபையில் கொண்டு வந்தார். அதுபோது சீர்திருத்தம் என்றாலே சீறிப்பாயும் வைதிகபுரியினரும் பெண்களை அடிமையாக்குவதற்கென்றே சமுதாயத்திலே சட்டங்கள் வகுத்த முப்பிரியினரும், மசோதாவைக் கண்டித்தார்கள். அவர்களுக்குச் சாதகமாக ஆரிய வட்டாரத்து செய்தி தப்பட்டைகளும் ஒலிக்க ஆரம்பித்தன.

இந்நிலையில் பெண்களுக்காக கொண்டு வரப்படும், மசோதாவை பெண்கள் பெரு வெற்றியுடன், ஆதரிக்கிறார்கள் என்று காட்டுவதற்காக அறிஞர் அண்ணாவின் முயற்சியால், சிங்காரச் சென்னையிலே இந்து சட்டத் திருத்த மசோதா மாநாடு என்ற சிறப்பிலே, பெண்கள் சார்பாக கோக்கலே மன்றத்தில் ஒரு கூட்டம் பெருமளவிலே கூட்டப்பட்டது. அன்று ஏராளமான தாய்மார்களும், பள்ளி, கல்லூரி மாணவிகளும் நிறைய குழுமி இருந்து ஆதரவு காட்டினர். அன்றைய எழுச்சியின், விளைவாக மசோதாவை ஆதரித்துப் பேசிய மாண்பு மிக்க மங்கையர்களின் வீர முழக்கத்தின் எதிரொலியாக அறிஞர் அண்ணாவின் ஆலோசனைக்கு இணங்க திராவிடப் பெண்கள் முன்னேற்ற கழகம் என்ற தனி, அமைப்பைக் காண ஆர்வம் உண்டாயிற்று.

அதையொட்டி, உறுப்பினர் சேர்க்கும் வேலையில் ஈடுபட்டு, பிறகு 17—12—50 மாலை 2 மணி அளவில் சென்னை திருவல்லிக்கேணி, அருணாசல ஆசாரி தெரு, 13-ம் எண் இல்லத்தில், டாக்டர் தருமாம்பாள் தலைமையில் கூடிய செயற்குழு கூட்டத்தில் திராவிட நாட்டின் சமூகம், பொருளாதாரம், அரசியல் முன்னேற்றத்துக்கும், திராவிடப் பெண்கள் நன்மைக்கும் உழைக்கும் கருத்துடைய திராவிடப்பெண்கள் அனைவரையும் ஒன்று சேர்த்து, திராவிட நாட்டின் விடுதலைப் பணியில் பாடுபட, திராவிடப்பெண்கள் முன்னேற்றக் கழகம் தோற்றுவிக்கப்பட்டது. பின்வருமாறு செயற்குழு அமைக்கப்பட்டது.

**செயற்குழு உறுப்பினர்கள்**

செயலாளர்: தோழியர் அலர்மேலு அப்பாதுரை, பொருளாளர்: தோழியர் சத்தியவாணி முத்து, துணைச் செயலாளர்: தோழியர் எயினி லாரென்ஸ், விளம்பர உறுப்பினர்: தோழியர் பூங்கோதை.

**ஏனைய செயற்குழுவினர்:**

தோழியர்கள் இராணி அண்ணாத்துரை, மூவலூர் இராமாமிருதத்தம்மையார், டாக்டர் தருமாம்பாள் அம்மையார், இராஜம் பார்த்தசாரதி, புவனேஸ்வரி நடராசன், நாகரெத்தினம் கோவிந்தசாமி, மனோரஞ்சிதம், அருண்மொழி பி. ஓ. எல்., எஸ். ஜோதீஸ்வரி அம்மையார், நீலாம்பிகை அம்மையார், கலையரசி இறையண்ணல், பேபி அம்மாள், இராமதிலகம், ஜி. சரோஜா. காவேரி சப்பந்தம். நாகவல்லி ஷண்முகம், மதுராம்பாள் குஞ்சிதபாதம், இராஜம் பட்டாபி, அபிராமி மணமொழியார்.

பொதுக்குழு உறுப்பினர்கள்—ஏறத்தாழ இருநூறு பேர். அன்று 23 செயற்குழு உறுப்பினர்கள் வந்திருந்தனர். அமைப்பாளராக இருந்த தோழிர் அலர்மேலு அப்பாதுரை மேற்கண்டவாறு செயலாளராகவும், புலவர் எயினலாரென்ஸ் துணைச் செயலாளராகவும், சத்தியவாணிமுத்து பொருளாளராகவும் பூங்கோதை விளம்பர உறுப்பினராகவும் பணி செய்வதென முடிவு செய்யப்பட்டது. பிறகு துவக்க விழா நடப்பதைப் பற்றி ஆலோசனை செய்து, 21—1—51-ம் தேதியன்று சிறந்த முறையில் சென்னையில் துவக்க விழா நடத்துவதெனவும், அதற்கு தோழியர் வி. டி. ஆதிலட்சுமி அம்மையாரை தலைமைவகிக்க அழைப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது.

**துவக்கவிழா**

21—1—51 ஞாயிறு அன்று மாலை 4 மணி அளவில் கழகத் துவக்கவிழா சென்னை கோக்கலே மன்றத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. ஏராளமான தாய்மார்களும் பள்ளி, கல்லூரி மாணவிகளும் குழுமி இருந்தனர். திராவிடப் பெண்களின் வீர முழக்கத்தைக் கேட்க ஏராளமான தோழர்களும் வந்திருந்தனர்.

திராவிட நாட்டுப்பண்பாடிய பிறகு செயலாளர் தோழியர் அலமேலு அப்பாத்துரை பெண்கள் முன்னேற்றக்கழகம் தவக்குவதற்கான காரணங்களை விளக்கிக்கூறி விழா
வைத் தலைமை வகித்து நட
தித் தருமாறு தோழியர் ஆதி
லட்சுமி அம்மையாரைக் கேட்
டுக் கொண்டார். டாக்டர்
தருமாம்பாள் அம்மையா
அவர்கள் திராவிட முன்னே
றக் கழகக் கொடியைஉயர்த்
வைத்தார்கள். தோழிய
இராசாணி அம்மையா
அன்னை ஈ. வே. ரா. நாகம்ம
யாரின் திரு உருவப்படத்தை
திறந்து வைத்தார்கள்.

தலைமை வகித்த திருவாட்
வி. டி. ஆதிலட்சுமி அம்
யார் உணர்ச்சியும், உற்சா
மும் பொருந்திய நீண்டதொ
சொற்பொழிவாற்றிய பி
தோழியர்கள், இராமதில
பூங்கோதை, அருண்மொழி
ஓ. எல். புலவர்எயினிலார
மூதாட்டி இராமாமிருதத்
மையார், ஆகியோர் கழக
சியம் ஆட்சியாளரின் அ
முறைதர்பார் பெண்கள்
னேற்றம், நாட்டு நிலைமை
யவை குறித்து விரிவாக
விளக்கமாகவும், சொற்பெ
வாற்றினார்கள். திராவிட
னேற்றக் கழக முன்
வீரப் பேச்சாளரைப்போ
ஒவ்வொரு பெண்ணும்
முடியும் என்பதை அன்
கூட்டம் எடுத்துக் காட்டி
தலைவர் முடிவுரைக்குப்
னர் நன்றி நவில விழா இ
முடிவடைந்தது.

அடுத்த செயற்குழு கூட்
28—1—51 ஞாயிறு மா
4 மணிக்குக் கூடியது. துவ
விழா செலவுக் கணக்கு
பரிசீலிக்கப்பட்டன. சே
நெசவாளரின் நிலை குறி
ஆட்சியாளர் போதிய கவ
செலுத்தாதற்கு எச்சரிக்
விடுத்ததுடன், டில்லி மந்தி
கள் திராவிட நாட்டுக்கு வரு
போது கறுப்புக்கொடி பிடி
பது என்ற மத்திய குழுவின் தீர்மானத்தின்படி பெண்களும் தங்கள் பங்கைச் செலுத்துவதென முடிவு செய்யப்பட்டது. அதைப்போல மத்திய உணவு மந்திரி தோழர் முன்ஷி மற்றும் மகதாப், திவாகர் முதலிய மந்திரிமார்கள் வந்தபொழுதெல்லாம், ஏராளமான பெண்கள் கருப்புக்கொடி காட்டி வெற்றிகரமாக அத்திட்டத்தை நிறைவேற்றினார்கள். மத்தியசெயற்குழுவினர் செய்யும் ஒவ்வொரு செயலிலும், முழு ஆதரவை அளித்து வந்திருப்பதுடன் பொதுக்கூட்டங்கள், மாநாடுகள், திருமணங்கள் ஆகியவற்றில் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றி வருகிறார்கள்.

தாய்மார்களே, பெண்
களின் அமைப்பைப் ப
படுத்த, நம் பெண் இன

(16-ம் பக்கம் பார்க்க)

## அல்லல் தீர்வதெந்நாள் ?

(புதுவைச் சிவம்)

'பாடுபல பட்டதனால் உரிமை யெல்லாம்
படைத்துவிட்டோம்! இதுநாளாய் நம்மைஏய்த்துக்
கேடுதந்த அந்நியரும் தொலைந்து போனார்!
கீழ்ப்படுத்தும் அடிமைஇனித் தலைகாட்டாது!
பீடுமிக, மக்களெல்லாம் வாழ்வோ' மென்றே
பேசிவந்த ஆட்சியினர் பிழையே செய்தார்!
நாடெங்கும் வெறுக்கின்ற கொடுங்கோல் தன்னை
நலமுடைய செங்கோலாய்த் தழுவிவிட்டார்!

சுதந்தரமே பெற்றுவிட்ட நாட்டில் மக்கள்
சொல்லவொண்ணாத் துயரெய்தி வாடுகின்றார்!
இதப்பெறலாம் இனியென்றே மகிழ்ந்தமக்கள்
இயப்பிடவும் முடியாத வறுமை கொண்டார்!
சதமெனவே நம்பியதம் மக்கள் தம்மைச்
சந்தையிலே விலைகூறி விற்கலானார்!
கதியற்ற நிலைகண்டு கலங்கி, மேலும்
காணாத நூதனங்கள் காணுகின்றார்!

பேசிடவும் எழுதிடவும் உரிமையில்லை!
பிழைபுசெய்தால் ஆட்சியினர், எடுத்துக்காட்டி
நாசநிலை தவிர்த்திடவோ யாருமில்லை!
நற்குடிகள் அக்குறையை எடுத்துச் சொன்னால்,
வீசுகின்றார் அடக்குமுறைச் சட்டந்தன்னை
வெஞ்சிறையைக் காட்டுகின்றார்! இம்சிக்கின்றார்!
'பாசிசமுப் தேவலை' என்றுரைக்கும் வண்ணம்
பாழ்பதிகொண் டாழ்குழியை நாடுகின்றார்.

தன்சொந்த நாட்டினிலே உரிமையற்றுத்
தாளாத வறுமையினால் துடிதுடித்தே,
'என் செய்வோம் இனி!' என்றே ஏங்கிஏங்கி
இடிந்துள்ளம் சோர்கின்ற மக்கட் கூட்டம்
ஒன்றுண்டிவ் வுலகினிலே என்று சொன்னால்,
ஒப்பற்ற நிலைபெற்ற திராவிடத்தில்
அன்றி உரைத்திடவேறு நாடுமுண்டோ?
அல்லலெலாம் தீரும்நாள் எந்த நாளோ ?

# புதியதோர் உலகுசெய்வோம்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

ண்டதுண்டு! இங்கும்—இப்போது அந்த நிலை இல்லை என்று கூறிட முடியுமா? இல்லை...இல்லை இப்பாரதத்திருநாட்டில் அந்த அவலநிலை இல்லவே இல்லை என்று கூறி வாதுக்கழைப்போருக்கு......இன்று நீதி மன்றங்களை நோக்கி வரும் ஆயிரக்கணக்கான விபசார வழக்குகளை சாட்சியாகக் காட்டுகிறேன். வறுமையின் கொடுமையால்...அந்த நிலையினின்று விடுபட்டுக்கொள்ள...தூக்குக் கயிற்றை துயர்துடைக்கும் கருணை மூர்த்தியாகக் கொண்டு அதிலே ஊஞ்சலாடிய பேர் எத்தனை எத்தனையோ—பிரான்சிலேபுரட்சி அரும்புவிடுவதற்கு முன்பு நிலைமை இப்படித்தானிருந்தது! இங்கும் எத்தனையோ நாராயணிகள் வறுமைக் கொடுமையை ஒழித்துக் கொள்ள தூக்குக் கயிற்றிலே ஊஞ்சலாடி வருகிறார்கள்-இன்று குழியிலிருந்து பிணத்தை எடுத்துத் தின்னும் அளவுக்கு வறுமை வேகமாக வளர்ச்சியடைந்து வருகிறது! மாளிகைச் சீமானின் கிடங்கிலே உணவுத் தானியங்கள்மூட்டை மூட்டையாக பதுக்கப்பட்டிருந்தன—பாசமிகக் கொண்ட காரணத்தால் தான் மோச வலையால் சிறைபிடிக்கப் பட்டிருக்கிறோம் இன்று!

உயர் ஓவியத்தைத் தீட்டிடும் சித்திரக்காரன்...படமெடுத்தாடும் பாம்பையும்; பாயும் பாவனையிலுள்ள புலியையும், சீறும் சிங்கத்தையும், அப்படி அப்படியே அதன் அதன் நிலையிலேயே மிக அழகாக காண்பவர் கருத்தை ஓவியத்தின் பக்கம் இழுத்திடும் முறையிலே தீட்டிக் காட்டிட முடியும்! ஆனால், படமெடுத்தாடும் நாகத்தையும்; பாயும் புலியையும்; சீறும் சிங்கத்தையும் நேரிலே காணும் போது இலக்கியக் கண்ணோட்டத்தோடு, ஓவிய உள்ளத்தோடு அந்த சித்திரக்காரன் கண்டு ரசிக சிகாமணியாக நிலை குலைந்து கலைச்சிகரத்தின் உச்சியிலே சிலையாக நின்று கொண்டிருக்கமாட்டான். சந்து பொந்து தேடி ஓடுவான் அந்த விஷஜந்துகளிடமிருந்து தப்பித்துக் கொள்வதற்காக! இதைப்போல தான் இந்திய சமஷ்டி; பாரதபூமி; ஏக இந்தியா என்றெல்லாம் பேசுவதும்; தீட்டுவதும் கேட்க—படிக்க அழகு—நாலு ஆண்டுகளாக நம்மையும் சேர்த்துத்தானே அவர்கள் ஆண்டு வருகிறார்கள்! என்ன சுகத்தைக் கண்டோம். இனிமேலாவது அவர்கள் நல்லது செய்வார்களென்பதற்கு ஒரு துளியேனும் காரணம் காட்டிட முடியுமா? ஆளவந்தவர்கள் மக்களை மாளவைத்து வருவதைத்தானே கண்டு வருகிறோம்.

எத்தனை முறை துப்பாக்கி வேட்டுச் சத்தத்தால் இந்த நாட்டு மக்களை அடக்கி வந்திருக்கிறார்கள்? பாரத மாதாவின் விலங்கொடித்த வீரர்கள் ...எத்தனை பாவையரின் மஞ்சள் கயிறுகளை அவர்கள் நெஞ்சிலிருந்து அறுத்து விட்டிருக்கிறார்கள்...ஏன்? சேலம் சிறையிலே மாண்ட மாணிக்கங்களை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். ஒரு பாரதமாதா கண்ணீர் விடுகிறாளென்ற காரணத்துக்காக செந்நீர் இந்திய இந்த தேசபக்தர்களின் ஆட்சியிலேதான்...அன்றைய சேலம் சம்பவத்தின் மூலம் மட்டும்...23, பாரத மாதாக்கள் மூலையிலே அமர்ந்தனர்—திக்கற்ற நிலையிலே! நல்ல வேளையாக துப்பாக்கி தூக்கி சரியாகக் குறிவைத்துச் சுடத்தெரியாதவர்கள் ஆட்சியிலே வாழ்கிறோம்......இல்லையென்றால் குன்றத்தூரிலே பல ரவுண்டுகள் சுட்டும் யாரும் மாண்டு போகாமலிருக்கமுடியுமா? வேட்டுச் சத்தம் சிங்குகள் தூக்கப்பட்டு; விசுவநாததாசுகள் வெள்ளைக் கொக்கு விரட்டி; சுந்தராம்பாள்கள் ஆடுராட்டே பாடி அந்தப் பாட்டுக்குப் பாவம்பிடித்து குமாரி கமலாக்கள் ஆடியதெல்லாம் நாடு காடு ஆகிக்கொண்டிருக்கும் இன்றைய போக்கை வேண்டித்தானா? சுப்புலட்சுமிகள் அன்று மேடைக்கு மேடை பாடினார்களே என்று தணியுமெங்கள் தாகம்...இந்த அடிமை...... என்றெல்லாம்! இன்று அந்தச் சுதந்தர தாகம் அவர்களுக்கெல்லாம் அடங்கிவிட்டதா? அடிமை—மோகங்களெல்லாம் இந்த நாட்டைவிட்டு அகற்றப்பட்டுவிட்டனவா? இந்த நாட்டுக்கு வரப்போகிற சுதந்தர வைபவங்களை எண்ணி எண்ணி யாரார் எந்தெந்த தியாகங்கள் செய்தார்களோ அவர்களிலே இறந்தவர்கள் போக மீதமிருப்பவர்கள் இன்றைய சுதந்தர சுகவாழ்வை எண்ணி எண்ணி கண்ணீர் சிந்தாத வேளை இல்லை!

இந்த நிலையிலும் நாம் அவர்களோடு கட்டுப்பட்டுத்தானிருக்க வேண்டுமென்பதற்கு எவ்வித நியதியுமில்லை என்பதோடு வாழவகையிருந்தும் மாளப் பிறந்தவர்களாக நாம் ஆக்கப்பட்டு வருவதை எப்படி ஒப்ப முடியும்?

## இயக்க மாநாடு, கூட்டங்களில் பங்குகொண்ட இசைவாணர்கள்



இசைச்செல்வி

ஜி. கஸ்தூரி

★



இசையரசு

எம். எம். மாரியப்பா

★



இசை முரசு

நாகூர். ஈ. எம். அனிபா

...யி ஆட்சியிலும்; சார் ஆட்சியிலும்; ...யாங் ஆட்சியிலும்! அந்த நிலை நேரு ஆட்சியிலுமிருக்கிறது உண்மைக் காங் ...ரஸ்வாதிகளே கண்ணீர் விடவேண்டிய அளவுக்கு...குறிப்பாக நகர்ப் ...பார்வையில் உலவுபவர்களின் கிடங்குகளிலேயே மூட்டைகள் பதுக்கப்பட்டிருப்பது...வேதனை தருவது மட்டுமல்ல நமக்கு; வெட்கப்படவேண்டும் ஆளுங் கட்சியினர் இதைக்கண்டு!

இரத்தினச் சுருக்கமாகக் கூற வேண்டுமானால் எல்லா வகையிலும் இந்த நாடு புரட்சிக்கான வழி வகைகளைத் தூண்டிவிடுவதாகவே அமைந்திருக்கிறது! வளரும் புரட்சி அராஜகத்தின் துணையாலோ; அறப்போர் முறையாலோ இயங்குமாவென்றால் அதற்கான தெளிவு விளக்கம் இப்போது நம்மால் கூறிட இயலாது... அது மக்கள் மன வளர்ச்சியைப் பொறுத்தது!

என்றாலும் நம்மைப் பொறுத்தஅளவிலே தொல்லை நிலையிலிருந்து விடுபட்டுக்கொள்ள வேண்டுமானால்... ...ஞ்சகப் போக்கில் பயணம் செய்யும் ...வராட்சியிலிருந்து துண்டித்துக் ...ண்டால்தான் முடியும்! கூடா—வடவர் நேசம்! அவர்களிடமாக இருக்கலாம்! இந்தியா என்று நாலாறு வர்ணத்திலே தேசப் படத்திலே... குமரி முனையிலிருந்து—இமயம் வரை ஒன்றாகத்தீட்டிக் காட்டி ஏக இந்தியா என்று பெருமைப் படலாம் பூரிக்கலாம்... ஓவியக்காரன்நாகத்தையும், புலியையும் திரையிலே தீட்டிவிட்டுத் தானும் மகிழ்ந்து பிறரையும் அந்நிலைக்கு இழுத்து விட்டதைப் போல! ஆனால் அது நடைமுறைக்கு ஒவ்வாதது! தேசப் படமானால் விட்டுவிடலாம்... ஆனால் ஏக இந்தியாவாகவே யிருந்து நடைமுறைத் திட்டத்தில் இறங்கினால்...... வேதனையையும், விபரீதத்தையும் கண்டு தீர்க்கத்தான் வேண்டும்! இந்தியா ஒன்று! அதிலே பிரிவினை நோம் பாடக் கூடாதென ஆர்ப்பரிப்பு செய்வோர் இதை ஆர அமர யோசிக்கத்தான் வேண்டும், முரடனிடம்—முல்லைச் சிரிப்பழகியை வாழ விடுவது போல......இளமையும் எழிலும் துள்ளிக் கொண்டிருக்கும் வளமிகு திராவிடத்தை... வக்ர புத்தி படைத்த ஆக்ரமிப்பாளரான வடநாட்டானோடு துணை அழைத்தால் எந்த நீதியை முன் வைத்து இதை ஒப்புக்கொள்ள முடியும்? ஒரு நாளல்ல இரண்டு நாளல்ல அந்நியன் ஆட்சியிலே கேட்டுக்கொண்டிருந்தது...அது இன்று நம்மவர் ஆட்சியிலும் ஒப்ந்தபாடாக இல்லையே! பஞ்சமும்; லஞ்சமும் ஒன்றையொன்று போட்டி போட்டுக்கொண்டு முன்னேறுகின்றன! சிறைச்சாலையோ பெருத்துக் கொண்டே போகிறது... இருக்கிற கைதியை பாதிக் தண்டனையிலேயே வெளியே தள்ளிவிட்டு புதுக் கைதியை வரவேற்கிற அளவிலே! துப்பாக்கியும்; பீரங்கியுமல்லவா இன்று இந்த நாட்டை ஆண்டு வருகிறது-ஜனநாயகமும்; மக்கள் சக்தியுமல்லவே! இதுதானா காந்தியார் கண்ட கனவு! இதற்காகத்தானா நேரு—பட்டேல்கள் உழைத்து உருக்குலைந்தது! தடியடியால் மண்டை பிளக்கப்பட வேண்டும் குடியரசு நாட்டில் யாராவது பிரஜா உரிமையைக் காப்பாற்ற எத்தனித்தால்...என்ற இந்த நிலைக்காகவா குமரன் திருப்பூர் வீதியிலே குண்டாந்தடியால் அடிபட்டு மாண்டான்? குமரனின் மண்டையைப் பிளந்த அதே குண்டாந்தடி ஜனநாயகத்தைக் காக்க விழையும் இன்றைய இளைஞர்கள்மீது வீசத்தானே படுகிறது!

சிதம்பரங்கள் செக்கிழுத்து, பகவத்...

அயர்வு தட்டிப் போயிருக்கும் நமக்கெல்லாம் சோர்வு நீக்கி, நம் நிலையை நினைவுபடுத்தி ஆக்கப் பணியிலே செயல் வீரர்களாக நம்மையெல்லாம் கொண்டுபோய் அணிவகுத்து வைக்கும் நாட்டின் நல்வழி காட்டியாக இன்று திராவிடர்முன்னேற்றக்கழகம் வேகவேகமாகப் பணியாற்றி வருகிறது! வடவராட்சி துண்டிக்கப்பட்டு திராவிடம் வளமாக விளங்குவதற்கென என்னென்ன செயல் முறைத் திட்டங்களுள்ளனவோ அவை யாவற்றையும் நடைமுறையிலே இயக்க வைத்து வருகிறது திராவிடர் முன்னேற்றக் கழகம். அதன் வளர்ச்சியில் இன்றோடு இரண்டு ஆண்டுகளாகியிருக்கின்றன......மகிழ்ச்சிச் செய்தி நமக்கெல்லாம். அதன் வருங்கால வளர்ச்சியில் எத்தனையோ இடைஞ்சல்கள் ஏற்படலாம் எத்தர்களின் லீலையால்...ஆனால் எதையுந்தாங்கும் இதயம் படைத்ததோர் கழகப் படையிலே அணி வகுத்திருப்பதால் கழக வளர்ச்சி வேகவேகமாக மலர்ச்சியடையத்தான் செய்யும், அதுதான் முறையுங்கூட!

# காங்கிரஸ் மரணப் படுக்கை

(ப. உ. சண்முகம்)

"என்னங்காணும்! ஸ்ரீமான் சொக்கலிங்கம் செட்டியாருக்கு ரொம்ப தடபுடலாயிருக்குதாமே!"

"ஆமாங்காணும்! நேத்திக்கு நான் கூடபோய்ப் பார்த்தேன்! அம்பாளுக்கு குளிர அபிஷேகம் செய்யச் சொன்னேன்! அவர் பிள்ளை உடனே நூறு ரூபாயைத் தந்தான்......."

"சொக்கலிங்கம் செட்டியார் மகா தர்மிஷ்டர்ங்காணும்...போன வருஷம் அவர் தகப்பனுருக்கு சிரார்த்தம் செய்தாரே! என்ன சமாராதனை அடாடா"!

"அதை ஏனையா ஞாபகப்படுத்துறேள்...இப்போ நினைச்சுண்டாலும் ஏப்பம் வருதுங்காணும். தருமவான்!.. எப்படியாவது அகிலாண்டேஸ்வரி அருளாலே பிழைச்சுண்டார்னு நம்



தி. மு. கழக சட்டதிட்டக் குழு செயலாளர் கே. ஏ. மதியழகன் பி. ஏ.

மவாளுக்கெல்லாம் ரொம்ப சௌகரியமாயிருக்கும்."

"அவர் படுக்கையிலே படுத்துட்டதும் இந்த நாஸ்திகக் கூட்டம் ரொம்ப வளர்ந்துட்டதுகாணும்...அவர் மட்டில் பிழைச்சுண்டார்னு இதுங்க வாலை நறுக்கிடுவாரே."

"என்னடா கந்தா சொக்கலிங்கம் செட்டி இப்பவோ இன்னுஞ் சற்று நேரத்திலோ என்றிருக்கானுமே' 'வட்டிக்கு வட்டி வாங்கி ஏழைகள் வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கிட்ட வினைபோகுமா! அதான் பத்து நாளா இழுத்துக்கிட்டு கிடக்கு."

"வர அமாவாசையிலே நிச்சயமா டிக்கட் வாங்கிடுவான்."

"அதிலென்ன சந்தேகம்."

"பாவி! வஞ்சகமாக ஏமாற்றி என் கற்பைக் குலைத்த துரோகி! அன்று நான் அழுதகண்ணீர் வீண்போகுமா? அதுதான் இன்று அவதியுறுகிறான்."

"இரக்கமில்லாத அரக்கன் ஒழியட்டும்."

இப்படியெல்லாம் மரணப் படுக்கையிலே கிடப்பவனைப் பற்றி ஊர் மக்கள் பலவிதமாக அவரவர்கள் அனுபவத்தைக் கொண்டு பேசக் கேட்கிறோம். இதேபோல் மரணப் படுக்கையிலே புரளும் காங்கிரசைப் பற்றி நாட்டிலே பல மூலைகளில் பேசக் கேட்கிறோம். அரிசிக் கடை முதல் அரசியல் மேடை வரையில் இதைப் பற்றிதான் பேசப்படுகிறது.

உணவின்றிவாடிடும் ஏழை, உழைப்பின்றி அலையும் தொழிலாளி நூலின்றி தவிக்கும் நெசவாளி சம்பள உயர்வின்றி தவிக்கும் உத்தியோகஸ்தர் ஓர் புறம்! அடக்குமுறைக்கு ஆளாகி அவதியுறும் அரசியல்வாதி! சிறைக் கம்பிக்குள் நின்று மீண்டும் வெளி உலகைக் காண்போமா என்று ஏங்கிய வாறே வழிந்திடும் கண்ணீரைத் துடைக்கவழி தெரியாது வாடிடும் பொதுவுடமை வாதி. சமுதாய புண்களைத் துடைக்க முற்பட்டால் அடக்குமுறை வீசுவதா என்று அலறிடும் சீர்திருத்த வாதி ஓர் புறம் நின்றுகொண்டு காங்கிரசின் மரணம் எப்போது நேருமென்று எதிர்பார்த்த வண்ணமிருக்கின்றனர்.

அதே நேரத்தில் கள்ளவியாபாரத்தில் கொள்ளை அடித்த முதலைகள், ஏற்றுமதி பர்மிட் வாங்கி லட்சத்தைக் கோடியாக்கிய ஆலையானைகள், லஞ்சம் வாங்கிடும் வஞ்சகர்கள். பதவிதேடிகள், வாழ்க்கையை வயணப்பாதையாக அமைத்துக்கொண்ட வீணர்கள் மற்றோர் புறம் நின்றுகொண்டு காங்கி




புலவர் கோவிந்தன்

ரசை பிழைக்க வைக்கும் திருப்பணியில் ஈடுபட்டுள்ளார்கள்,

இன்றைய காங்கிரசு ஆட்சியினால் ஏற்பட்டிருக்கும் வெறுப்பைக் காட்டலாமா அல்லது படை பலத்தைக்காட்டலாமா என்று தீவிரமா திட்டம்தீட்டிடும் தில..கள் புரிந்திட்ட திருவிளையாடல்களை மக்கள் மறக்கவில்லை ஆனாலும் அவர்களை நப்பாசை விட்டபாடில்லை

ஏழைகள் இரத்தத்தை முதலாளி முதலைகள் உறிஞ்சி கொழுக்கக் காரணமாயிருந்த இன்றைய ஆட்சியாளர்கள் மீண்டும் அதிகாரத்திற்கு வர திட்டங்கள் தீட்டுகிறார்கள். குழையும் ஏழையை சரிசெய்ய செல்வந்தர்களையும் குமுறுவோரை அடக்கிட சோதாக்களையும் துணைக்கொண்டு மீண்டும் அரியாசனம் ஏறிட ஆகாயக் கோட்டை கட்டுகிறார்கள். மக்களுக்காக மனித உருவில்லாத சில மாணிக்கங்கள் தங்கள் கண்ணீரையும் சென்னீரையும் ஊற்றி வளர்க்கப்பட்ட காங்கிரஸ் மக்களின் வெறுப்பையும் மாளிகை வாசிகளின் விருப்பையும் பெற்று மனிதப் பண்பற்ற சிலர் கையில் சிக்கி சீரழிந்துக்கொண்டிருக்கிறது. செல்வந்தர்கள் காங்கிரசை தங்கள் செல்லப்பிள்ளையாக தத்து எடுத்துக்கொள்ளும் அளவிற்கு அவர்களின் அபிமானத்தையும் ஏழைகள் வெறுக்கும் அளவிற்கு அவர்களின் வெறுப்பையும் இன்னலையும் காங்கிரஸ் சம்பாதித்துக் கொண்டுள்ளது என்றால் இந்த தயாநிதிகளின் ஆட்சித் திறனை என்னென்பது! இன்றைய ஆட்சியினால் வெறுப்புறாதவர்கள் இந்த நாட்டில் எவரேனும் உண்டென்றால் அது முதலாளிகள் கூட்டத்தைத் தவிர்த்து வேறுயாருமே இருக்க முடியாது! பத்திரிகைத் தொழில் நடத்துபவர்கள் முதற்கொண்டு பராரியாகி பட்டினியோடு வீதியில் அலையும் ஏழைத் தொழிலாளி வரையிலே உழவர்கள் முதற்கொண்டு இத்தியாகிகள் ஊரையாள 'உதவிய உத்தமர்கள் வரையில் அனைவரும் இன்றைய ஆட்சியை வெறுக்கத் துவங்கிவிட்டார்கள். இன்னும் விளக்கமாகச் சொல்லப்போனால் இத்தியாகிகளின் தோழர்களாக இருந்த பலரும் வெறுக்கத் துவங்கியுள்ளார்கள். 'காந்தி சீடர்கள் 'கர்ம வீரர்கள்' 'கேசரிகள்' என்றெல்லாம் மக்கட்கு அறிமுகம் செய்யப்பட்டவர்கள் பெரும்பாலோர், காங்கிரஸ் ஆட்சியால் மக்கட்கு நன்மை ஏற்படவில்லை' என்று கூறி வெளியேறி வேறு கூண்டமைத்துக் கொண்டதோடல்லாமல் காங்கிரசுக்கு சவக்குழி தோண்ட



பெத்தாம்பாளையம் பழனிச்சாமி

வும் முற்பட்டுள்ளார்கள்.

காங்கிரசை மக்கள் வெறுக்கிறார்கள்!

வளர்த்தவர்களே வெறுக்கிறார்கள்!

ஆனால்முதலாளிகள் ஆதரிக்கிறார்கள்.

அவனை நண்பர்கள் வறுக்கிறார்கள்!

பெற்று வளர்த்தவர்கள் வெறுக்கிறார்கள்!

ஆனால் கோடி விட்டு கோமளம் ஆதரிக்கின்றாள்! என்ன பொருள்!

கோடி வீட்டுக் கோமளத்திற்கு காதலா?

அட்டை நம் உடலில் ஒட்டிக்கொள்வது ஆசையினாலா?

புலி ஆட்டினைத் தேடி வருவது ஆட்டை ஆலிங்கனம் செய்து மகிழவா?

குள்ளநரி வெள்ளரித் தோ[ட்ட]த்தைச் சுற்றிவருவது தோட்ட[க்] காவல் காக்கவா?

சிந்திக்க வேண்டாமா காந்தி[யவாதி]கள்! முதலாளிகள் காங்கிரசை [ஆத]ரிக்கிறார்கள் என்றால் தங்கள் வேட்டையை கருதித்தானே.

அவனை கோமளம் விரும்பு[கிறாள்] என்றால் இனிமேல் பணம் தரு[வான்] என்ற எண்ணத்தினால்தானே! [அவளு]க்கு அந்த நப்பாசை தே[ான்றக்] காரணம். இதற்கு முன்பும் [அவனால்] அவள் லாபமடைந்திருக்க வே[ண்டும்].

முதலாளிகளை கொழுக்க வை[த்த]தானே முதலாளிகள் மீண்டும் [காங்]கிரசை ஆட்சிக்குக் கொ[ண்டு] வர முயற்சிக்கிறார்கள்.



க. அன்பழகன் எம்.ஏ.

அவன் தன் மூதாதையர் சொ[த்தை] இழக்கும் தருவாயில் கோமளம் [தன்] பணத்தை செலவு செய்து அந்த [சொத்]துக்களனைத்தையும் மீண்டும் அவனு[க்கு] வரும்படி செய்யக் காரணம் யாது?

செல்வந்தர்கள் தங்கள் பணத்தை செலவு செய்து காங்கிரசை ஆட்சிக்[கு] மீண்டும் கொண்டுவர முயலும் நோ[க்]கம்.யாது?

காங்கிரஸ் ஆட்சியில் முதலாளிக[ள்] கொள்ளையடித்ததைபோல் வேறுஎந்[த] ஆட்சியில் அடித்திருக்க முடியும்? இ...

(அடுத்தப் பக்கம் பார்க்க)



போரூர் சுப்ரமணியம்



ஏ. வி. பி. ஆசைத்தம்பி

## காங்கிரஸ்...

(முன் பக்கத்தொடர்ச்சி)

றைய ஆட்சியினல் இவர்கள் அடைந்த சலுகை போல் வேறு ஆட்சியில் அடைந்ததுண்டா? இதோ பாருங்கள் பட்டியலை:—

1. காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தவுடனே அதற்கு முன்பு ஆங்கிலேய ஆட்சியின் போது போடப்பட்டு வந்த சூபர்டாக்ஸ் (அதாவது 40,000 ரூபாய் மேல் வருமானம் வருபவர்களுக்கென்று விதிக்கப் பட்டு வந்த வரி தள்ளுபடி செய்யப்பட்டது.

2. பல கோடி ரூபாய் லாபம் சம்பாதித்து வந்த பி அண்டு சி மில் முதலாளிகளிடமிருந்து லாபத்தில் போனஸ் கோரி வேலை நிறுத்தம் செய்த தொழிலாளிகள் மீது கண்ணீர் புகையும் தடியடியும் பயன் படுத்தி வேலைக்குப்போகும்படி நிர்பந்தித்தது.

3. கள்ள வியாபாரிகளை தூக்கிலிடுவேன் என்று கூறி பிறகு அவர்களை கள்ள வியாபாரம் செய்ய வேண்டாமென்று கெஞ்சியது.

4. சர்க்கரை ஆலை முதலாளிகள் கொள்ளை யடிப்பதற்காக சிண்டிகேட் என்று ஒன்றை ஏற்படுத்தியதை அங்கீகரித்து கொள்ளை யடிக்க உதவியது.

5. குறைந்த விலைக்கு பருத்தியை வாங்கி ஆலை முதலாளிகளுக்குத் தந்து உயர்ந்த விலையில் வெளி நாடுகளில் விற்க எற்றுமதி பர்மிட் கொடுத்து நாட்டில் துணிப் பஞ்சத்தை ஏற்படுத்தியது,

6. புகையிலை பீடி, தேயிலை, தீப்பட்டி முதலியவைகள் மீது வரியை உயர்த்தியது.

7. ரயில்வே கட்டணங்களை உயர்த்தியது,

8. உள்நாட்டு வாணிப வளர்ச்சி என்பதன் பேரால் வெளிநாட்டில் மலிவாகக் கிடைக்கும் பொருள்களை எல்லாம் தடை செய்து உள்நாட்டு முதலாளிகள் கொள்ளையடிக்க வழி செய்தது.

9. பிர்லாவின் சணல் ஆலைகளுக்கு சணல் வாங்கித் தர பாக்கிஸ்தானைக் கெஞ்சியது.

10. துணியின் மீது எச்சைஸ்வரி விதித்துள்ளது.

11. ஆலை முதலாளிகள் வடிக்த கண்ணீருக்கிரங்கி துணி விலையை உயர்த்தியது.

12. மத்திய மாகாண அரிசி வியாபாரிகளைக்கொள்ளையடிக்கச்செய்தது.

13. அரிசி கேட்டவர்களுக்கு கோதுமையையும் கோதுமை கேட்டவர்களுக்கு அரிசியையும் தந்து மக்களை அவதியுறும்படிச் செய்தது.

14. வடநாட்டு ஆலை முதலாளிகள் கொழுக்க தென்னட்டுத் தறிக்காரர்களுக்கு நூல்கொடுக்காது கொடுமைப் படுத்தியது.

15. மாகாண சர்க்காருக்கு ஜீப்கார்கள் தேவைப்பட்டும் நேராகக்கொடுக்காமல் ஏலம் விட்டு ஒரு சேட்டை ஜீப் 1-க்கு ரூ. 500 வீதம் ஏலம் எடுக்கச் செய்து மாகாண சர்க்காரை அந்த சேட்டிடம் ஜீப் 1-க்கு ரூ. 5000 வீதம் வாங்கச் செய்தது.

16. ரூ. 150க்கு மேல் நிலத்தீர்வை கட்டுபவருக்கு சர்சார்ஜ் போடுவது என்று வந்த தீர்மானத்தை புறக்கணித்தது

17. ஜமீன்தாரர்களுக்கு நஷ்டஈடு வழங்கியது.

18 இனும்தாரிகளை ஒழிக்காதது.

போதுமா பட்டியல்! இவைகளைச் செய்தது இந்த தயாபரர்கள்தானே!

குழந்தைக்கு பால் என்று கூறி வாங்கி பாம்பிற்கு ஊற்றி வளர்த்திருக்கிருர்கள்.

ஏழைகளின் இத்தத்தைச் சீமான்களுக்குப் பன்னீராக்கியிருக்கிருர்கள் தொழிலாளியின் கண்ணீரைக் [illegible] சீமானின் மதுக்கோப்பையை நிரப்பியிருக்கிருர்கள்.

காந்தி சீடர்கள், ராமதூதர்கள் ஆட்சியில்தான் இந்த அவலநிலை இந்த அலங்கோலத்தை மக்கள் தெரிந்துக்கொண்டார்கள். வண்டிக்கிலே வாசனை ஜவ்வாது என்று ஏமாற்றும் எத்தன் வியாபாரம் எத்தனை நாளைக்குச் செல்லும்.

அடிமை வாழ்விலிருந்து சுதந்திர வாழ்வு பெற்ருல் வாழ்வுவளமாகும். வளம் பெற்ருல் வறுமை ஒழியும் இல்லையென்பது இருக்காது. நாமும் பிறநாட்டாரைப்போல் நல்வாழ்வு வாழலாம் என்று மக்கள் நம்பிதான் காங்கிரசை அரியாசனம்ஏற்றினர்கள் ஆனல் மக்கள் ஏமாற்றம் அடைந்துவிட்டார்கள் ஏமாற்றம் ஏக்கமாக மாறி ஏக்கம் பெருந்துக்கத்திற்கு இழுத்துவந்து விட்டது.

அடிமை வாழ்வில் வயிருற உண்டவர்கள் சுதந்திர வாழ்வில் பசியால் வாடுகிருர்கள் என்ருல் சுதந்திரம் வந்ததால் நன்மையா தீமையா என்று சிந்திக்கவேண்டும்.

கூழைக் குடித்துவிட்டு குடிசையில் வாழ்ந்த வரதனைப்பார்த்து நீ அடிமை வாழ்வு நடத்துவதால்தான் இப்படி இருக்கிருய் இல்லையேல் பாலைப்பருகி விட்டுமாளிகையில் வாழலாம் என்று ஆசை வார்த்தைக்காட்டி ஏமாற்றி அவன் ஆதரவைபெற்று ஆட்சியேறிய பின் அவனுக்குக்கஞ்சிக்கும்வழியின்றி நடுவீதியில் விட்டால் அவன் நிலை என்னவாகும்.

மூட்டைப்பூச்சி கடிதாளாது தவிப்பவனை வேறு நல்ல படுக்கை, புதுப் படுக்கைத் தருகிறேன். என்றழைத்துச் சென்று தேள்உள்ள படுக்கையில் படுக்க வைத்தாற்போல நமது காங்கிரஸ் கண்யர்கள் நடந்து விட்டார்கள்

இவர்கள் பிறர் கொள்ளையடிப்பதைப் பார்த்ததும் தாங்களும் அந்த எச்சைக் காசை நக்கலாமே என்ற சபல புத்தி கொண்டு விட்டார்கள்!

இதை நாம் சொல்லவில்லை, இவர்களின் சகபாடிகளே இதைப் பற்றி தூற்ற ஆரம்பித்துவிட்டார்கள் தியாக உணர்ச்சி மறைந்து சுயநல லாப வேட்டை மலிந்துவிட்டது என்று பிரதமர் உள்பட பதவிகிட்டாது பரதவிக்கும் குட்டிக் காங்கிரஸ் வரையிலே சொல்கிருர்கள்.

எளிய வாழ்வு நடத்திய மக்களிடம் பொய்பேசி மேலான வாழ்வு அளிப்பதாகக் கூறி அழைத்துச் சென்று படுகுழியில் தள்ளிவிட்டார்கள். சந்தனம் பூசுவதாகக்கூறி சேற்றையா பூசுவது!

நன்மை செய்வதாகச் சொன்னர்கள்! தீமையே செய்திருக்கிருர்கள்.

கொள்ளையடிக்கும் வெள்ளையனை விரட்டுவதாகக் கூறினவர்களே கொள்ளைக்காரர்களாக மாறிவிட்டார்கள். வீதியிலே தனித்து நிற்கும் குழந்தையிடம் "பாப்பா இங்கே நிற்காதே திருட்டுப்பயல்கள் அதிகம்... வா உனக்கு மிட்டாய் வாங்கித்தருகிறேன் என்று ஏமாற்றி அழைத்துச் சென்று குழந்தை கையிலிருந்த தங்க வளையல்களை கழற்றிக்கொண்டு ஓடும் காவாலிக்கும், இந்தத் தியாகிகளுக்கும் என்ன வேற்றுமை?


இவ்வளவு திருவிளையாடல்களையும் புரிந்த இவர்கள் மீண்டும் ஆட்சிக்கு வர ஆசைப்படுகிருர்கள். இதுகூட நம்மைத் திகைக்க வைக்கவில்லை. நிச்சயமாக மீண்டும் ஆட்சிக்கு வருவேன் என்று மீசை மீது கை போடுகிருர்களே அதுதான் நம்மை திகைக்க வைக்கிறது.

"புற்றுக்குப் பால் ஊற்றினல் புண்யமென்று எண்ணி ஊற்றினவள் மகனை அப்புற்றுப் பாம்பே கடித்த புறகுமா புற்றுக்கு மீண்டும் பால் ஊற்றுவாள்?"

கொடுத்த வாக்கைத்காற்றில் பறக்க விட்டதோடல்லாது கொடுமைகள் பல பிரிந்த இவர்களைத்தான் மக்கள் இன்னும் ஆதரிக்கிருர்களாம்! துப்பாக்கியையும், தடியையும் நம்பி ஆட்சி செய்யும் இவர்களால்தான் இந்த நாட்டை நிர்வகிக்க முடியுமாம்!

மரணப்படுக்கையில் புரளும் சீமான் சொல்கிருர் தனக்குப் பின் தன் குடும்


(16 பக்கம் பார்க்க)



சென்னை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக முதல் மாநாடு கொள்கையில் வழுவாத்தங்கம் அழகிரியின் பந்தலில் நடைபெறுகிற காட்சி.



செல்வபுரியை 'சீ' என உமிழ்ந்து சிந்தனைத் தோட்டத்திலே உலவி, சிங்கத் தமிழர் படையமைத்து நாடெங்கும் சூறுவளியெனச் சுற்றிய மாவீரன் அழகிரி கல்லறையாக் மாறிவிட்டான். (தஞ்சையில்)



காஞ்சி. தி. மு. க. மாவட்ட மாநாட்டில் கருணாநிதி 'விடுதலைக் கிளர்ச்சி' பற்றி பேசுகிருர்,

# திராவிடத்தில் தொழிலாளர் நிலை

—என். ஜீவரத்தினம்—

நீர்வளம், நிலவளம், மூலப்பொருள் வளம், குன்றாக் குமரி முதல் விந்தியம் வரையுள்ள நாடு. இந்நாட்டுத் தொழிலாளர் நிலை உலக நாடுகளைக் காட்டிலும் சீரும் சிறப்பும் பெற்று ஓங்க வேண்டியதற்கு மாறாக போதுமான உணவும், உடையும் நிழலுமின்றித் தவிப்பானேன்? இயந்திரப் புரட்சியால் ஒன்று திரண்டு உருவாக்கப்பட்ட உழைப்பாளிகளின் சக்தி திராவிடத்தில் மட்டும் சிதறுண்டு கிடப்பானென்? உழைப்பவன் ஒருவன் உண்பவன் வேறொருவன் என்ற நிலை ஏன்? பாட்டாளிகளின் மகத்தான சக்தி முதலாளித்துவத்தின் முதுகெலும்பை முறித்து முன்னேறி உலகின் மிக முக்கிய நாடுகளைத் தன் ஆட்சி மன்றமாக்குகையில் திராவிடம் மட்டும் தவித்துக்கிடப்பானேன்? உலக மக்கள் உய்வதற்குரிய சகல பொருள்களிருந்தும் ஏன் இந்த சங்கடம்? ஏன் இந்த வறுமை? ஏன் இந்தக் கொடுமை? பெரும் உழவர் நாடான திராவிடத்தில் ஏன் இந்தப் பஞ்சம்? மூலப்பொருள்களைக்கொண்டு உற்பத்தியைப் பெருக்கும் உழைப்புச் சக்திக்குக் குறைவா? இல்லையே! ஐந்து கோடி மக்கள் உள்ளனரே. அதுவும் சோம்பேறிகளும், சோம்பேறிகளும் பயங்கொள்ளிகளுமல்லரே! பின் ஏன் இந்த நிலை? தீரமும் ஆண்மையுமிக்க இந்த திராவிட சமுதாயம் உழைப்பைப் புறக்கணித்ததில்லையே. காடை, நாடு, நகர், மாட மாளிகைகளாக்கி கூட கோபுரங்களைக் கட்டி இறுமாந்த திராவிடத் தொழிலாளி வர்க்கம் இன்று ஏன் இந்நிலை எய்தியது? மூச்சடக்கிமுத்தெடுத்த இவர்கள் ஏன் முணகித் திணறுகின்றனர்? ஆம் அதெற்கெல்லாம் ஒரே பதில் அந்த ஆரியமாயையே தலைவிரித்தத்துவமே மோட்சத்தின் மோகமே, சாஸ்திர புராணங்களை நம்பியதால் ஏற்பட்ட தொல்லைகளே, ஜாதிப் பாகுபாட்டு முறையை ஏற்றுக்கொண்டதின் விளைவுகளே. ஏகாதிபத்தியங்களின் முழு முதலானதும் பழைய கால முதல் திராவிடத்திருநாட்டை அடிமை கொண்டதுமான ஆரிய ஏகாதிபத்திய சூழ்ச்சியே. தன்மானமிழந்து தலைவிதித்தத்துவத்தை நம்பி உழைப்பதும் உருக்குலைவதும் பூர்வ ஜென்ம செயலின் கடவுள் தண்டனை. ஊராள்வதும் உண்டு கொழுப்பதும் மற்றவர் செய்தபுண்ணியபலன்என்ற எண்ணமே அடிமை மனப்பான்மை திராவிடத்தத்தில் இரண்டறக் கலக்கப்படும் வரை அன்றைய தொழிலின் வளங்குன்றாமலே தலைநிமிர்ந்து ஏறு நடை போட்டது எமது வளமார் திராவிடம். இயந்திரப் புரட்சியின்பயனால் தனி முறைத்தொழில்கள் யாவும் கூட்டு முறையில் அமைந்து உற்பத்திப் பெருக்கெடுத்தது பிற நாட்டின் தேவையைப்பூர்த்தி செய்யும் உயர்நிலை அடைந்தது, கடவுள் மதம் மூடநம்பிக்கைகளை ஆயுதமாகக்கொண்ட முதலாளித்துவம் மக்களை மடமையில் ஆழ்த்தி அவர்கள் உழைப்பை உறிஞ்சி ஊதியத்தைபெருக்க எல்லாத் துறைகளிலு தீவிரமாகவேலைசெய்தது ஒரு நாட்டில் உற்பத்தியாகும்பொருள் உபரி மற்ற நாட்டுத் தேவையைப் பூர்த்தி செய்வதால் வாணிபம் பெருக அந்தந்த நாட்டு முதலாளித்துவமும், தனி உடமையும் காப்பற்றப்பட ஒன்றுக்கொன்று இணைந்து பட ஏற்பாடுகள் துரிதப்பட்த்தப்பட்டன. இவர்கள் கொள்ளை லாபத்திற்கென கூட்டி வைக்கப்பட்ட தொழிலாளித்துவமும் தன் குறை தீர்க்கும் சக்தியையும் ஊடே வளர்த்துக் கொண்டு வந்தது. எங்கெந்த நாடுகளில் தனிஉடமையின் பெருக்கத்திற்கும் தொழிலாளரின் பரதவிப்புக்கும், கடவுள் மதம் ஜாதி மடமை பழமை ஆகியவைகளே காரணம் இவைகளின் ஆதிக்கமுடையோர் ஆட்சி நீடிப்பே நீங்காத்துயருக்குக் காரணம் என்று எவ்வளவு சீக்கிரத்தில் உணரமுடிந்ததோ எந்த இயக்கங்கள் அவைகளுக்காகத் தன்னலமற்றத் தியாகங்கள் புரிந்தனவோ அந்தந்த நாடுகளிலுள்ள தொழிலாள வர்க்கம் அவ்வளவு சீக்கிரத்தில் அவைகளைச் சுக்குநூறாக்கி இந்த சதிக்கூட்டத்தின் ஆட்சியை அறவே ஒழித்து தொழிலாளர் ஆட்சியை ஏற்படுத்தி வருகின்றது. கடவுள்,

(அடுத்தப் பக்கம் பார்க்க)



தஞ்சைக்கு ஆச்சாரியார் வந்தார். அலைகடலென எழுந்தது கருப்புக் கொடி எதிர்ப்பு. தலைமை வகித்த மு. கருணாநிதி, ஏ. கே. வேலன் மற்றும் கே. கே. நீலமேகம், தஞ்சைமணி, திருவாரூர் விசயராகவன், ஆகியோர் படத்தில் காணப்படுகிறார்கள்.


ரோமாபுரிராணிகள் 2-4-0
கம்பரசம் ........ 1-8-0
குமரிகோட்டம் ..... 1-0-0
கற்பனைச்சித்திரம் 1-0-0
அறப்போர் ........ 1-0-0
1858-1948 ........ 1-0-0
சிறுகதைகள் ...... 1-0-0
உலகப்பெரியார் காந்தி 1-0-0
பணத்தோட்டம் .... 1-0-0
தீ பரவட்டும் ....... 1-0-0
அண்ணாவின் ஆறு கதைகள் 1-0-0
நாம் .............. 1-0-0
வர்ணாஸ்ரமம் ..... 0-12-0
நிலையும் நினைப்பும் 0-12-0
மே தினம் ......... 0-5-0
அவர்கள் சந்திப்பு 0-3-0

அரங்கண்ணல்
ரஸ்புடீன் ......... 1-8-0
இதயகீதம் ........ 0-12-0
இருளும் ஒளியும் 1-8-0
(தில்லை வில்லாளன்)

திராவிடப் பண்ணை
தெப்பகுளம் திருச்சி

— புதிய பாதை ! —

திராவிட நாடு தனித்தியங்க,
சிறந்த வாழ்வு நிலைபெற்றோங்க
புதிய பாதை காட்டியுள்ளார்
தோழர் இரா. நெடுஞ்செழியன் M. A. அவர்கள்
இன்றே வாங்கிப் படியுங்கள்!

விலை அணா 8

முகவரி:
ஞாயிறு நூற்பதிப்பகம்
பாண்டிச்சேரி


ல்வி மந்திரி மகதாப்பை கருப்புக்கொடிகளுடன் வரவேற்
மைக்காக சிறைவாசமும் அபராதமும் பெற்ற குளித்தலை
திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள்



ர்ந்திருப்பவர்கள்: (இடமிருந்து வலம்) 1. மா. அர்த்த
2. கு. ரா. இராசா 3. ரா. சுப்பிரமணியன் 4. தி. வீ.
துகிருஷ்ணன் 5. ரா. இராமச்சந்திரன் நிற்பவர்கள்:
மிருந்து வலம்) 1. கா. மா, வைத்திலிங்கம், 2. இ, பாச்சா
3. தி. வீ. பாலு 4. குருநாதன்



ாவையில் ஜகஜீவன்ராம் வந்தபொழுது தி. மு. க. வீரர்கள் கருப்புக்கொடி காட்டுகிறார்கள்.



நமது மாநாடுகளை வில்லுப்பாட்டுடன் துவக்கிவைத்த் கலைவாணர் குழுவினர். வலதுபுறத்தி லிருப்பவர் மாநாடுகளில்,பொதுக் கூட்டங்களில் இசைவழங் கிய செல்லமுத்து

## காங்கிரஸ்...

(14-ம் பக்கம் தொடர்ச்சி )

பத்தைத் தன்னைப்போல் திறமையோடு நிர்வகிக்க வேறு ஆள் இல்லை என்று. பிள்ளைகள் சாமர்த்திய சாலிகள் அல்ல என்று வேறு சலித்துக் கொள்கிறார்.

இவர் தகப்பனாரும் இதே வார்த்தையைத்தான் சொன்னார் என்பதை இவர் அறிவாரா?!

வெள்ளையன் எதைச் சொன்னானோ அதையே தானே இன்றைய ஆட்சியாளர்கள் கூறுகிறார்கள்! பாவம்...மரணப் படுக்கையில் புரளும்போது பழைய வீரப்பிரதாபங்களை எண்ணுவது இயற்கைதானே! நாடியெல்லாம் அடங்கி மூலையில் ஒதுங்கியுள்ளவன் வாலிபத்தில் தனக்கிருந்த வலுவைப் பற்றிப் பேசத்தானே செய்வான்.

ஆதலால் இன்றைய ஆட்சியாளர்களைக்கண்டு ஆத்திரப்படவில்லை, மாறாக ஆயாசப்படுகிறோம்.

மரணப்டுக்கையில் கிடக்கும் காங்கிரசைப் பற்றி வேறு என்ன எண்ணக்கூடும்?

## முக்கியப் பிரச்சினை !

நம்மில் யார் சிறையிலிருக்கிறார்கள்? இதுவல்ல முக்கிய பிரச்சினை. நம்மிடத்தே ஓர் சிறையிருக்கிறதே! இருக்கலாமா அது? இதுதான்பிரச்சினை.

—ஜார்ஜ் பெர்னாட்ஷா



கோவை ஏ. பொன்னுசாமி

## திராவிடப்...

11-ம் பக்கத் தொடர்ச்சி

தின் விடுதலைக்காகத் தொண்டாற்ற ஒவ்வொரு தாய்மாரும், தோழியரும் முன்வரவேண்டும் ஏறத்தாழ 200 உறுப்பினரைக் கொண்ட இந்தக் கழகத்தில் இன்னும் அதிகமான உறுப்பினரைச்சேர்த்து இன்னும் இதைப்போன்ற கழகங்களை வெளியிடங்களில் தோற்றுவித்து மத்திய கழகத்துடன் இணைந்து பணியாற்றுமாறு வேண்டிக்கொள்கிறேன் திராவிட நாடு விடுதலைப் போராட்டத்தில், ஒவ்வொரு பெண்ணும் தங்கள் தங்கள் கடமையைச் செய்யத் தவறாதீர்கள் என்று கூறி பணியாற்ற வருமாறு அழைக்கிறேன்.

வாழ்க திராவிடம்

## திராவிடத்தில்...

(முன் பக்கத் தொடர்ச்சி)

ஜாதி, மதம், மடமை, பழமை ஆதிக்கங்களுக்கு அடிமைப்பட்ட திராவிடம் அன்னியர் ஆட்சியில்கூட தொழில் நிலை வளம்பெற முடியவில்லை. அன்னிய நாட்டின் சந்தைக்கடையாகவே வைக்கப்பட்டது. இன்றும் வெள்ளையன் ஆட்சி விலக்கப்பட்டாலும் வடநாட்டு, ஆங்கிலேய அமெரிக்க பனியாக்கூட்டு முதல் திராவிடத் தொழில் நிலையங்களாகத் திகழ்கின்றன. தனி



கே. ஆர். ராஜா, குளித்தலை

உடமைப் பெருக்கின் தத்துவமான குறைந்த விலை மூலப்பொருள் சிறு மதிப்புடைய மனித உழைப்பு உற்பத்தியைக் குறைந்த செலவில் அதிக லாபத்திற்கு விற்கும் மார்க்கம் இவைகள் திராவிடத்தில் தாராளமாகக் கையாளப்படுகின்றன. தொழிலாள வர்க்கத்தின் மேற்கூறிய அறியாமைச் சூழ்நிலைகள் தனி உடமையைத் தலை நிமிர்ந்து நடக்கச் செய்கிறது. இயந்திரத் தொழிலுக்கும் கைத்தொழிலுக்கும் போட்டியை வேண்டுமென்றே உண்டுபண்ணுவதன் மூலம் தொழிலாள வர்க்கத்தின் ஒற்றுமை குலைக்கப்படுகிறது. தொழில் நிலையங்களில் தமது குறைகளைத் தீர்த்துக்கொள்ள ஏற்படுத்தப்படும் தொழிற்சங்கங்களும் ஜாதி, மத அரசியல் பேத அடிப்படையிலேயே வளர்க்கப்படுகின்றன இதனால் முதலாளித்துவத்தை முறியடிக்கப்பட முடியாததோடு மட்டுமல்லாமல் தொழிலாளர் சக்தியும் சிதறடிக்கப்படுகிறது. வறுமையும், பிணியும் வாட்டி வதைக்கின்றது. வெற்றி காணும் தனி உடமை அரசியல் ஆதிக்கத்தைக் கைப்பற்றி ஆட்சிபீடத்தில் அமர்ந்து ஆணவத்தாலும் அடக்குமுறையாலும் ஆட்சி நடத்த ஆரம்பிக்கிறது. இந்த செல்வத் திராவிடத்தின் சீரழிந்த நிலை மாறி சமதர்மக் குடி அரசு அமைக்கப்பட வேண்டுமானால் தொழிற்சங்கங்களின் இன்றைய நிலைமாறிபொதுவுடமைக்கப்பாற்பட்ட அறிவுடமைப் பாசறைகளாக்கப்பட வேண்டும் கடவுள் ஜாதிமதகுல அரசியல்கட்சிபற்றுகள்பிய்த்தெறியப்பட்டு இன்பத் திராவிடத்தின் இதயகீதம் அவர்களின் சங்க நாதமாக்கப்படும் நாளே திராவிட சமதர்மக்குடி அரசின் உதயநாளாகும் இந்தநற்பணியை விடுதலை வாங்கித்தரும் வேலையை வீழ்ந்தவர்களை வாழ்விக்கும் பொறுப்பை, திராவிடநாட்டுப் பகுத்தறிவியக்கத்தாரல்லாது மற்றும் எவராலும் ஏற்றுக் கொள்ளமுடியாது இந்தப் பணியை ஏற்று தொழிற்சங்கங்களிலிருந்து ஆரியமாயையை விரட்டி மக்களை வாழ்விக்க எதையும் தாங்கும் இதயம் படைத்த பகுத்தறிவாளர் பெரும்படை பாடுபடுமா ?

# அந்த ஜூலை 14!

[அறிஞர் சி. என். அண்ணாதுரை]

**குமுறிக்கிடந்த கூட்டம் கொடுங்கோலை எதிர்த்தது**

லிண்டனும், மாஸ்கோவும், பாரிசும் வியன்னவும் அந்தத் திருநாளை எழுச்சியுடன் கொண்டாடின! பெர்லின் நகரிலே வெற்றிவளைவு! கோபுர உச்சியிலே கெம்பீரமாகப் பறக்க விடப்பட்டது, அந்தத் திருநாளின் கொடி! பல்வேறு நாட்டவரும், தத்தமது நாட்டின் நன்னாளெனக் கொண்டாடும் விதமாக அமைந்தது ஜூலை 14-ந் தேதி எனும் புரட்சித் திருநாள்! ஜூலை 14! உலக வர



ப. உ. சண்முகம்
நகர மன்றத் தலைவர்
திருவண்ணாமலை

லாற்று ஏட்டிலே உன்னதமான இடத்தைப்பெற்றுவிட்டது. அந்நாளே வீர பிரஞ்சு மக்களின் வெற்றி நாள்! எதிரி நாட்டின் மீது போரிட்டுப் பெற்ற வெற்றியா? இல்லை! கொடுமையை எதிர்த்து கொடுங்கோலை எதிர்த்து, அன்றுவரை குமுறிக் கிடந்த கூட்டம், அந்நாள் வரை அடக்குமுறையினால் தாக்கப்பட்டு, அடிமைப்பட்டு, 'இம்மென்றால் சிறைவாசம், ஏன் என்றால் வனவாசம்' என்ற நிலையிலே சிக்கிச் சிதைந்து, நசுக்கப்பட்டு, நாதியற்றுக்கிடந்த மக்கள், நிமிர்ந்து நின்று, புனல்சொரிந்த கண்களினின்றும் கனலைக் கக்கி, பெருமூச்சை நிறுத்திப் பெரு முழக்கம் கிளப்பி, தருக்கர்களின் தாளைத் தொட்டுக்கிடந்த கரங்களிலே வாளேந்தி விடுதலை! விடுதலை! என்ற புரட்சிக் கீதம் பாடிக்கொண்டு படை போல் திரண்டு, இடிபோல் ஆர்ப்பரித்து புயலெனக் கோபத்தை வீசி, போக போகத்திலே புரண்டு, பொது மக்களைப் பொதி மாடுகளாக்கி, அரசியலைக் கொடுமைக் கருவியாகக் கொண்டு, மக்களைக் கசக்கிப் பிழிந்து அவர் தம் மானத்தை மண்ணெனக் கருதி, மிதித்து, செருக்கு நிறைந்த சீமான்கள், எதேச்சாதிகாரம் செய்து வந்ததை ஒரே அடியில், ஒரே நாளில், ஒரே பெரும் புரட்சியிலே, அடித்து நொறுக்கி உருத்தெரியாதபடி அழித்த நாள் அந்த ஜூலை 14!

**ஒடப்பரெல்லாம் உதையப்பரான நாள்!**

எல்லோரும் இந் நாட்டு மன்னர்! வலியோர் சிலர் எளியோர் தமை வதையே புரிகுவதா? மகராசர்கள் உலகாளுதல் நிலையாம் எனும்நினைவா? என்ற முழக்கம் கிளம்பிய நாள், முகாரி முடிந்து அடாணா ஆரம்பமான நாள்! மாடப்புரு வல்லூறைத் துரத்திய நாள்! சீமான்களின் தலை சிதறிய நாள்! மதுக்கிண்ணமேந்திய மனோஹரிகளின் இதழ்தரும் சுவையிலே, இகத்தின் ரசத்தைக் கண்டு, பரலோக ரசம் பாதிரிமாரின் கைவசம் இருக்கிறது. கேட்டால் கிடைக்கும் அதற்காக தேடி அலைவானேன் என்று மதோன்மத்தர்கள் அரண்மனைச் செல்லப் பிள்ளைகள், ஆணவ சொரூபங்கள் ஆடிப்பாடிக் கிடந்த கோலாகலத்தை வேரறுத்த நாள்! ஒடப்பரெல்லாம் உதையப்பரான நாள்! விலங்கு பூட்டப்பட்டு வேதனையை அடைந்த கரங்களிலே வீரவாள் ஜொலித்த நாள்! விடுதலை நாள்! வீரரின் வெற்றித் திருநாள்! வெறியரின் வீழ்ச்சி நாள்!

**மக்களை மாக்களாக்கிய இடம் மண்மேடாயிற்று**

விழா! உலகெங்கும் ஊரெங்கும்! உணர்ச்சியுள்ளவருக்கெல்லாம் உத்



தோழர் சி. முனுசாமி
விருத்தாசலம்

தம நாள்! அந்த ஜூலை 14-ந் தேதி! வீதிகளிலே களம்! வீடுகளே பாசறை கையில் கிடைத்ததெல்லாம் ஆயுதம் காணும் கொடுமை களெல்லாம் தவிடு பொடி! திட்டம் உண்டா? தீட்ட நேரமில்லை! மந்திராலோசனை உண்டா? அதற்கான மனப்பான்மை இல்லை. சமயமறிந்து நடக்க வேண்டும் என்ற எண்ணமாவது உண்டா? இத்தருணம் தவறினால் மறு தருணம் வாய்ப்பதரிது என்று யாவருங்கூறின நேரம் அது! அணி வகுப்பு? இல்லை! அவனைக்கேள், இவனைப்பார், அவனைக் கூப்பிடு என்ற பேச்சு இல்லை! வேறு என்ன உண்டு? வெட்டு! குத்து! இடி! கொளுத்து! கொல்! இந்தச் சத்தமே எங்கும்! மாளிகைகள் இடிந்து சரசரவென சரியும் சத்தம், கட்டிடங்களிலே தீ மூட்டி விட்டதால் கிளம்பும் சத்தம்! இவைகளை மீறிக் கொண்டு பாஸ்டிலி! பாஸ்டிலி என்ற பெருஞ் சத்தம் ஆம் ஜூலை 14, பாஸ்டிலி படுசூரணமான தினம்! பதைத்தெழுந்த பாமர மக்கள் தங்களை அன்றுவரை பயங்கரமான கொடுமைகளுக்கு ஆளாக்கி வைத்த பாதகச் சிறைக்கூடமான பாஸ்டிலியை இடித்துத் தூளாக்கிமண் மேடாக்கிய நாள்!

**இரத்தம் இரத்தத்தை அழைத்தது**

அந்தச் சிறைச்சாலையைச் சீற்றங்கொண்ட மக்கள், சிதறடித்த நாளையே இன்று பாரிசில் மட்டுமல்ல பெர்லினில், மாஸ்கோவில் லண்டனில், பல்வேறு நகர்களில் கொண்டாடுகிறார்கள் ஜூலை 14ந்தேதி பிரான்சு நாட்டு மக்கள் தங்கள் நாட்டிலே இருந்த பயங்கரச் சிறைச்சாலையான பாஸ்டிலியைத் தகர்த்தனர் என்ற



ஈ. வெ. அ. வள்ளிமுத்து
நகரமன்றத் தலைவர் கோவில்பட்டி

போதிலும் அந்நாளைக் கொண்டாடும் உரிமை எனக்குமுண்டு! என்று கூறிக் கொள்ளாத நாடு இல்லை! ஒரு நாட்டின் நாள் உலகப்பொது நாள் ஆகி விட்டது! பாஸ்டிலி பிரான்சிலே வீழ்ந்தது என்ற உடனே ஒவ்வோர் நாட்டிலேயும் உணர்ச்சி பொங்கி எழுந்தது, ஏன்! பாஸ்டிலி பிரான்சு நாட்டுச் சிறைக்கூடம்! பாரிசில் கட்டப்பட்டிருந்த பாதகப் படுகுழி! பாமரரைச் சித்திரவதை செய்யும் சிறைக்களம் அது அன்று அழிந்தது' அந்தச்செய்தி உலகமெங்கும் கொடுமைக்கு ஆளாகி இருந்த மக்களுக்கெல்லாம் தத்தமது நாட்டிலே உள்ள பாஸ்டிலிகளும் தொலையும் நாள் வந்துவிட்டது என்ற ஆவேசத்தை ஊட்டிற்று அக்ரமக்காரரை விழித்தெழுந்த மக்கள் வீரத்தால் வீழ்த்தினர் என்று கேட்டதும், நாட்டுக்கருகே உலவிய புலி கொல்லப்பட்ட செய்தி கேள்விப்பட்டதும், நாட்டிலே ஒவ்வொரு வீட்டிலும் மகிழ்ச்சி உண்டாவது போல உலகிலே நாரீக உணர்ச்சி படைத்த அனைவருக்கும் ஓர் மகிழ்ச்சி, எழுச்சி. ஒழிந்தது பாஸ்டிலி! ஒழிந்தது



தோழியர் எம். எஸ்.
சத்தியவாணிமுத்து

கொடுமை! என்று பல்வேறு நாட்டவரும் கூறினர். பாஸ்டிலியின் அழிவு பிரான்சிலே மட்டுமல்ல; பல்வேறு நாடுகளிலேயும் நாசத்தைக் கக்கிக் கொண்டிருந்தநயவஞ்சகர்களின் ஆட்சி வீழ்ந்துவிடும். விழும் நாள் விரைவிலே உண்டு என்ற எண்ணத்தை ஊட்டும் இலட்சிய வாடையாகிவிட்டது! அந்தப் பிரன்சுப் புரட்சி, பிரபஞ்சபுரட்சிக்குப் பேராசிரியராக வரவேற்கப்பட்டது. ஜூலை 14! ஒரு நாட்டிலே இருந்த ஒரு சிறைக் கூடத்தின் வீழ்ச்சி நாள் அல்ல, செல்வச் செருக்கு எனும் சிறைக்கூடம் எங்கெங்கு காணப்பட்டதோ அங்கெல்லாம், வீழ்ச்சி இறுமாப்புக்கு இறுதி எச்சரிக்கை விடுத்திடும் வீரம் விழிப்புற்ற நாளாயிற்று.

**பூவையரின் போகத்தில் புரண்டு கிடந்த பூபதிகள்**

"ஏ! மனிதப்பதரே! மண்டியிட்டு வாழவேண்டிய மாமிசப் பிண்டமே! அடிமையே! கட்டளையிடுகிறேன், யோசிக்கிறாயே, என்ன? நட என்று கூறுகிறேன், நிற்கிறாயா இன்னமும்?' என்று எக்காளம் மிகுந்திருந்த காலம்! மாளிகைகள் பிறப்பித்த கட்டளைகளை மண்குடிசைகள், சிரமேற்கொண்ட காலம்! மன்னனோ, சீமான்களின் சதுரங்கக் காய்; சீமான்களோ சிருங்காரிகளின் சிறு விரலிலே, பெருநெறியைக் கண்டவர்கள்; சிருங்காரிகளின் ஆயுதங்களோ சிற்றிடை, சிவந்த அதரம் கடைசிவந்த கண்கள், கனிரசக் கலசங்கள், கீதக்குரல் நடனநடை......இந்நிலையிலே, பஞ்சம் பசி தீர்த்துக்கொள்ளும் பாமரரின் உயிர் குடித்து; பாவையர் வாழுவா பாதிராத்திரிப் பசியை அடக்கும் பாதகத் தொழிலுக்குத் தங்களை தத்தம்செய்து! வரிகொடுப்பா ஏழை மக்கள், வாங்கிக் குவிப்பர் அரசியலார்! வேலை செய்வர் கூலி மக்கள் கேளிக்கைத் தேடி அலைவர் சீமான்கள்! ஒய்யாரியின் ஓயாச் சிரிப்பு! உல்லாசியின் சல்லாபம்! இவையே கலை! கட்டழகியின் கண்ணைக் கண்டே காவி



முருகு. சுப்பிரமணியம்
(ஆசிரியர் 'பொன்னி'

யம் தீட்டப்படும்.

**கோமளவல்லிகளின் கொவ்வை இதழுக்குக் காத்திருந்த கோமான்கள்**

சீமான்களிடம் வரிகேட்கும் "சிறு மதி'; மன்னருக்குக் கிடையாது. பூமான்களின் புன்னகை போதாது. பூபதியின் அரண்மனைக்கு ஒளித... பஞ்சைப் பயல்களால் வரிதருவ... தவிர, வேறென்ன தரமுடியு... நாட்டை ஆளும் பாரத்தை நாத... துணைகொண்டு தாங்கும் மன்னருக்கு... எனவே ஏழை பராரியாவான், பரா... பட்டினியால் சாவான்! இலட்சா... பதி கோடீஸ்வரனாவான். கோடீஸ்... வரன் கோமளவல்லிகளின் கொவ்வை... இதழுக்காக எதையும் தருவான்... இதுவே பிரான்ஸ்; பாஸ்டிலி வீழ்ச்... சிக்கு முன்பு.

**ஆயுள் பூராவும் அங்கத்தின்மீது அக்கினிக் குழம்பு!**

"இப்படியும் வதைவதா?" என்று... கேட்கும் துணிவு எவனுக்கேனும் பிறந்... தால் பாஸ்டிலி! அரண்மனையிலே... செல்வாக்குள்ள யாருடைய கோப... மாவது எவன் மீதேனும் பாய்ந்தால்... பாஸ்டிலி! வரிக் கொடுமையைப் பற்றி பேசினனா? பாஸ்டிலி! வனிதாமணியைக் கேலி செய்தானா? பாஸ்டிலி! சீமான்களின் சீற்றம், அந்தச் சிறைச் சாலைக்குத்தான் பாமரரைத் துரத்திற்று. அங்கே இருந்தது என்ன? இரும்புக் கம்பியும் கம்பளிப் போர்வையும் மட்டுந்தானா? இல்லை! பகலிலே இரவு! பாதாளத்திலே அறைகள்! காற்று வெளிச்சம், தண்ணீர் உணவு தாராளமாக உண்டா? இல்லை! சித்திரவதை எவ்வளவு அதிக நாட்களுக்கு செய்யமுடியுமோ அவ்வளவு காலம் கைதியின் உயிர் ஊசலாடிக்கொண்டிருக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்



ஜீ. பராங்குசம்
திருச்சி மாவட்டச் செயலாளர்

ஹம். பாஸ்டிலி என்ற பெயரைக் கேட்ட உடனேயே பயத்தால் அலறுவர்? அங்கே போனவன் திரும்பி வருவது உண்டா? அக்கினிக் குழம்பிலே போட்டாலாவது அரைநொடியிலே சாவது நிச்சயம். அதுவரைதான் வேதனை. பாஸ்டிலியிலே ஆயுள் பூராவுமல்லவா அக்கினிக் குழம்பு அங்கமெல்லாம் ஊற்றப்படும் என்று கூறிக் கதறுவர். விசாரணையின்றி, மன்னிப்பின்றி, அங்கம் பழுதானால் கேட்பாரின்றி, உடல் அழுகித் தானுக உலர்ந்து, உயிர் ஒவ்வோர் துளியாகப் பிரியத் தொடங்கி.. அவன் எலும்புக்



எஸ். ஆர். சுப்பிரமணியம்
திருப்பூர்

...டாகி, கண் பார்வை இழந்து, ...கால் முடக்கப்பட்டு, உடலிலே ...த்துக்கொண்டிருக்கும் உண்ணியை ...வும் சக்தியற்று, அவனைக் கண் ...ல் பார்ப்பதே பார்ப்பவனுக்குத் ...ண்டனை என்று கூறத்தக்க உருவ ...க மாறி, மரணத்துக்குத் தவம் ...ந்து, பிறகு மண்ணிலேபுதைவான்! ...ப் பயங்கர பாஸ்டிலியிலே வாலி... வயோதிகனுனன். வீரன் வெறியனுன். புத்திமான் பித்தனுனன். வடி...கன் அழுகு நோயனுனன்! அடக்கு...றையின் முழு ரூபத் திரளும் உப...ோகிக்கப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட ...டம் அந்த பாஸ்டிலி. கனத்த சுவர் ...; அவைகளை அணைத்துக்கொண்டு ...மான அகழிகள்; இருப்புப் பல...கைகளான கதவுகள்; இமைகொட்...ாத காவல் புரியும் கொடியவர்; இது ...ாஸ்டிலி! எவ்வளவு அநீதி இழைக்கப்...ட்டாலும் கூட ஏன் என்று கேட்க ...வரும் துணியார், அவர்களின் செவி...லே பாஸ்டிலி என்ற சத்தம் விழுந்த...ல். அந்தப் பாஸ்டிலி வீழ்ந்தது ...லை 14-ல்! அவனி களிப்படையாது ...க்குமா?

### ...மத்தால் கருத்திழந்த ...காமான்கள்: கவலையால் ...ருத்துக் குழம்பிய மக்கள்

பதினுருப் லூயி, பிரான்சை ஆண்டு வருகின்றுன். பட்டத்தரசியின் சுட்டு விரலுக்குக் கிட்டே வருபவருக்கே அரண்மனை தயவு! மக்கள் உள்ளமோ கொதித்தது. ஆனல் எரிமலை கக்கத் தொடங்கவில்லை. பாஸ்டிலி என்ற பயம், எரிமலைக்கு மேல்மூடியாகக் கிடந்தது. கர்த்தனின் கருணையை காசுக்கு விற்கும் தரகர்கள்! காமத்தால் கருத்தழிந்த சீமான்கள்! கவலையால் கருத்து குழம்பிய மக்கள்!



தோழர் நடராசன்
...ரியார் ஆட்சிக்குப் பலியானவர்

### ஆளத்தெரியாத ஆணழகன் 'அவனி'யாண்ட அழகு!

சீமான்களோ வரி செலுத்தவில்லை. வரிகேட்கும் நெறியே தவறு!! சீமான் என்ற பட்டத்துக்கு வேறு என்ன தான் அர்த்தம். சாதாரணமானவனும் வரி கட்டுவது சீமானும் வரிகட்டுவதா? பண்ணை உண்டு, பாடுபட கூலிகள் உண்டு, அவர்கள் தேடிக் குவித்த பொருளை ஆடிப்பாடிச் செலவிடப் பாரிஸ் உண்டு! செல்வவான்கள் உண்டு! அன்னக் காவடிகளுக்கு பட்டினி உண்டு! ஏழுலட்சத்து ஐம்பதினுயிரம் மக்கள் கொண்ட பாரிசில், பசியோபசி என்று பதறிய மக்களே பெரும்பான்மையினர். 1774-ல் இந்த பிரான்சுக்கு மன்னனுனன் பதினுருவது லூயி. நல்லவன், யோக்யன், பக்திமானுங்கூட. ஆனல், ஆளத்தெரியாத ஆணழகன் அந்த லூயி. பட்டத்தரசி மேனுமினுக்கி! அவளைச் சுற்றி ஜொலித்த மாதர்கள், உடல் குலுக்கி ஊரை அழிக்கும் உல்லாசிகள். அரண்மனையிலே ஆனந்த அமளி, வெளியே வேதனைப்புயல்.

### சுரண்டி வாழ்ந்த சுந்தரிகளால் சூது வந்து சேர்ந்தது

இந்த நிலைமையிலே அரசாங்கத்தை நடத்த போதுமான பணம் இல்லை. எப்படி இருக்கமுடியும்? அரண்மனையிலே, சுரண்டிப் பிழைக்கும் சுந்தரிகளும் சோம்பித் திரியும் சொகுசுக்காரரும் நடனமாடினர். பராரி தரும் வரிப்பணம், பரிபாலனச் செலவுக்கு ...அதிலும் பளிங்குக் கிண்ணத்திலே பலவித மது ஊற்றி வைர மோதிரக் கையினள் பொன்னுடைப் பூமகனுக்



தூக்கிலே தொங்கிய
உடையார்பாளையம்
ஆசிரியர் வேலாயுதம்

குப் பூரிப்புடன் தரும் விருந்து வைபவங்கள் நடைபெற வேண்டுமே, அத்தகைய பரிபாலன செலவுக்குப் போதுமா? பாவையர் மீது சீமான்கள் கொண்ட மோகத்தைப்போல பணம் வளருமா? பணம் இருக்கும் இடம், மாளிகைகளில், பண்ணைகளில் அவர்களோ மன்னரின் அன்புக்குப் பாத்திரமானவர்கள். வரிதரும் வேலை கிடையாது, ஏழை மட்டுமே தந்து எந்த அரசாங்கந்தான் நடத்த முடியும்? பணம் இல்லை பரிபாலனச்செலவிற்கு!

### பிரான்ஸ் ஐரோப்பாவின் பூந்தோட்டம்

சர்க்காரைச் சீர்திருத்த முயன்றவர்களிலே ஒருவர் பிரான்சைப் படம் பிடித்தார். "பிரான்ஸ், ஒரு ராஜ்யம் அல்ல! பலப்பல தனித்தனி ராஜ்யங்களின் கதம்பம்! ஒன்றுக்கொன்று தொடர்பு இல்லை. எல்லாவற்றிற்கும் பொதுவான நிர்வாக யந்திரமில்லை. பல வட்டாரங்கள் வரி செலுத்துவதே இல்லை. சில வட்டாரங்கள் வரி செலுத்திச்செலுத்தி வறண்டுவிட்டன. பணக்காரர்களுக்கு வரிச்சுமை மிக மிக இலேசாக யிருக்கிறது. ஏழையின் இடுப்பே முறிகிறது; சீமான்கள் அனுபவிக்கும் அதிகார பாத்யதையால் சமுதாய அமைப்பிலே சம எடை கெட்டுவிட்டது; மிக மிக மோசமான ராஜ்யம். ஊழல் அமோகம், "சரி படம் பிடித்தது சரி

தான். ராஜ்யம் மோசமாக இருக்கிற காரணத்தால் தானே உம்மை அமர்த்தினேம் ஒழுங்குபடுத்த" என்று யாரேனும் கூறிவிட்டால் என்ன செய்வது என்று அஞ்சிப் போலும், அந்த ஆசாமி, பிரான்சின் நிலைமையைக் கூறிவிட்டு "இன்றுள்ள நிலையிலே இந்த ராஜ்யத்திலே ஆட்சி செய்வது ஆகாத காரியம்" என்று தீர்மானமாகக் கூறிவிட்டார். ஐரோப்பாவின் பூந்தோட்டம் பிரான்சு! அங்கு பணமில்லை; துரைத்தனம் நடத்த; பணம் படைத்த சீமானுக்கோ மனம் இல்லை வரி செலுத்த! அந்தச் சிறு கூட்டத்தை அடக்கவோ திறனில்லை மன்னனுக்கு! மதியுரைக்க மந்திரியில்லை! மக்களுக்கோ பாஸ்டிலி இருந்தது!

### தூங்கிக்கிடந்த மக்கள் தோள்தட்டி நின்றனர்

பிரான்ஸ் நாட்டு ராஜரீகத்தை நடத்த முடியாது என்று கூறியும் விட்டார், ஒரு பிரமுகர்; மன்னர் ஏதேதோ செய்து பார்த்தார். மந்திரிசபைப்புதிது புதிதாக நியமித்தார். அவர்கள் புதுப் புதுத் திட்டங்கள் தீட்டினர். பலன் இல்லை! கடைசியிலே கதிகலங்கிய காவலன் புயலைத் துணைக்கு அழைத்தான்! மக்கள்—மன்றத்தைக் கூட்டினுன்!! மக்கள்; மன்னரால் கைவிடப்பட்டுக் கிடந்த மக்கள்—கூடினர். கவலை தோய்ந்த முகத்தினருக்கும் கொஞ்சம் களிப்புப் பிறந்தது. மக்களை மன்னர் நாடுகிருர்! ஏன்? நாம் எல்லோரும் இந்நாட்டு மன்னர்! என்ற தத்துவம் கோழை நெஞ்சிலே குடைந்து சென்றது. நிமிர்ந்து நின்ருன்! தூங்கினபோதும் தட்டுரோள் என்ற உணர்ச்சி உதைத்தது. குகையை விட்டுப் புலி கிளம்புவது போல் கிளம்பினர்.



காஞ்சி கல்யாணசுந்தரம்
(உதவி ஆசிரியர், "போர்வாள்"

### 'எரிமலை' முன்னர் 'எக்காள'ப் பித்தர்கள்

எரிமலை குமுறத் தொடங்கிற்று! மக்கள் மன்றத்தினர், துரைத்தனம் நடத்தும் திட்டம் தயாரித்தனர். விடுதலை என்ற மையிலே புரட்சி என்ற பேனவைத் தோய்த்து எடுத்து, சிறிடும் சீமான்களைக் கண்டு சிரித்தனர். மன்னனை மறந்தனர். அரசாளப் பிறந்தவர் அவர் மட்டுமா? பிரான்சு நாட்டவர் அனைவருமே அரசாளப் பிறந்தவர் என்று ஆர்பரித்தனர் 1789 ஆம் ஆண்டு ஜூன் பத்தாம் தேதி மக்கள மன்றம் 'தேசிய மகாசபை, இது. இந்நாட்டுக்குத் தக்கதோர் ஆட்சி முறை திட்டம் வகுத்து அமுலுக்குக் கொண்டுவரா முன்பு இந்த சபை கலையாது" என்று கூறிவிட்டது. அரண்மனையிலே மன்னன், அன்னக் காவடிகள் அரசாள நாங்கள் வழி அமைத்துத் தருகிரேம் என்று கூறுகின்றனர் வெளியே!

அரண்மனைக்குள்ளே ஆர்ப்பாட்டக்காரர் கூடினர். அரசனுக்குத் தூபமிட்டனர். அதிகார வெறியை ஏவிவிட்டனர் துருப்புகள் பவனி வரத் தொடங்கின, புயல் வலுத்தது!

"போக்கிரிகளைச் சுட்டுத் தள்ள வேண்டும்"

"காலாடிகளிடம் நாட்டை விட்டு வைப்பதா?"

"பிடித்துத் தள்ள வேண்டும் பாஸ்டிலியில்."

"துருப்புகளுக்கு உத்திரவுப் பிறப்பித்தால் வெறி நாய்களைச் சுட்டுத் தள்ளமாட்டார்களா?"

"மன்னனை மதிக்காமல் மமதை

யோடு கூவும் இந்த மக்களைக் கண்டு நாம் சும்மாயிருப்பதா?"

"மானம் போகிறதே"

"பரம்பரைக் கௌரவம் பாழாகப் போகிறதே."

"கிளம்புவோம், சிதறடிப்போம்" சீமான்கள் சிலர் கூடினர் அரண்மனையில், ஆணவத்தை இதுபோல் கக்கினர் கடைசி முறையாக! ஆளத்தெரியாத மன்னன் மக்களின் ஆத்திரக் கடலைக் கடக்க இந்த மண் குதிரை மீது ஏறிக்கொண்டான். மக்களைக் கூட்டிய மன்னன், பிறகு அவர்களை கடுமையான முறையினுலே அடக்கு



தோழர் சி. பி.சிற்றரசு


வது என்ற விபரீத எண்ணம் கொண்டான். புயலை எதிர்த்தான்! சீறும் நாகத்தின் முன்பு சிறு பிள்ளையாட்டமாடினுன்.

### அந்த நாள் மக்களின் நன்னுள்

மக்கள், மன்னரின் படை கிளம்புவது கண்டனர். கையில் கிடைத்ததை எல்லாம் தூக்கினர். 1789 ஜூலை 14-ந் தேதி போர்க்கோலம் பூண்ட மக்கள் எங்கே பாய்ந்தனர்? பாஸ்டிலி! மன்னன் அடக்குமுறையைத் துவக்கத் துணிந்தான் என்று தெரிந்தும் மக்கள் மனதிலே தோன்றிய முதல் எண்ணம் பாஸ்டிலி! பாஸ்டிலிதானே நம்மைப்போன்ற ஏழைகளைச் சீமான்களின் ஏதேச்சாதிகாரத்தை எதிர்க்கத் துணிந்தவர்களைக் கொடுமை செய்யும் இடம். நாமும் சிக்கிக்கொண்டால் அந்தப் பாழும் சிறைச்சாலைக்கு இழுத்துச் செல்லப்படுவோம். யாரால் சகிக்க முடியும் இந்த இம்சையை? அந்தோ! எவ்வளவு பேரை இம்சித்த இடம் அந்த பாஸ்டிலி! பாஸ்டிலி ஒழிக! ஒழிக கொடுமை!! என்று புரட்சி முழக்கமிட்டது! அந்தப் புரட்சிக் கீதம் எழும்பிய நாள்தான் ஜூலை 14!

புரட்சிப் புயல் பாஸ்டிலியைத் தூள் தூளாக்கியது! எங்கணும் வெற்றி முழக்கம் கேட்டது. அந்த வெற்றி முழக்கத்தை எழுப்பிய நாள்தான் ஜூலை 14!

—



பி. வி. முத்துசாமி
(ஆசிரியர், "முன்னேற்ற முரசு"

# கலாட்டா சர்வீஸ்!

காஞ்சி. செங்குட்டுவன்

"கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆகிவிட்டது. ஐயோ! பவாம்!

கனம் கழுதையாருக்கு இன்றைய தினம் மக்கள் மன்றத்தில் கொடுக்கப்படும் உபசாரப் பத்திரம் இது.

உண்மை ஆனாலும் வேடிக்கை எப்படி வந்தது? ஏன் வந்தது என்பதை சிந்திக்குங்கால் சிரிப்பை அடக்க முடியவில்லை நம்மால் அந்த அளவிற்குத்தான் வந்துவிட்டது. இன்றைய காங்கிரஸ் சர்வீஸ். கனம் மோதிலால் நேரு போன்ற மாபெரும் தலைவர்களால் துவக்கப்பட்ட சர்வீஸ்; காந்தி மகாத்மாவால் வெற்றிகரமாக நடத்திச் செல்லப்பட்ட சர்வீஸ் வீரகட்டபொம்முவின் விமலாவை முறியடித்த சர்ளிஸ் தாலமுத்து நடராசன் தளிர் உடல்களை தணலில் பொசுக்கிய சர்விஸ்தில்லையாடி வள்ளியம்மாளின் வாழ்க்கையை பாலை வனமாக்கிய சர்விஸ் சுபாஷ்சந்திர போஸின் சூடேறிய இரத்தத்தைச் சுவைத்த சர்விஸ், சுதந்திரக்கோட்டையைக்காண வேண்டுமென்று துடிதுடித்த எண்ணற்ற இளைஞர்களை ஏற்றிக்கொண்டு சென்றிருந்த சர்விஸ் குமரி முதல் இமயம் வரை குதூகலமாக ஐடிக் கொண்டிருந்த சர்விஸ் கடந்த 30 ஆண்டுகளாக கண்ணியமாக ஓடிக் கொண்டிருந்த காங்கிரஸ் சர்விஸ் இன்று ஒரு சில எத்தர்களின் கையில் சிக்கிய காரணத்தினுல் அதுவும் ஓட்டத் தெரியாத காரணத்தினுல் கண்ணைக்கவரும் அழகான அகிம்சைப் பாதையை விட்டுவிட்டு, கரடுமுரடு நிரம்பிய காட்டுப் பாதையிலே கரடியும், காட்டெருமையும் வாழும் வனத்திலே மேடும் பள்ளமும், கல்லும், முள்ளும் நிரம்பிய ஒற்றையடிப்பாதையிலே, கண்ணியவான்களையும், கனதனவான்களையும் விட்டுவிட்டு கைக்கூலிகளையும், கயவாளிகளையும், கள்ளர்களையும், கொலைஞர்களையும் எத்தர்களையும், ஏடுஏந்திகளையும், ஏனோதானோக்களையும், கழுதைகளையும், காமராசர் கூட்டத்தையும்காலிகளையும், கூலிகளையும் கைக்கூலி வாங்கி கல்லெடுத்து அடிக்கும் ஆட்டு மந்தைக் கூட்டத்தையும் ஏற்றிச் செல்லும் நிலைமைக்கு வந்துவிட்டது, இல்லை யில்லை. நிலைமைக்கு கொண்டுவரப்பட்டது. நினைத்தாலே நெஞ்சம் குமுறுகிறது. "நீதிக்கும் நேர்மைக்கும் கட்டுப்பட்டு அறியாமையையும், அக்கிரமத்தையும் அடித்துத் துரத்தி, அறிஞர்கள் போற்றும் அழகான அண்ணல் காந்தி மகாத்மாவின் அரசியல் நம் நாட்டில் ஏற்படப் போகும் புனித நன்னாளை எதிர்ப்பாருங்கள் பாரத புத்திரர்களே! நமக்குச் சுதந்திரம் வந்துவிட்டால்நாயினும் கேவலமாக வாழ்ந்திருந்த வாழ்விற்கு வழி கிடைக்கும். வண்ணக் களஞ்சியங்கள் வழியெல்லாம் வளர்க்கப்படும். நிம்மதியற்ற நிலையில், நேற்றுப் பிறந்த குழந்தை கூட, 'வாள்வாள்' என்று பசியால் கத்த, கத்துகின்ற அக் குழந்தையின் பசியைப் போக்கக் கூட நம் உடம்பில் போதிய பால் இல்லையே என்று பெற்றெடுத்த தாய் நினைத்து நினைத்து ஏங்க, ஏக்கத்தின் எதிரொலியில் அன்னையின் குழி விழுந்த கண்களில் நீர் ஆற்று ஊற்றெனப் பெருக, "உன்னை ஈன்றெடுத்ததின் பலன் இதுதானடா கண்ணே என்று இருக்கின்ற மூச்சையும் ஒன்று கூட்டி அவள் உரைக்க உயிரையே அர்ப்பணித்து, அல்லலிற்கும் ஆனந்தத்திற்கும் இடையில் அகப்பட்டு அல்லல் படுகிறார்களே தொழிலாளிகள்! அவர்கள் கஷ்டப்படாமல் வாழ வளமான வழி வகுத்துத் தருவோம். வயிரார வேண்டியதையெல்லாம் உண்ணுங்கள்: தெருவிலே தேன் ஆறு ஓடும். ஆற்றிலே அன்புப் பெருக்கால் பால் ஆறு ஓடும் ஆனந்தக்களிகூத்தாடி பருகுங்கள் அன்பர்களே! அப்படிப் பருகுவதற்கு ஆனந்தமான சுயராச்சியம் வேண்டாமா? இருப்பதையெல்லாம் சுரண்டி இங்கிருக்கும் பொருள்களையும், தங்கக்கனிகளையும், நிலக்கரிச் சுரங்கங்களையும், ஏகபோக உரிமையையும் அவர்கள் கைக்கீழ்ப் போட்டுக்கொண்ட அரக்கரர்கள் ஒழிய வேண்டாமா? அப்படி ஒழிப்பதற்கு உங்கள் கூட்டு முயற்சி வேண்டும். என்று விலா எலும்பு முறியக் கூறிய காங்கிரஸ் சர்விஸ்தான் கனதனவான்களால் போற்றப்பட்ட சர்விஸ்தான் இன்று காறி உமிழும் அளவிற்கு கலாட்டா சர்விஸாக மாறியிருக்கிறது. மார் தட்டிப் பேசிய தோழர்கள் இன்று மறைந்து மறைந்து முக்காடு போட்டுப் பேசும் அளவிற்கு வந்து விட்டார்கள் குருதியைக் கொட்டிப் பாரத மாதாவின் பழியைத் துடைத்த பாரத புத்திரர்கள் குலத்துரோகிகளாக குண்டாந்தடி பிடிக்கும் அளவிற்கு அறிவைப் பாழ்படுத்திக் கொண்டார்கள் இதற்குக் காரணம் என்ன? ஏன் இத்தகு நிலைவந்துள்ளது என்பதைச் சிந்திக்குங்கால் நமக்கு நல்லகண்ணுப்பிள்ளை வைத்து நடத்திக் கொண்டிருந்த, நாராயணன் மோட்டார் சர்வீஸ்'தான் ஞாபகம் வருகிறது' அந்த மோட்டார் வண்டியில் ஏறிச் சென்ற அத்தனை பேரும் "ஆஹா! இந்த மோட்டார் எவ்வளவு அழகாகச் செல்கிறது. வண்டி என்ருல் இப்படியல்லவா இருக்கவேண்டும், ஏரோப்பிளேன் மாதிரியல்லவா ஆடாமல்அசையாமல் செல்கிறது என்று புகழ்ந்தார்கள். ஆனல் நாளாவட்டத்தில் ஓட்டுகின்ற ஆள்மாறி. அதில் இருக்கும் சாமான்கள் பழுதுபட்டு, அதற்குப்பதில்



திருப்பத்தூர் (வ. ஆ.) பேச்சுரிமை-எழுத்துரிமை மாநாட்டில் பெருவாரியான தாய்மார்கள் கலந்துகொண்டு நிகழ்ச்சிகளை ஆர்வமுடன் கவனிக்கும் காட்சி

உடைந்ததும், உடைசல்கள் போட்டு போகின்றபோது, 'கட்டை வண்டியாவது கொஞ்சம் நல்லாப் போகும். அதைவிடக் கேவலமாகவல்லவா செல்கின்றது. உடம்பிற்கு நோய் இல்லாதவன் கூட இதில் கொஞ்சநேரம் உட்கார்ந்து சென்ருல், போதும்போல இருக்கிறதே! புரியாத வியாதிகள் எல்லாம் வந்து புகுந்துகொள்ளுமே! உல்லாச வாழ்வு கிடைக்கும் என்று வந்தால் உயிருக்கல்லவா ஆபத்து வந்திருக்கிறது' என்று கூறுகிருர்கள். அன்று உட்கார்ந்து சென்ற அதே மக்கள்தான். ஆனலும்புகழவில்லை. இகழ்கிருர்கள். இதற்குக் காரணம் என்ன?

நன்ருக இருந்த வண்டி நாளா வட்டத்தில் பழுதுபட்டது, அதோடு ஓட்டுகின்ற ஆளும் மாறிவிட்டான் அதனல்தான் வண்டியும் கெட்டு விட்டது. இந்த அளவிற்குத்தானே முடிவு கட்ட வேண்டியிருக்கிறது. காங்கிரஸ் சர்விஸ்பற்றி மனதில் மகிழ்ச்சி ஊட்டிய அந்த சர்விஸ் சலித்து காரி உமிழும் அளவிற்கு ஏன் பெயரெடுத்தது? அங்கேதான் உள்ளது அதன் சூட்சமம். சர்விஸை நடத்திக்கொண்டிருந்த நல்ல கண்ணுவிற்கு பண ஆசை ஏற்பட்டு விட்டது. பட்டமும் புகழும்பெரிதாகத் தோன்ற வில்லை. பணம் தான் பெரிதாகத் தெரிந்தது அவருக்கு. அதனல் பழுது ஏற்பட்ட அந்த மோட்டார் வண்டியின் சாமான்களை கிடைத்த லாபத்தைக் கொண்டு புதிய சாமான்கள் வாங்கிப் போட பின்வாங்கினன். 'புதிய சாமான்கள் போடாத காரணத்தினல் வண்டி நன்ருக ஓடாது அதனல் எனக்குக் கெட்ட பெயர் ஏற்பட்டுவிடும் என்று முன்பு ஓட்டிக் கொண்டிருந்த மோட்டார் ஓட்டி முந்தவும் நின்றுவிட்டான். அந்த இடத்திற்கு அன்னக்காவடி ஆறுமுக... அரைசாண் வயிறு உணவு கிடை... காதா என்று வலிய வந்து புகுந்தான்... புளகாங்கிதம் அடைந்தான் நல்... கண்ணு. ஓட்டை வண்டியையு... ஓட்டிச் செல்லும் சாமர்த்தியசா... என்று புகழ்ந்தான் அவனை. ஆன... அது ஆறுமுகத்திற்குத் தெரியும் பெரிய... இடத்து விஷயங்கள் இப்படித்தா... னென்று.

இதிலிருந்து என்ன முடிவு கிடைக்கிறது நமக்கு! இந்த நிலைக்குத்தான்... இன்றைய தினம் நமது ஆகஸ்ட... அண்ணத்தைகள் நடத்தும் காங்கிர... சர்விஸ் வந்துள்ளது.

வழியிலே போகும் வம்பளப்பவர்கள் கூறும் கூற்ரு? இல்லை, தின்... கொழுத்து கொட்டாவி விடும் வி... பன்னர்கள் பேசும் பேச்சா? அல்ல... பாட்டாளி மக்களின் சூடேறிய இர... த்தையும், சதையையும், நரம்பையு... எலும்பையும், நொறுக்கிக் கட்டி... மாளிகையில் இருக்கும் பிர்லாக்க... கூறுகிருர்களா? அல்லது பண ... டையையே படுக்கையறையா... கொண்டிருக்கும் பனியாக்க... கூறுகிருர்களா? அல்லது டா... வாழ்வு நடத்தும் டால்மியாக்கள் ... கிருர்களா? என்று கேட்டால், ... லவே இல்லை.

பின் யார்தான் கூறுகிரு... ஆகஸ்ட் அண்ணத்தைகள் நடத்... காங்கிரஸ் ஆட்சி கெட்டுவிட்டதெ... கோபப்படாமல் கேளுங்கள் கூறு... றேன்: அதிலே ஒருகாலத்தில் ஆ... மாகச் சென்று கொண்டிருந்த ... பாரத புத்திரர்கள்தான்! இந்... தேவி ஈன்றெடுத்த நாற்பது கோடி... கள் தான். அவர்களைச் சூழ்ந்து நி... அகில உலக அண்ணல்கள்தான்...

சுயராச்சியம் கிடைத்து விட்... சுகபோகம் கிடைத்துவிடும் எ... எண்ணி ஏமாந்த ஏமாளிகள் கூ... ருர்கள். வெள்ளையன் ஓடி விட்ட... விலா எலும்பு முறியக் கத்த வே... டிய நிலைமை ஏற்படாது என்று... திக் கத்திச் சென்ற காங்கிரஸ் பி... கள்தான் கூறுகின்றன அடி... வாழ்வு ஒழிந்துவிட்டால், ஆனந்தம... இருக்கலாம் என்று எண்ணி ஏமா... எழிலான உடம்பை அடகு வைத்... சென்ற பாரத புத்திரர்கள் கூறுகி... கள். அமுதம் உண்ணலாம் என்... எண்ணி, ஆலகால நஞ்சிற்கு ஒப்பான... கத்தாழையைத் தின்று பொழு... போக்கும் கன்னித் தமிழ் நாட்ட... கூறுகிருர்கள்: பத்தடுக்கு மாடியில்... பவனி வரலாம் என்றெண்ணி, ... போக்க வழியில்லாமல் பச்சிள... குழந்தைகளை பஜாரிலே விற்... பாட்டாளி மக்கள் கூறிகிருர்கள். க... ணியமான வாழ்வு நடத்தலாம் என்றெண்ணி, கண்ணீர்ப் புகையையும், கையாட்களின் கலாட்டாவையும் கண்

(அடுத்த பக்கம் பார்க்க)



மறைந்த மாவீரன் கே. வி. அழகிரிசாமி

## எடுத்துச் சொல்வோர் இல்லை

"பணக்காரர்கள், தங்கள் லாபத்தில் நாவில் ஒன்று, மூன்றிலொன்று, பாதி, இன்னும் அதிகமாகவே கூட வருமான வரி கொடுக்கிறதாகவும் அடிக்கடி நினைவுபடுத்துகிருர்கள். ஆனல், ஏழைகளோ, தங்கள் கூலியை அப்படியே வாடகையாகக் கொடுத்துவிட வேண்டியதாயிருப்பதுடன் தாங்கள் சுதந்திரமாக இருந்தா எவ்வளவு வேலை செய்யவேண்டியிருக்குமோ அதனினும் இரண்டொரு மடங்கு நாள்தோறும் அதிகமாக உழைக்கவேண்டியிருக்கிறதே என்பதை எடுத்துச் சொல்வோர் யாருமில்லை."

—பர்னுட்ஷா

# சென்னைக்கு வாரீர் செயலாற்றிட சேரீர்!

திராவிட முன்னேற்றக் கழகம் மக்கள் மன்றத்திலே மகத்தான சக்தியாக வளர்ந்து வருகிறது. அது பொருளாதார ஏகாதிபத்தியத்தை வைதிகக் கொடுங்கோன்மையை ஒழித்து, தன்மானம் தழைத்திடும் திராவிடக் குடி அரசு அமைக்கப்பாடுபடும் நோக்கம் கொண்டது.

திராவிட முன்னேற்றக் கழகம் தமிழகத்தில் மட்டும் 650 கிளைக் கழகங்களைக் கொண்டுள்ளது.

திராவிட முன்னேற்றக் கழகம் எல்லா மாவட்டங்களிலும் சிறந்த முறையிலே மாநாடுகளை நடத்தி, மக்கள் மன்றத்திலே, கழகக் கொள்கைகளையும், திட்டங்களையும் விளக்கியிருக்கிறது.

வகுப்பு நீதி, சீர்திருத்தம், பேச்சுரிமை, எழுத்துரிமை போன்ற தனிப்பிரச்சினைகளை ஆராயும் நோக்குடன் தனி மாநாடுகள் நடத்தியிருக்கிறது.

கலைத்துறையில் மறுமலர்ச்சி காணவும், கலைமூலம் வீழ்ச்சியுற்ற நாடு எழுச்சியுறச் செய்யவும் பல நாடகங்களை நடத்தி மக்கள் மனதைக் குளிரச் செய்திருக்கிறது.

புதிய கருத்துக்களை விளக்கியும், பழைமை எண்ணங்களின் பகுத்தறிவற்ற தன்மையை எடுத்துக் காட்டியும் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள், பல ஏடுகளைத் தீட்டி, நாட்டுக்கு அளித்துள்ளனர்.

சர்க்காரின் அடக்குமுறை, சனாதனியின் சலசலப்பு பொறாமை கொண்டோரின் எதிர்ப்பு, மாற்றுக்கட்சிகளின் மாச்சரியம், ஆகிய இடுக்கண்களைத் தாங்கிக்கொண்டு' பணியாற்றி வருவது, திராவிட முன்னேற்றக் கழகம்.

தடியடியும் சிறைவாசமும், துப்பாக்கிப் பிரயோகமும் கழகத்துக்குக் கிடைத்த பரிசுகள்!

தடை உத்திரவுகளை மீறி கஷ்ட நஷ்டம் ஏற்றுக் கொண்டிருக்கிறது கழகம். குழந்தைப் பருவத்திலேயே தியாகத் தழும்பு கிடைத்துவிட்டது.—திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு.

திரண்டுள்ள பலத்தைக்கொண்டு, நாட்டுக்கு நாசம் விளைவிக்கும் காரியத்தில் ஈடுபட எண்ணம் கொள்ளவில்லை கழகம்.

திரண்டுள்ள பலத்தைக்கொண்டு, அரசியல் இலாப வேட்டை ஆடவும் விரும்பவில்லை.

பேதமற்ற சமுதாயம், சுரண்டலற்ற சமுதாயம், தன்னரசு கொண்ட சமுதாயம் எனும் உயர்ந்த குறிக்கோள்களை உள்ளடக்கிய திராவிட நாடு திராவிடருக்கே என்ற திட்டத்துக்கு தளராது உழைத்து வருகிறது, திராவிட முன்னேற்றக் கழகம்.

தராவிட முன்னேற்றக் கழக மாநில மாநாடு, எஸ். ஐ. ஏ. ஏ. மைதானத்தில் நான்கு தினங்கள் நடத்த ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

மிகப் பெரிய அளவில் பகுத்தறிவுக் கண்காட்சி நடத்த முயற்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. வெளியூர்களிலிருந்து, கழகத்தைச் சார்ந்த ஓவியர்கள் காஞ்சியிலும் சென்னையிலும் இரவு பகலாக, சித்திர வேலைகள் செய்து வருகின்றனர்.

வீரர்களே வெற்றிப் பாசறையமைத்திட
சென்னை வரக் காத்திருங்கள்.

விளம்பரக் குழு

(முன் பக்கத் தொடர்ச்சி)

டவர்கள் கூறுகிறார்கள், போதுமா? பாருங்கள்! இப்போது கூறுங்கள் உங்கள் முடிவை. கூற வேண்டாம். சிந்தித்துப் பாருங்கள் போதும். இன்றைய ஆகஸ்ட் அண்ணாத்தைகள் நடத்தும் காங்கிரஸ் சர்விஸ், கண்ணியமானசர்விஸா அல்லது கலாட்டா சர்விஸா என்பது புரியும். புரியவில்லையென்றால் சிறிது நேரம் சிந்தனைக்கு சிமிட்டா கொடுத்துப் பாருங்கள்.

நல்லகண்ணுப் பிள்ளைக்கும், நாட்டை ஆளும் நல்லவர்கட்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது என்பது தெரியும்.

நன்றாக ஓடி, நாட்டு மக்களின் நன்மதிப்பைப் பெற்ற அந்த நாராயணன் சர்விஸ் கெட்டதற்குக் காரணம் முதலாளி நல்லகண்ணுப்பிள்ளையின் பண ஆசை என்று கூறாமலே விளங்கும் நமக்கு. இந்த நிலைதான் இன்றைய காங்கிரஸ் சர்விஸிலும்.

மோட்டார்வண்டியின் பழுதுபட்டபட்ட சாமான்களை அகற்றிப் புதிதாகப் போடாத காரணத்தினால், அதன் பெயர் கெட்டதுபோல், காங்கிரஸ் சர்விஸிலுள்ள பழுது ஏற்பட்ட 'அடிப்படை திட்டம்' என்ற சாமான்களை மாற்றாததினால், அதற்குக் கெட்ட பெயர் ஏற்பட்டது.

அடிப்படைத் திட்டம் என்ற பழுது எற்பட்ட சாமான்களை மாற்றியமைத்தால், அதிகாரம், மதிப்பு என்ற வருவாய் போய்விடுமே என்று ''யந்தார்கள் அதன் நிர்வாகிகள்—நல்லகண்ணுப் பிள்ளையைப்போல.

பழுதேற்பட்ட சாமான்களை மாற்றியமைக்காத காரணத்தினால் ஓட்டிச் சென்ற முத்து விலக நேரிட்டது வேலையிலிருந்து, திட்டத்தை மாற்றியமைக்காத காரணத்தினால் காங்கிரசை நடத்திச் சென்ற கனம்கள் அதிலிருந்து விலக வேண்டியதாயிற்று. கனம்கள் விலகிவிட்டாலும் பரவாயில்லையே! சர்விசையே ஓட்டிச் சென்ற பண்டிட் நேருகூடவல்லவா, சாமான் பழுது ஏற்பட்ட குற்றம் காட்டி நின்ற மோட்டார் ஓட்டி முத்துவைப் போல் காங்கிரஸ் சர்விஸின் அடிப்படைத் திட்டம் என்ற சாமான்கள் பழுது ஏற்பட்டுவிட்டது என்று குற்றம்சாட்டி விலகிவிட்டார்.

இது ஒன்று போதாதா காங்கிரஸ் சர்விஸ் கலகலத்துப் போய்விட்டது என்பதற்கு அத்தாட்சி! ஒழுங்கான பாதையை விட்டு விலகிவிட்டதற்கு உதாரணம் வேண்டுமா? சிந்தித்துப் பாருங்கள் ஓடிய காலத்தை.

'குன்றத்தூர்' ஒரு சிற்றூர்ப் பாதை. அங்கு ஏன் செல்லவேண்டும் இந்த சர்விஸ். சென்றதோடு மட்டுமா? எட்டு முறையல்லவா சுற்றிச் சுற்றி வந்திருக்கிறது துப்பாக்கி முறையில்.

சேலம் சிறை. செல்லவே கூடாத இடம். ஆனாலும் விட்டார்களா? இல்லை. அல்லது சென்றுதான் சும்மா திரும்பினார்களா? கிடையவே கிடையாது. இருபத்திரண்டு இளங்காளைகளின் இதயத் துடிப்பை ஒரு சுற்று சுற்றியிருக்கிறது. முடிவு—இருபத்திரண்டு இளம் பிணங்கள்.

கும்பகோணம்! பேரூர்தான்! இருந்தாலும் அனாவசியமான தலையீடு. முடிவு...முழக்கம் செய்த தோழர்களின் மண்டை பிளக்கப்பட்டது. கைகால் நொறுக்கப்பட்டது, வீதியிலே செங்குருதி பாய்ச்சப்பட்டது.

காரணமங்கலம்! சிற்றூர்! சிந்தைக்கே இடம் இல்லாத ஊர்! ஆனாலும் ஒரிரு ரவுண்டு வந்திருக்கிறது. முடிவு நூற்று நாற்பத்து நாலு.

தேனீ! தேவைக்கே வேண்டாத ஒரு இடம். மனம் வருமா விட! பட்டப் பகல்; மணி பன்னிரண்டு; பச்சாதாபம் காட்டப்படாமல்தான் ஓட்டிச் செல்லப்பட்டது, முடிவு...பச்சிளம் குழந்தையின் கதறல், பதிவிரதைகளின் பரிதாபக் கதறல் எதிரிகளின் சமாதிக்கு ஏற்ற இடம்.

இது போதாதா? இவர்கள் நடத்தும் சர்விஸின் இலட்சணத்தைத் தெரிந்து கொள்ள. இன்னும் வேண்டுமா? கண்ணெதிரே நடப்பவைகளைப் பாருங்கள்.

அறிவியக்கப் புத்தகங்கள் சுப முதல், உள்ளதை எடுத்து உரைத்தால் நூற்று நாற்பத்திநாலு அடக்குமுறைச் சட்டம், மீறினால் அரசினர் விருந்தினராகச் செல்லவேண்டும் சிறை மாளிகைக்கு, உரிமைகளையும் உள்ளத்தில் இருக்கும் உணர்ச்சியையும் எடுத்துச் சொல்லும் பத்திரிகைக்கு ஜாமீன், நடிக்கத் தடை. தாய்மார்கட்குத் தடியடி. பிச்சையெடுக்கும் நெசவாளி, தூக்கிலே தொங்கும் தொழிலாளி, பருத்திக்கொட்டையையும்; கத்தாழையையும் தின்று பரலோகம் செல்லும் பரந்தாமன். பாடுபட்டும் போதிய கூலி கிடைக்காமல் தவிக்கும் தாண்டவராயன், தாண்டவராயனை ஏமாற்றிப் பிழைக்கும் தணிகாசல அய்யர், அய்யரைப் பார்த்து நிற்கும் அம்பிகை, அம்பிகையின் முன் சதிராடும் சகுந்தலா! சகுந்தலாவைப் படைத்த பிரமன், பிரம்மனுக்குப் பாதுகாவல் புரியும் புராண இதிகாசம், அதை இகழ்ந்து இருக்கும் புளுகுகளை அம்பலப்படுத்தும் அறிஞர் அண்ணா! அவரைப் புடைசூழ்ந்து இருக்கும் நல்லதம்பிகள், நல்லதம்பிகளின் பன்னீர் உள்ளத்தை பாஷாண உள்ளமாக்க பாராளும் புண்யாத்மாக்கள் போடும் சட்டம்.

இப்போது என்ன சொல்லுகிறீர்கள் தோழர்களே!

காங்கிரஸ் சர்விஸ், கலாட்டா சர்விஸா? அல்லது காலிகள் சர்விஸா இதிலிருந்தாவது தெரிந்துகொள்ளுங்கள். இனி நமக்கு அந்த சர்வீஸ் ஏற்றல்ல என்பதை. மேலும் மேலும் அந்த சர்வீஸை நாட்டிலே நடமாட விட்டால், நம்மை நமனுலகுக்கு அனுப்பும் என்பதை சிந்தையிலிறுத்திக் கொள்ளுங்கள்.

இல்லை, இப்போதே சொர்க்கவாயிலின் கோட்டையைத் திறந்து, சொகுசான வாழ்வு வாழ வேண்டுமென்று ஆசைப்பட்டால், அதோ பாருங்கள்! "முன்னேற்றப் பாதையிலே அறிஞர் அண்ணா அவர்கள் ஓட்டிச்செல்லும் 'திராவிட நாடு சர்விஸ்' அதிலே கிளம்புங்கள். சீக்கிரம் போய்ச்சேரலாம். சொகுசான வாழ்வுடன் சுவர்ணமாளிகையிலே வாழலாம். ஊம்...கிளம்புங்கள் சிங்கார புரிக்கு!

## சோதித்தார்; — சாதித்தோம்

(T. M. G. நன்மாறன்)

வடமொழியைத் திராவிடத்தில்
வற்புறுத்த எண்ணினர்;
வலிமையுடை எதிர்ப்பினிலே
வாடியேங்கி ஓடினர்
வடவனையே வாழவைக்க
"வருக வருக" என்றனர்
வந்தவர்தாம் கருப்புக்கண்டு
வருந்தியேதான் அலறினர்

சிறந்த தமிழ் பேசினாலும்
சிறைதனிலே தள்ளினர்
"சிறையேதான் நந்தவனம்"
என்றேதான் கூறினோம்
சீர்திருத்தி எழுதினாலும்
சிரைத்தேதான் காட்டினர்
சிரைத்தாலும் கொள்கைதனை
சிதறவிடோம் என்றனம்

தேர்தலிலே ஓட்டு பெற
"தேனீ", தான் அருள்கின்றார்
தேனீதான் வளராதே
திராவிடத்தில் என்கின்றோம்
சேர்ந்தாற்போல் ஈராண்டில்
சோதித்தால் ஆள்வோரே
செம்மையுற சாதித்தோம்
செகத்தினிலே நாமேதான்

# அயலார் ஆட்சியும் தமிழக வாழ்வும்

[கா. அப்பாதுரை]

தமிழகமும் அதன் அகலப் பதிப்பாகிய தென்னாடும் வடநாட்டைப் போல என்றும் அயலவர் படையெடுப்புக்கும் ஆட்சிக்கும் குடியேற்றங்களுக்கும் உட்பட்ட நாடு அன்று. அயல் பண்பாடுகளால் அதன் வாழ்வும் பண்பும் என்றும் முழுதும் கெட்டுவிடவும் இல்லை. தென்னாட்டில் அயலார் ஆட்சி முதல் முதல் ஏற்பட்டது பிரிட்டிஷ் ஆட்சியொன்றுதான். பிரிட்டிஷ் ஆட்சியில்தான் அதன் 'தனி நாடு' அந்தஸ்துச் சீர்குலைவுற்றது.

தென்னாட்டில் பிரிட்டிஷார் ஆரிய ஐந்தாம் படையின் உதவியால் பெற்ற ஆதிக்கம் காரணமாகவே, தென்னாட்டு வீரம், செல்வம், அறிவு, ஆகிய பலவற்றின் துணைக்கொண்டு அவர்கள் வட இந்தியா, ஈழம் (இலங்கை) பர்மா மலாயா, பலூச்சிஸ்தானம் முதலிய எல்லைகளில் தம் ஆட்சியைப் பரப்பினர். பிரிட்டிஷாரின் இவ்வாசியப் பேரரசின் நடுநாயகமாய், மூலதனமாய் விளங்கிய தலைமையிடம் தென்னாடும் சென்னையுமே. ஆனால் படிப்படியாகச் சென்னையிலிருந்து கல்கத்தாவுக்கும், கல்கத்தாவிலிருந்து டில்லிக்கும் அவர்கள் தம் ஆசியப் பேரரசின் தலைமையிடத்தை மாற்றினர்.

பர்மா, நேபாளம் ஆகியவற்றின் மீதுள்ள ஆசையால்தான் அவர்கள் கல்கத்தா நாடினர். ஆப்கனிஸ்தானத்தின் மீதுள்ள ஆசையால்தான் அவர்கள் டில்லி நாடினர். ஆனால் சென்னையிலிருந்து அவர்கள் பெற்ற வெற்றியை அந்நகர்கள் பெரும்பாலும் தரவில்லை. ஆயினும் இத்தலைமையிட மாற்றத்தாலும், தமிழகத்தின் ஆரிய அறிஞர் சூழ்ச்சியாலும், தென்னாடு அல்லது திராவிடம் ஒரு தனி நாடு என்ற கருத்து மறைந்து, அது வடநாட்டின் ஒரு பகுதி என்ற கருத்து உலகில் பரப்பப்பட்டு வந்தது.

வடநாட்டுப் பேரரசுகள் எதுவும் தென்னாட்டை ஆண்டதில்லை. ஆனால் தென்னாட்டுப் பேரரசரான ஆந்திரரும் சோழரும் வடநாட்டை ஆண்டதுண்டு. அவர்கள் ஆட்சியால் முற்றிலும் ஒற்றுமைப்படாத பகுதிகள்தான் இன்று பாகிஸ்தானாகியுள்ளன. மேலும் வடநாட்டுப் பேரரசுகள் யாவும் நிலப் பேரரசுகள். கடல் வாணிபமும் கடற்படையும் வடவருக்குத் தெரியாத ஒன்று. தென்னாட்டு அரசுகளும் பேரரசுடனும் கடல் வாணிபம் பெருக்கி, கடற்படை செலுத்தியிருந்தன. பல்லவப் பேரரசரும் சோழப் பேரரசரும் நாட்டை மட்டுமன்றி ஈழம் (இலங்கை) கடாரம் (பர்மா) பொன்னாடு (மலாய்), கம்போடியா, சாவகம் முதலிய கடல்கடந்த பகுதிகளையும் ஆண்டனர். பிரிட்டிஷ் பேரரசும் வாணிபமும் பெரும்பாலும் தமிழ்ப் பேரரசுகளையும் வாணிபக் களங்களையுமே கைப்பற்றி பரந்தன என்பது கவனிக்கத்தக்கது.

ஆரியம் வடநாட்டில் தாய்மொழிகளை அழித்துத் தாய்மொழி வாழ்வைக் கெடுத்துவிட்டது. ஆனால் தென்னாட்டில் அது சமய வாழ்வில்தான் புக முடிந்தது. தென்னாட்டு மொழிகளாகிய தெலுங்கு, கன்னடம், மலையாளம், தமிழ் ஆகியயாவும் திராவிட மொழிகளாகவே இயங்குவதுடன், வடநாடு என்றும் கரை காண முடியாத பழம் பெரும் இலக்கியங்களை உடையவையாக உள்ளன. தமிழ் இன்னும் ஆரியத்தை எதிர்த்து அதனைத் தலைவணங்கச் செய்து வருகிறது.

வெள்ளையர் ஆட்சியில் ஆரியமும் ஆரியரும் ஆரியமொழிகளும் எத்தனையோ சலுகைகளைப் பெற்றன. ஆயினும் மேல் நாட்டுப் பண்பாடும் பகுத்தறிவும் பரந்தன. கல்வி ஒரு சாதிக்குக்குரியது என்ற நிலை மாறி எல்லா வகுப்பினரும் கல்வியொளியும் பகுத்தறிவுவொளியும் பெற்றனர் மேல் நாட்டு இலக்கிய அறிவு தாய்மொழிப் பற்றையும் தாய்மொழி இலக்கியப்பண்பையும் தூண்டி வளர்த்தது. மறுமலர்ச்சி இயக்கம் பரந்தது. மற்ற இடங்களில் தாய்மொழி மறுமலர்ச்சியியக்கமாக மட்டும் நிலவிய இவ்வியக்கம் தமிழகத்தில் முழுத் தேசிய மறுமலர்ச்சியியக்கமாக, முழுப்பகுத்தறிவியக்கமாக வளர்ந்து வருகிறது. அயல்மொழி எதிர்ப்பியக்கமாகிய இந்தி எதிர்ப்பியக்கம், தாய்மொழிப் பாதுகாப்பியக்கமாகிய தனித்தமிழ் இயக்கம், மக்கள் பண்பாட்டியக்கமாகிய தன்மான இயக்கம் ஆகியவை எழுந்து, தமிழகத்தின் மொழி மதில்கள் தாண்டிவருகின்றன. தாய்மொழி இயக்கம் ஏற்கனவே கன்னடத்தில் கொழுந்துவிட்டு எரிகிறது.

பிரிட்டிஷ் ஆட்சியினை முதன்முதல் எதிர்த்த வீரர் தென்னாட்டு வீரராகிய திப்புவும், கட்டப்பொம்முவுமே. பிரிட்டிஷ் கடலாதிக்கத்தை எதிர்க்கும் முயற்சியில் ஈடுபட்ட ஒரே தலைவன் கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரனாரே. அதனைப் பின்பற்றும் இனவார்வம்கூட பின்னால் வந்த வடநாட்டுத் தலைவர் எவருக்கும் இல்லை. ஆனால் பிரிட்டிஷ் ஆட்சியில் ஏற்பட்ட தீமைகளிலும் எதிர்ப்பிலும் தமிழகம் வழிகாட்டியதுபோல, அதன் நலங்களையும் முழுவதும் பயன்படுத்திக் கொண்டுள்ளது தமிழகமே என்னலாம்.

அரசியல் மறுமலர்ச்சியில் ஆசியாவின் ஒரே கவிஞனாக ஒரு பாரதியையும்; மக்கள் மறுமலர்ச்சியில் கீழ்நாட்டின் ஒரே கவிஞனாக ஒரு பாரதிதாசனையும் தமிழகம் தந்துள்ளது. ஆசியாவின் புரட்சி இயக்கங்களுள் எதிர்ப்பிடை நீந்திய புரட்சியியக்கமும் அதேசமயம் அகிம்சை முறையில் நின்றே மக்கள் ஆதரவுபெற்ற ஒரே பகுத்தறிவியக்கமும் தமிழகத் தன்மான இயக்கம் ஒன்றே. கீழ்நாட்டுக் கார்ல்மார்க்ஸ் ஆன பெரியார் ஈ. வெ. ராவும் கீழ்நாட்டின் பெர்னார்டுஷாவான அறிஞர் சி. என். அண்ணாத்துரையும் தமிழகம் தென்னாட்டின் வருங்காலத்துக்கு அளித்துள்ள திராவிடச் செல்வங்கள்.


தமிழகத்தில் எழுந்துள்ள மொழி, கலை இயக்கங்களும், பகுத்தறிவியக்கமும், சமூகத்துறையிலுள்ள தன்மான இயக்கமும் திராவிட நாட்டில் பரந்துவிட்டால், நாம் திராவிட நாட்டைப் பெறுவது மட்டுமல்ல; முற்கால நாகரீக உலகமாகிய தென் உலகில் ஒரு புதிய வல்லரசையும் ஒரு புதிய நாகரீக ஒளியையும் பரப்பியவர்கள் ஆவோம். ஆங்கில ஆட்சியின் அரையிருளிலே மீண்டும் பண்டைப் பண்பு பெற்று உயிர்பெற்ற தென்னாட்டில், இப்போது அரசியலில் நேரடியாக ஆரிய இருளாட்சி கவ்வி வருகிறது. அதனைப் பிரிட்டிஷாட்சியின்போதே எதிர்க்கத் தொடங்கிவிட்ட இந்தி எதிர்ப்பியக்கமும் திராவிட இயக்கமும் அவற்றுக்கு மூலதனமாக இயங்கும் தமிழ்நாட்டின் தாய்மொழி அல்லது தமிழியக்கமும் தென் நாடெங்கும் தழைத்தோங்கும் என்பது உறுதி.

## உலகில் உண்டா?


"மத விஷயங்களை முன்நிறுத்தி கடவுள் நம்மைப் பரிசிலனை செய்யமாட்டான் நமது செயல்களை முன்னிறுத்தியே நம்மைப் பரிசிலனை செய்வான் என்று நம்பக்கூடியவன் இந்த உலகத்தில் ஒருவனாவது உண்டா?"

—வால்டையர்.

# டில்லி ஆதிபத்யத்திற்கு சேலம் காட்டிய எதிர்ப்பு!



டில்லி மந்திரி ஜெகஜீவன்ராமை, கையில் கருப்புக் கொடிகளேந்தி வரவேற்க காத்திருக்கும் மாபெரும் மக்கள் அணிவகுப்பை தோழர் சித்தையன் தனித்து நின்று பார்வையிடும் காட்சி!




எப்பொழுது வருவார் மந்திரி என எதிர்பார்த்திருக்கிறது மக்கள் கடல்—எதிர்ப்பு அலைகளை வீச!



தோழர் ஜி. பி. சோமசுந்தரம் தலைமையில் கழக வீரர்கள் அமைச்சரின் வரவு காத்து அணிவகுத்து நிற்கும் காட்சி!

# இயக்க முன்னணி வீரர்கள்



மா. இளஞ்செழியன்
('போர்வாள்' ஆசிரியர்)




புரட்சிக் கவிஞர்



சேலம் ஏ. சித்தையன்



இயக்கத்தின் இதயம்
எஸ். வி. லிங்கம்



கன்னியாகுமரியில் கலைவாணருடன் கழக வீரர்கள்



இரா சு. தங்கப்பழம்
எழுத்துரிமை காக்க
சிறை சென்றவர்



காஞ்சியில் 23, 24—12—51-ந் தேதிகளில் நடைபெற்ற செங்கற்பட்டு மாவட்ட
திராவிட முன்னேற்றக் கழக முதல் மாநாடு: தோழர் சி. பி. சிற்றரசு
தலைமையில் அறிஞர் அண்ணா பேசிக்கொண்டிருக்கும் காட்சி



இயக்க இளைஞர்
கோடீசுவரராவ்
(ஆந்திரர்)

# உரோமபுரிப் புரட்சி

[அருப்புக்கோட்டை M. S. இராமசாமி]

ஆதிக்கக்காரரை எதிர்த்துப் புறங்கண்டு, நாட்டு மக்களுக்கு நல்லவை செய்ய நினைந்து அவதியடைந்த பெரியார்கள், அநேகர். சோம்பேறிகள், சூழ்ச்சிக்காரர்கள் ஆகியோரின் சுகவாழ்வுக்காக அரசாங்கம் நடப்பது, எங்கும் நடந்த—நடக்கின்ற உண்மை. அந்த உண்மைகளை, பல்வேறு நாட்டு வரலாறுகளும், நமக்குத் தெளிவாக அறிவுறுத்துகின்றன. ரஷ்ய நாட்டுக்கு ஜார்! பிரஞ்சு நாட்டுக்கு லூயி! இவர்கள்—கொடுமையின் வடிவங்கள்—ஆதிக்க வெறியின் சிகரங்கள்—என்றெல்லாம் வரலாறு வர்ணிப்பதால். இவர்களே அந்தந்த நாடுகளின் வரலாற்று நாயகங்களாகத் திகழ்கிறார்கள்.

இந்தக் கொடுமையாளர்களை எதிர்த்துப் புறங்கண்ட புரட்சிக்காரர்கள் மக்களின் தெய்வங்களாக மாறினார்கள், அவர்கள் தெய்வங்களாக மதிக்கப்படுவதில் வியப்பென்ன?

இத்தாலிய மக்களின் நல்வாழ்வுக்காக தனது இன்னுயிரை—பொன்னுடலை—பணயம வைத்துப் போராடி, தனது வாழ்நாளின் மிகப் பெரும் பகுதியை, அவதியிலேயே செலவிட்ட ஓர் மாவீரன் வரலாற்றையே இங்கு பேசப்போகிறோம்.

அந்த மாவீரன் யார்? அவன்தான் ஜோசப் மாஜினி! 'மாஜினி' என்று உலகத்தாரால் சுருக்கமான பெயரில் அழைக்கப்படுபவன். நாமும் அப்படியே அழைப்போம்.

ஐரோப்பாவில் உள்ள அழகிய நகரங்களில் 'ஜினிவா'வும் ஒன்று. அந்த நகரத்தில் 1805-ம் ஆண்டு ஜூன் 2-ம் நாள் மாஜினி பிறந்தான். அவனுடைய தந்தை கலாசாலை ஒன்றின் ஆசிரியர். மருத்துவத் தொழிலும்செய்வார். தாயாரோ ஓர் சரித்திர மேதை! அரசியல்வாதியுங் கூட! ஆனால், எதிலும் ஈடுபடாதவள். தகப்பனுக்கு இத்தாலிய நாட்டுப்பற்று அதிகம். இத்தகைய குடும்பம் ஒன்றில் பிறந்தவன்தான் மாஜினி. எனவே, அவன் இளமையிலேயே மற்றக் கலைகளைவிட அரசியல் கலையில் தேர்ச்சிபெற்றான். அவ்வாறு தேர்ச்சி பெறத்தக்க சூழ்நிலையும் அப்போது இருந்தது. அது என்ன?

அதுதான், இத்தாலியின் வீழ்ச்சிக் காலம். நெப்போலியன் ஆட்சிக்குப் பிறகு, இத்தாலி சின்னாபின்னமாயிற்று. அதாவது 1815-ல் முடிவான—இத்தாலியின் தோல்விக்காக, ஆஸ்திரியாவும், அதன் இளவரசர்களும், பூர்பான் வேந்தனும் போப் ஆண்டவரும், ஆளுக்குக் கொஞ்சமாக இத்தாலியைக் கூறுபோட்டுக் கொண்டார்கள். போராட்டங்களில் ஏற்படும் தோல்வியைப் போல ஒரு நாட்டுக்குக் கேடு தருவது வேறு ஒன்றுமில்லை. தோல்வி கண்ட நாடு வெற்றிபெற்ற நாட்டினரால் நசுக்கப்படுவது நிச்சயம்! ஏற்கனவே ஏற்பட்ட யுத்த நஷ்டம் ஒருபுறம். கூடவே, வெற்றிபெற்ற நாட்டாரின் யுத்த நஷ்டத்தையும் ஈடு செய்யவேண்டும் என்றால் தோல்வியுற்ற நாடு உருப்படுமா?

இந்த நிலைமை 1815-ல் இத்தாலியில் ஆரம்பமாயிற்று. அப்போது மாஜினி 10 வயது சிறுவன். அக்காலத்தில் இத்தாலிய மக்கள் பட்ட கஷ்டம் விவரிக்கமுடியாதது. நாடெங்கும் காட்டு ராஜாக்கள் தர்பார்! தாங்கமுடியாத வரிச்சுமை! எங்கும் கைக்கூலி! ஊழல்!! இதற்கிடையில் நாட்டுப் பற்றுள்ள நல்லறிவாளர்கள் கூடி 'கார்போ நாரோ' என்னும் கழகம் அமைத்தனர். அக்கழகம், இரகசியமாகவே வளர முடிந்தது. அரசாங்க அடக்குமுறைகளுக்கிடையே அக் கழகம் மக்களைப் புரட்சிக்கு தயாரித்துக் கொண்டிருந்தது. ஆனால், அந்தக் கழகத்திற்கு இத்தாலிய மக்களின் பேராதரவு கிட்டவில்லை. காரணம்: அக்காலத்திலிருந்த கொடிய அடக்குமுறைகளே! எனினும் 1820-ம் ஆண்டில் "கார்போ நாரோ" இயக்கத்தினர் ஓர் புரட்சி நடத்தினர். ஆனால், அந்தப் புரட்சி படுதோல்வியில் முடிந்தது. எனவே, புரட்சிக்காரர்கள் திசைகிடக்கத் திசை ஓடி உயிர் தப்பவேண்டியதாயிற்று.

"கார்போ நாரோ' கழக உறுப்பினர்களில் நமது மாஜினியின் தந்தையும் ஒருவர். ஆகவே, கார்போ நாரோவின் சுற்றறிக்கைகள், துண்டுப் பிரசுரங்கள் ஆகியவைகள் மாஜினியின் தந்தைக்கு இரகசியமாக வரும். அவற்றை ஒன்றுகூட விடாமல் மாஜினி படிப்பான், ஏற்கனவே, அரசியல் அறிவுபெற்ற மாஜினிக்கு, அந்த அறிக்கைகளும் துண்டுப் பிரசுரங்களும், நல்ல விருந்தாக அமைந்தன, அந்த அறிக்கைகள் மூலம் நாட்டின் நலிந்த நிலைமையை நன்குணர்ந்தான் மாஜினி! அதோடு, நாட்டுக்குத் தொண்டு செய்த நல்லோர்கள் அடக்குமுறைக்கு ஆளாகி நாடோடிகளானதும், கையில் காற்காசும் இல்லாமல், உண்ண உணவிற்கும், உடுக்க உடைக்கும், வகையின்றி உருமாறி பொது மக்களிடம் பிச்சை எடுத்து வாழ்ந்த கொடுமையையும் நேரில் கண்டான் மாஜினி.

அதுமுதல் இளமையை மறந்தான்! இன்பவாழ்வை மறந்தான்! அறிவு வந்தநாள்தொட்டு அவன்கையில்நீங்காதிருந்த அரிய புத்தகங்களை மறந்தான்! தாயை மறந்தான்! தந்தையை மறந்தான்!! சகோதரிகளை மறந்தான்!!! எந்நேரமும் இத்தாலி! இத்தாலி!! என் அருமைத் தாய்நாடு! என் தாய் நாட்டு மக்கள்!! என்கிற எண்ணங்களே இதய முழக்கமாயிற்று!!!

"புரட்சிக்காரர்கள் ஏன் தோற்றார்கள்?" என்ற கேள்வி அவன் இளநெஞ்சைத் துளைத்தது!

"கடமை! கடமை!! ஆம்! என் நாட்டு மக்கள் கடமையைச் சரியாகச் செய்யவில்லை. அதுதான் புரட்சிக்காரர்கள் தோற்றதற்குக் காரணம்!" இதுதான் அந்த 16 வயது நிசம்பாத வாலிபனின் ஆராய்ச்சி முடிவு!

கடமையைச் சரியாகச் செய்யவில்லை என்ற முடிவுக்கு, மாஜினி என்று வந்தானோ, அன்று முதல் அவனுக்கு வாழ்வு கசந்துவிட்டது! "இத்தாலிய மக்கள் சுதந்திரமும் சுபீட்சமும் அடையும்வரை நான் துக்கப்படுவேன்" "அந்தத் துக்கம் தீரும்வரை வெண்ணிற ஆடை உடுக்கமாட்டேன் கறுப்புடை அணிவேன்" என்று சூள் கொண்டான். சாகுமளவும் அவ்விதமே துக்கக் குறியான 'கறுப்புடை' அணிந்தான்.

1820-ம் ஆண்டுப் புரட்சிக்குப் பிறகும் 'கார்போ நோரி' அழிந்துபடவில்லை. ஆனால், மிக மெதுவான முறையில் வேலைசெய்து கொண்டிருந்தது. அந்தக்காலத்தில்மாஜினிகலாசாலையில் படித்துக் கொண்டிருந்தான். படித்துக் கொண்டிருக்கும்போதே அக் கழகத்தில் அங்கத்தினனானான். கலாசாலை மாணவர்களையும் உறுப்பினராகச் சேர்த்தான். கழக விதிகளும், நடைமுறைகளும் எதேச்சாதிகாரமாக இருந்தன. அதாவது:—"கழக விதிகளுக்கும், கழகத் தலைவருக்கும் எக்காலத்திலும் கட்டுப்பட்டு நடப்பேன் மீறி நடந்தால் என்னைக் கொலை செய்துவிடுங்கள்" என்று, உறுப்பினராகச் சேருமுன் ஒவ்வொருவரும் வாள் முனையில் சூளுரைக்கவேண்டும்.

இத்தகைய எதேச்சாதிகாரப் போக்குகளில் மாஜினிக்கு விருப்பமில்லை என்றாலுங் கூட, நாட்டின் விடுதலைக்காக மக்களைத் தயாரிப்பதற்கு அப்போதைய சூழ்நிலையில் 'ஜனநாயகம்' ஏற்றுக்கொள்ள முடியாததாக இருந்தது. இதை உணர்ந்த மாஜினி கழக விதிகளையும், நடைமுறைகளையும் உடனடியாகத் திருத்திவிட முயலவில்லை: கழகத்தை வலுப்படுத்துவதிலேயே கண்ணாயிருந்தான். நாட்டின் நாலாபக்கத்திலும், சிதறிக் கிடந்த பல்வேறு கழகங்களையும் கார்போ நோரியில் இணைத்தான்.

இவ்வாறு 'மறுமலர்ச்சி' பெற்ற கழகம் பெரிதும் மாணவர்களையும் இளைஞர்களையும் கொண்டதாக இருந்தது இளைஞர்கள் பயமறியாதவர்கள் அல்லவா? எனவே, ஒரு குறிப்பிட்ட நாளில் நாட்டின் எல்லாப் பாகங்களிலும் புரட்சி செய்யத் திட்டமிட்டார்கள். ஆனால், இந்த இரகசியத் திட்டங்கள் எப்படியோ சர்க்காருக்குத் தெரிந்துவிட்டது. கழகம் சிதறடிக்கப்பட்டது. மாஜினியும் கைது செய்யப்பட[illegible] "புரட்சி இயக்கத்திற்கு ஆள் சேர்ப்பவன்" என்ற குற்றம்சாட்டப்பட்டு 'சாவோனா' சிறையில் தள்ளப்பட்டான். ஆயினும் குற்றத்தை மெய்ப்பிக்கத்தக்க சாட்சிகள் இல்லாததால் மாஜினியை சட்டப்படி தண்டிக்க முடியவில்லை. ஆகவே, "மாஜினி பாதுகாப்புக் கைதியாக இருக்கவேண்டும் அல்லது நாட்டை விட்டு வெளியேறவேண்டும்" என்று நிர்ப்பந்தம் செய்தது சர்க்கார்! "பாதுகாப்புக் கைதியாவதைவிட நாட்டை விட்டு வெளியேறுவதே மேல்" என்ற முடிவுக்கு வந்தான் மாஜினி. 1831-ம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் தான் பிறந்த தாய்நாடு தவித்துப் புலம்ப லியான் நகரில் குடியேறினான்.

மாஜினி, இவ்வாறு நாடு கடத்தப்பட்டதற்கு காரணம்: அவன் செய்த குற்றங்களினால் அல்ல! அவன் சிறைபிடிக்கப்பட்டவுடனே, தீவிர வாதிகளான 'கார்போ நோரி' இளைஞர்கள் இத்தாலியில் கலகம் செய்ய ஆரம்பித்தார்கள். ஆஸ்திரியப் பிரதேசத்திற்கும், போப் ஆண்டவர் நாடுகளுக்கும் படை எடுத்துச் சென்றார்கள். ஆனால், ஆயுதந்தாங்கிய சர்க்கார் படையுடன் போர் செய்ய முடியாததால், புரட்சிப் படை தோல்வி கண்டது. இந்தக் கலகந்தான் 1831-ம் ஆண்டுப் புரட்சி என்று சரித்திரக்காரர்கள் கூறுகிறார்கள். இந்தப் புரட்சிக்கு வித்திட்டவன் மாஜினிதான் என்பதை இங்கு குறிப்பிட வேண்டிய அவசியமில்லை. இதே காரணந்தான் அவனை நாடு கடத்தியதுமாகும்.

நாட்டைவிட்டு வெளியேறிய மாஜினி லியான் நகரில் இருந்து கொண்டே புரட்சியை ஆராய்ந்தான். 'புரட்சி' தோற்றது என்ற உடனே "அதற்குக் காரணம் என்ன?" என்று ஆராய்ந்தான்.


"பெரியவர்கள் இளைஞர்களின் போக்குக்கு முட்டுக்கட்டையாக இருந்தார்கள். கழகத்திற்குள்ளேயே வயதானவர்களும் இளைஞர்களும் பிரிந்துவிட்டார்கள், எனவே, புரட்சி வலுப்படவில்லை—தோற்றது."

இதுதான் அவன் கண்ட முடிவு உடனே லியானை விட்டு வெளியேறி மார்சேல் நகருக்கு வந்து சில 'கார்போ நாரி' இயக்கத் தோழர்களுடன் கலந்து கொண்டு திட்டம் வகுத்தான். அந்தத் திட்டம்:—

'நாட்டைப் பாதுகாக்க வேண்டியவர்கள் இளைஞர்களே! அவர்களுக்குள்ள ஆண்மை. நெஞ்சுரம், முயற்சி முதலியன பெரியவர்களிடம் இல்லை. 40 வயதுக்கு மேற்பட்டவர்கள் புரட்சிகரமான அரசியல் இயக்கத்திற்கு பயன்படமாட்டார்கள். "எனவே 40 வயதுக்குட்பட்ட இளைஞர்களைக் கொண்டதோர் கழகம் நிறுவவேண்டும்"

இந்தத்திட்டத்தின் அடிப்படையில் நிறுவிய கழகந்தான் 'நவீன இத்தாலி' என்பது,

இவ்வாறு மார்சேலில் நாலைந்து இளைஞர்கள் துணையோடு ஆரம்பிக்கப்பட்ட இத்தாலிய இளைஞர் கழகம் துவக்கத்தில் ஐந்து உறுப்பினர்களோடு துவங்கி 1833-ம் ஆண்டில்



தி. மு. க. பிரச்சாரக்குழு செயலாளர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.,



நீதிமாணிக்கம்-தூத்துக்குடி



மதுரை எஸ். முத்து



கே. வி. கே. சாமி

"நான் வாலிபப் பருவத்தின் கற்பனைக் கண்களிலே சித்தரித்த ரோம் எதிர்காலரோம். எனது உயிர் சாவு முனையிலே ஊசலாடிய நேரத்தில்—கப்பல் உடைந்து கலக்கமுற்ற நேரத்தில்—அமெரிக்க வனாந்திரங்களிலே தேசப் பிரஷ்டம் செய்யப்பட்டு அலைந்த நேரத்தில் என் இதயத் திரையிலிருந்து அழிக்கப்பட முடியாத பொன் நகரம். என் வாழ்க்கையின் புத்துணர்ச்சி; நிர்மாணிக்கப்பட



தொண்டர்க்குத் தொண்டர்
ராம. சுப்பையா

வேண்டிய புது நாட்டின் எழிலுருவம். இந்தக் கருத்து என் எண்ணத்தில் தலை தூக்கி நின்ற நேரத்திலெல்லாம் அவனியிலேயுள்ள அத்தனை பொருள்களிலும் அருமையாகப் பட்டது ரோம் நகரம். என்னைப் பொறுத்தவரையில் ரோம்—ஐக்கிய இத்தாலியின் சின்னமாகிய ரோம், இத்தாலியாகவே காட்சியளித்தது" இந்த மணிமொழிகளைக் கூறியவன் இத்தாலியின் இணையற்ற வீரன் கரிபால்டி. இனது வாழ்க்கை விடுதலைப் போராட்டத்தின் வீரகாவியம். தியாகத்தன்மைக்கோர் எடுத்துக்காட்டு. தாயகத்தின் உரிமைப் போராட்டத்திற்காக அவன் பட்ட தொல்லையும் துயரும், இன்னலும் இடைஞ்சலும் விடுதலை வீரர்களுக்கோர் படிப்பினை. அவன் காணவிரும்பிய அன்னைத் திருநாட்டின் அழகுத் தலைநகர்மீது அவன் கொண்டிருந்த அடங்காத ஆவலின் தொகுப்புதான் மேலே தீட்டியுள்ள வார்த்தைகள்.

இத்தகைய கரிபால்டி நைஸ் (Nice) என்ற இடத்திலே 1807-ம் ஆண்டு ஜூலைத்திங்கள் 4-ந்தேதியன்று சாதாரண எளிய குடும்பத்திலே தோன்றினான். அந்த நேரம் அரசியல் நிலைமை அல்லோல கல்லோலமாய் இருந்தது. கரிபால்டியின் பெற்றோர் அரசியலிலே ஆர்வங் காட்டவில்லை. குடும்பத்தைக் காப்பாற்றவும் குறும்புக்காரச் சிறுவனை சமாளிக்கவுமே அவர்களுக்கு நேரம் போதவில்லை. இளமைப் பிராயத்திலே கடலோரத்திற்குச் சென்று மாலுமிக்களிடம் நட்புக் கொண்டான் மலை வெளிகளிலே துப்பாக்கியைத் தோளிலேந்தி சுற்றித் திரிந்தான். பள்ளிக்கூட வாழ்வில் பகைமை கொண்டான். எங்கு இளைய கரிபால்டி கடல் வாழ்வை மேற்கொண்டு விடுவானோ என அஞ்சினர். கவலை கொண்டார். இதுவே தந்தைக்கும் தனயனுக்கும் இடையே வளர்ந்த கருத்து வேற்றுமைக்கும் காரணமாகியது. பள்ளி வாழ்க்கை சலிப்பூட்ட, வீட்டிலேயே தங்கியிருந்த வேதனை வாழ்வும் வெறுப்பூட்ட, குறும்புக்கார கரிபால்டி ஓர் நாள் தனது உற்ற தோழர்களிடம் ஜினோவாவுக்கு ஓடி விடுவோம், உல்லாச வாழ்வை அங்கே அமைப்போம் என்ற யோசனையைத் துணிந்து உரைத்தான் தோழர்கள் தலையசைத்தனர். சில ஏற்பாடுகள் தயாராயின. படகுப் பயணம் பரவசமளித்தது ஆனால் நெடு நேரமல்ல. சில மைல்கள் தான் கடந்திருப்பர். அவனது தந்தையாரால் ... அவர்களைப்

நிகழ்ச்சி கரிபால்டிக்கு மிகவும் மன வாட்டத்தைத் தந்தது. அவர்கள் வீட்டிலிருந்து வெளியேறியதை ஓர் பாதிரி அம்பலப் படுத்திவிட்டான். இதுவே அவர்கள் சிக்கியதற்குக் காரணம். இந்தச்சம்பவத்தின்காரணமாய் அந்த விடி முதற்கொண்டு பாதிரிமார்களையும், மத குருக்களையும் வேம்பென வெறுத்தான். தந்தை இவன் மீது நம்பிக்கையை இழந்தார். கப்பலில் வேலை செய்யும் பையனாக அமர்த்தப்பட்டான். சுறுசுறுப்பும் தைரியமும் இவன் உடன் பிறந்த பண்புகள். விறு விறுப்பும், வேடிக்கை மனோபாவமும் அவனிடம் அமைந்திருந்தன. ஆனால் பல நேரங்களில் மௌனமாய் சிந்தனையிலாழ்ந்திருந்தான். அவன் உள்ளத்தைக் கவர்ந்த புத்தகம் ஏதாவது அகப்பட்டு விட்டால் ஆலிவ் மரத்தடியில் உட்கார்ந்துகொண்டு அதனுடன்ஐக்கியமாகி விடுவான். வேடிக்கை விளையாட்டுகளால் அவனை கலக்க வேண்டுமென்று விரும்புகிற நண்பர்களின் முயற்சி வெற்றியடையாது, தோல்வியேயுறும். அவனது மதுரமான குரலிலே உழவர்களின் பண்களையும், செம்படவர் பாட்டுகளையும் பாடுவான். பிரஞ்சு கீதங்களிலே அவனுக்கு அலாதியான மோகம். நீந்துவதிலே நிகரற்றவன். நீரிலே அவன் நீச்சலின் திறமையைக் கண்ட நண்பர்கள் "மீன்" என்ற அன்புப் பெயரிலே அழைத்தனர் கப்பல் தொழிலில் ஈடுபட்ட காலத்தில் ஒடிசா, ஜிப்ரால்டர், கான்ஸ்டாண்டி நோபல் முதலிய பல துறைமுகங்களைக் கண்டு களித்தான். இரண்டாவது கடற்பயணத்தின் போது "டார்டனா" (*Tartana*) என்ற கப்பல், டைபர்நதி முகத்துவாரத்திலே தங்கியது. அந்த சந்தர்ப்பம் ரோம் நகரைக் காண வாய்ப்பளித்தது. கரிபால்டியின் கற்பனைக் கண்களிலே ரோமாபுரி "அமரத்வம்" பொருந்தியதாகக் காட்சி யளித்தது. ரோம் நகரம் அவனது சிந்தனையில் கிளரிய நினைப்புகளைத்தான் பின்பு ஒரு நேரம் ஆரம்பத்திலே கூறியுள்ள வார்த்தைகளால் சித்தரித்தான்.

ஆனால் குனியோ என்ற பெயரமைந்த ஜினோவா நகரத்து குமரனிடம் உரையாடும் வரை தன்னைப் போல இன்பக் கனவுகள் கண்ட "குமுறும் எரிமலைகள்" வேறு சிலரும் இருந்தனர் என நினைக்கவேயில்லை. குனியோ "இளம் இத்தாலி" என்ற இயக்கத்தைப் பற்றி இத்தாலிய நாட்டு இளைஞர் பட்டாளத்தைப் பற்றி, விடுதலை உணர்ச்சியை வித்தூன்ற ஆணையிட்டு பணி புரியும் வீரர்களைப் பற்றி உணர்ச்சி கொப்பளிக்கும் சொற்களிலே குறிப்பிட்டான் கரிபால்டியையும் அந்த அணிவகுப்பிலே அங்கம் வகிக்க அழைத்தான். இந்த பொன்னான நிகழ்ச்சியைக் குறித்து கரிபால்டி "இத்தாலிய நாட்டின் விடுதலையிலே வேட்கை கொண்ட வீரவாலிபனை நான் கண்டபோது கொண்ட குதூகலம், கொலம்பஸ் புது உலகத்தைக் கண்டவுடன்கூட அடைந்திருக்க முடியாது" என்று கூறுகிறான்.

இந்த சமயத்தில் கரிபால்டி கப்பல் தலைவனாய் இருந்தான். தனது பயணம் முடிந்ததும் நாடு கடத்தப்பட்டு, மார்ஸ்ஸேல்ஸ் மாநகரில் வதிந்த இளம் இத்தாலியின் இலட்சிய சிகரம், மாவீரன் மாஜினியிடம் விரைந்தான்.

இந்த முக்யத்வம் பொருந்திய சந்தர்ப்பத்தைக் குறித்து 30-ஆண்டுகளுக்குப் பின் அவன் கூறிய மொழிகளாவன: "நான் இளைஞனாயிருந்த சமயத்தில் என் உள்ளத்தில் உன்னத இலட்சியங்களைத் தவிர வேறொன்றும் ஊசலாடாத நேரத்தில் எனக்கு வழி காட்டியாகவும், ஆசானாகவும் இருக்க ஒருவர் தேவைப்பட்டது. தாக...

னேன் நான். கண்டெடுத்த மாணிக்கம் மாஜினி. எல்லோரும் இருளிலே தூங்கிக்கொண்டிருந்த நேரத்தில் ஒளிவிட்ட தூண்டா விளக்கு. சுதந்தர ஜோதியை அணையாமல் பாதுகாத்த வீரன், எனது நண்பன், ஞானாசிரியன்."

காட்டுத் தீ போல், விடுதலைக் கருத்துக்கள் ஐரோப்பாக் கண்டத்திலே உள்ள பல நாடுகளிலே பரவிய காலம் மன்னாதி மன்னர்களின் மகுடங்கள் மண்ணிலே உருண்ட நேரம். இளம் இத்தாலியர் தாயகத்தின் ஒரு பகுதியாகிய சாவாய் (Savoy) மண்டலத்தின் மீது போருக்குத் தயாராயினர். ஆத்திரத்திற்குப் பாத்திரமான ஆஸ்திரியா இருக்க, புரட்டு வாழ்வு நடாத்திய போப்பாண்டவர்கள் இருக்க, பகைவர்களான பார்போனியர் இருக்க, (*Bourbons*) சாவாய் நாட்டுடன் ஏன் சமர் என்ற சந்தேகம் எழுவது இயற்கையே. ஆனால் காரணமில்லாமல் இத்தாலியக் காளைகள் களம் புகவில்லை. சாவாய் நாட்டு அதிபன், சார்டீனியா, பிட்மாண்ட் ஆகியவைகளின் மன்னன், சார்லஸ் ஆல்பர்ட் தங்களது விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவளிப்பான் என எண்ணினர். ஆனால் ஏமாந்தனர், எனவே நம்பிக்கைத் துரோகியை நாசமாக்க வேண்டுமென்ற எண்ணம் நர்த்தனம்ஆடியது. கோபக்கனல் கக்கும் இத்தாலிய வீரர்களின் கண்களிலே. சார்லஸ் ஆல்பர்ட் ஆஸ்திரியரை வெறுத்தான். ஆனால் ஆண்டவனின் அடியார்கள்" பாதிரிமார்களிடம் மனதைப் பறிகொடுத்துவிட்டான். அதன் விளைவு பாதிரிமார் செல்வாக்கு வளர்ந்தது. அவர்களின் தூண்டுதலால் விடுதலைக் கருத்துக்கள் பரவுவதை நசுக்கி கொடுமை பல புரிந்தான். இது வீரர்களுக்கு வேதனையைத் தந்தது. பிட்மாண்டிலாகட்டும்- போப்பாண்டவர் நாடுகளிலாகட்டும், சிந்தனை செய்கிற மனிதன் உயிருடன் உலவ முடியாது சீர்கெட்ட நிலை இருந்தது. மடாலயங்களின் ஒற்றர்கள் எங்கும். நடமாடினர். மாஜினியைக் குறித்து "இரவு நேரங்களிலே சிந்தனை லோகத்திலே ஆழ்ந்து தன்னந் தனியாக உலவுகிறான். என்ன பொருளைப் பற்றி சிந்திக்கிறார்கள் என்று தெரியப் படுத்தாமல் சிறு இளைஞர்கள் இப்படிப்பட்ட சிந்தனை செய்வதை நாங்கள் விரும்பவில்லை" என்று ஜினோவா நகர கவர்னர் குற்றஞ்சாட்டினார். அவ்வளவு தலைகள் அறிவுக்குப் பூட்டப் பட்டிருந்தன!

படை யெடுப்பிலே, கரிபால்டிக்கு அளிக்கப்பட்டிருந்த பணி, ஜினோவா நகரம் சென்று, கப்பற்படையிலே அதிருப்தியுற்றிருந்தவர்களுக்கு உற்சாக மூட்டி, அவர்களை போருக்கு உதவ அழைத்தது ஆனால் கப்பற் படையினர் போரிலே கலக்க மறுத்து விட்டனர். மாஜினியின் படையெடுப்பும் பலனளிக்கவில்லை மாறாக கரிபால்டி எதிரி ராணுவத்தால் வளைக்கப்பட்டு அவர்கள் கையில் அகப்படும் ஆபத்தான நிலையை அடைந்தான் ஆனால்திறமையாக தப்பிதெருக்களின் வழியே ஓடி, ஏற்கனவே தெரிந்து பழகிய ஓர் பழக்காரியிடம் அடைக்கலம் புகுந்தான். அவளின் உதவியால், உழவனின் உடையிலே ஜினோவிலிருந்து நைஸுக்கும் அங்கிருந்து பிரான்சுக்கும் ஓடினான். மார்ஸ்ஸேல்ஸ் நகரையடைந்ததும் திடுக்கிடும் செய்தியொன்றை தினத்தாள்களிலே படித்தான்.

**கரிபால்டி**
**நாடு கடத்தப்பட்டுள்ளான்!**
**கைது செய்வோருக்குப் பரிசு!!**
**அரசாங்கம் மரணதண்டனை**
**விதித்திருக்கிறது!!!**

இந்த வாசகங்கள் கொட்டை எழுத்துக்களிலே விளம்பரப் படுத்

யிலே விசித்திரம் என்ன வென்றால் கரிபால்டி முதன் முதலிலே தன் பெயரை அச்சிலே பதிர்த்த சந்தர்ப்பம் இதுதான்! தனது பெயரை ஜோசப் பேன் (Pane) என்று மாற்றினான். இரண்டாண்டுகள் தலை மறைவாய் அலைந்தான். கப்பலில் வேலை செய்கிற பணியாளாய் அமர்ந்தான். இந்த நாட்களிலே அவன் பட்ட அல்லல் சொல்லுந்தரமன்று. ஆல்பர்ட் மன்னனின் ஒற்றர்கள் எங்கும்



பட்டுக்கோட்டை சிவராமகிருட்டிணன்

உலவினர். அவனைச் சுற்றி துன்ப மேகங்களே சூழ்ந்திருந்தன. இடியும் புயலும்தான் அவனுக்கு எங்கும் தென்பட்டன. தொந்தரவைக் குறைக்க துறைமுகத்திற்குத் துறைமுகம் தாவினான். கடைசியாக நாண்டிஸ் துறைமுகத்திலிருந்து அலைகடலுக்கு அப்பாலுள்ள ரியோடி ஜனீரோ (Rio de Janeiro) வுக்குப் பிரயாணமானான்.

அதுசமயம் தென்னமெரிக்க மண்ணிலே ரியோ கிரேண்ட் (Rio Grand) மாகாணம் ப்ரேஸிலில் (Brazil) இருந்த போர்ச்கீசியர் ஆளுகைக்கு எதிராய் விடுதலை முரசு கொட்டியது. உரிமைப் போரில் ஒத்துழைத்த காரணத்தால் சில இத்தாலியர்களை விலங்கிட்டு கைது செய்து போகின்ற காட்சியை கப்பல் தளத்திலே இருந்து கண்டான். இந்தக் காட்சி அவனது இருதயத்தை மட்டுமல்ல, கருத்தையும் குலுக்கிவிட்டது. "எனது தாயகத்தின் புதல்வர்கள் கைது. அவர்களின் கரங்களிலே விலங்குகள்; அவர்கள் செய்த ஒரே குற்றம் விடுதலைக் கிளர்ச்சியிலே பங்கு கொண்டது. அவ்வளவுதானே! நான் மட்டுமென்ன? எந்த இத்தாலிய பூமியிலே அவர்கள் தோன்றினரோ அந்த இத்தாலிதானே எனது பிறப்பிடம். எந்த உன்னதமான லட்சியத்திற்காக அந்த அஞ்சா வீரர்கள் அடக்குமுறைகளையும் அல்லல்களையும் புன்னகையுடன் ஏற்றுக் கொண்டுள்ளனரோ அந்த இலட்சியத்திற்காக நானும் எனது உடல், பொருள், ஆவி தரத்தடவேன். இது ஆணை" எனக் கூறி உரிமைப்போரில் கலந்தான்.

பனிரெண்டு தோழர்களைத் துணையாகக் கொண்டு மீன் பிடிக்கும் பெரிய படகிலே ஆயுதபாணியாய் போர்ச்சுகீசியருக்கு எதிராக புயலெனக் கிளம்பினான். அந்தப் படகிற்கு "மாஜினி" என்று பெயர் சூட்டினான். ப்ரேஸில் கடற்கரையோரத்திலே சுதந்திரக் கொடியைப் பறக்க விட்டது அதேப் படகே. அந்த நெருக்கடியான நாட்களில் பிரேஸில்மக்கள் மாவீரன் கரிபால்டியின் பெயரைக் கேட்டு மருண்டனர்! ஆனால் அவனது அஞ்சா நெஞ்சம், ஆண்மை பராக்கிரமம் ஆகியவை பலரின் பாராட்டைப் பெற்றன. ஒரே நேரம் மாற்றானது துப்பாக்கி குண்டினால் மார்பிலே காயமுற்று மரணத்தின் தலைவாயிலிலே படுத்திருந்தான் பல நாட்கள். பிறிதோர் சமயம் எதிரிகளால் கைது செய்யப்பட்டு சிறைக்கூடத்திலே தள்ளப்பட்டு சித்ரவதை செய்யப்

(26-ம் பக்கம் பார்க்க)

# சீனப் புரட்சி...

(4-ம் பக்கம் தொடர்ச்சி)

சீன மக்களின் போராட்டத்திற்கு முன்னால் பலம்பொருந்திய பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் கோட்டை ஒன்று எழும்பிவிட்டது!

எந்த ஒரு நாட்டின் தேசிய விழிப்பு தூண்டி விடப்பட வில்லையோ, எந்த ஒரு நாட்டின் தேசிய சக்தி அந்த தேசிய இனங்களுக்குக் காட்டப்பட வில்லையோ அந்தநாடு விடுதலைப் போராட்டத்திற்கு எந்த காலத்திலும் தயாராக இருக்கமுடியாது, சீனம் இடைக்காலத்தில் எந்த ஒரு மாற்று தேனியத்தினாலும் பெரும் அளவில் சவால் விடப்பட்டதில்லை! பிரித்தானிய ஏகாதிபத்தியம் ஒன்றுதான் இரண்டு போர்களினால் சவால் விட்டுக் காட்டியது! சீன சமுதாயமோ பெரிய குடும்பங்களினாலும், குரூப்களினாலும் ஆகியது. வீரப்பரம்பரை யாரும் இந்த "பெரிய மனிதர்"களிலே இல்லை! எனவே இவர்களிடமிருந்து ஏகாதிபத்தியத்தை எதிர்க்க ஒரு தலைவனை எதிர்பார்க்க முடியாது,... வீழ்ந்த சீனம் மறுபடியும் தலைதூக்க வேண்டுமானால் அது மக்களால் உண்டான தலைவனால்தான் முடியும். அந்த தலைவனை சீனம் கண்டு பிடிக்க வெகு நாட்களாயிற்று!

1794-95-ம் ஆண்டுகளில் கொரியத் தகராறினால் சீனத்துக்கும் ஜப்பானுக்கும் ஏற்பட்ட போரின் போது சீனம் கண்ட படுதோல்வி தான் சீனத்துசமூதாயம்விழித்துக்கொள்ள வழிகோலியது.

நிலப்பிரபுத்துவத்தை எதிர்த்து குடியானவர்களின் போராட்டம்— ஏகாதிபத்திய வியாபார கொள்ளையை எதிர்த்து கிளர்ச்சி — ஜப்பானியரை எதிர்த்து ஒரு விடுதலைப்போர் இம் மூன்றும் சீனர்களிடையே ஒரு புரட்சிக்கு சர்க்காரை எதிர்க்கஒரு பெரிய போராட்டத்திற்குத்தயார்செய்தது !

[…]ராணி டொவகர், ஏகாதிபத்தியத்தை எ[…]ர்த்து செய்த (1900) பாக்சர் புரட்சி, அரச குடும்பத்தின் மூலமாக தேசிய விழிப்புக்கும் விதை தூவப்பட்டது எனலாம்! இந்தப் புரட்சிக்குப் பிறகு மஞ்சுஅரசகுடும்பத்தினர்செய்த சீர்திருத் தங்களைப் பற்றி மக்கள் அக்கறை கொள்ளவில்லை. காரணம் அரச குடும்பத்தினருக்குத்தான் அரசியல் போராட்டம் நடத்த உரிமையுண்டு என எண்ணிக்கிடாத ஊமைகள் அரச குடும்பத்துக்கும் ஆபத்து உண்டு என்பதையும், அவர்கள் நடத்தும்போராட்டத்திற்கு மக்கள் தான் உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணமும் ஆளும் வர்க்கத்தை துச்சமென கருதச் செய்தது! எனவே திறமையற்ற அரசகுடும்பத்தை எதிர்த்தும் புரட்சி செய்கிற அளவுக்கு மக்கள் முனைந்தனர்!

1911-12ல் தான் கான்ட நகரைச் சேர்ந்த டாக்டர் சன்யாட்சன், தன்னுடைய சிறிய குழுவினரின் பக்க பலத்தோடு குடியரசை நிர்ணயித்தார் ஆனால் முதல் தலைவரான யூவான்-ஷி-கே மஞ்சு பரம்பரையினரான காரணத்தினால் அவர் ஒரு அரச பரம்பரையை ஸ்தாபிக்க முற்பட்டார். புரட்சி செய்த மக்கள் மறுபடியும் ஒரு முடியாட்சிக்கு வசதி செய்யமறுத்தனர். உள்நாட்டுக்குழப்பம் மறுபடியும் முளைக்க ஆரம்பித்தது! 1914-18 முதல் உலகப்போரின் முடிவில் விற்கப்பட்ட ஆயுதங்களை வாங்கி சீனத் […]ப் பிரபுக்கள் தங்கள் தங்கள் ஆதிக்கத்திற்காக போரிடத் தயங்கவில்லை! இதற்கிடையில் சீனத்து விவசாயிகள் முன்னேற்றப்பட்டதைவிட பலமடங்கு வரி உயர்வு ஏற்படவே வரிப்பணம் […]ங்காமல் சீனத்தை விட்டு வெளியேறி மஞ்சூரியாவில் அகதிகளாக […]தனர். தென்பகுதியில் டாக்டர் சன்-யாட்-சன் புரட்சிக்கான […]ப்பொருளும் கொடுக்க முயற்சித்தார். அமெரிக்கா பேலிய நாடுகள் முதலியவைகளை எல்லாம் சுற்றிப் பார்த்து வந்த சன்யாட்சன் தேசிய […]மையைத்தூவி நாட்டிலே அமைதி உண்டாக்க முனைந்தார். நாலு சாதி முறையைப்போன்ற ஆனாதி காலம் தொட்டு வந்த குடும்பச் சலுகைகளை […]ர்ந்தெரிந்து ஒரே […]ழங்கினர்!

நிலச் சீர்திருத்தம் என்ற முனையிலே இறங்கி படித்த, நில உரிமையுடைய சுதந்திர விவசாயிகளை உண்டாக்க விரும்பினார். டாக்டர் சன்யாட்சன் கண்ட கனவுகளை நினைவாக்க முடியாத அளவுக்கு வடபகுதியிலேஇருந்த நிலப்பிரபுத்துவம் உள்நாட்டுக் குழப்பத்திலே ஈடுபட்டிருந்தது.

சன்யாட்சன் ரஷ்ய உதவி பெற்று (மக்கள் தேசியக் கட்சி) கொமின்டாங் பக்கபலத்துடன் தன்னுடைய புதிய எண்ணங்களை உருவாக்க முயன்றார்; இந்த சமயத்திலே இளமைப் பருவத்திலே இருந்த சீன கம்யூனிஸ்ட் கட்சியும் இவருடன் ஒத்துழைத்து இவர்களில் மிகமிக முக்யமான சிஷ்யர்களில் ஒருவர்தான் சியாங்-கே-ஷேக் காண்டனுக்கும் அருகாமையில் இருந்த வாம்பா வீரா பாசறையில் தேசிய விருப்புக்கொண்டு போர்வீரர்களைத் தயார் செய்கிற அதிகாரியாக பொறுப்பேற்றிருந்தார்

டாக்டர் சன்யாட்சன் பீகிங் போயிருந்த சமயம் மரணமடைந்தார் சியாங் தன்னுடையதேசியப்படையினருடன் பீகிங் சென்று டாக்டர் சன்யாட்சனின் உடலை தென்பகுதியிலே கொணர்ந்து சமாதிசெய்தனர். இந்த சமயத்திலேதான் ஜெனராலி மோசியாங் - கே-ஷேக் மேலை ஏகாதிபத்திய கூட்டுறவுடன் தேசிய சர்க்காரை ஸ்தாபித்தார்

1920 லேயே கம்யூனிஸ்ட் கட்சியினர்தங்களுடைய பிரச்சாரத்தைதுவங்கினர் கொமின் டாங்குடன் கொஞ்ச நாள் இணைந்திருந்த போதிலும்சியாங்கின் ஏகாதிபத்திய கூட்டுறவில் அதிருப்திபட்டனர். ஹாங்காவில் போட்டி சர்க்காரை ஸ்தாபித்த கம்யூனிஸ்ட்களை கவிழ்த்தார்!வடபகுதி விவசாயிகளோ கம்யூனிஸ்ட் கட்சியின் மேல் வைத்த நம்பிக்கையினால் வெகுகாலம் வரை சியாங் ஆட்சிக்கு கட்டுப்படாமலே இருந்தனர்.

புதிய புரட்சிக்கு சமயம் பார்த்துக் கொண்டிருந்த சீனத்து விவசாயிகளிடையே 1921-ம் ஆண்டில் ஒரு புதிய இளைஞன் தோன்றினான்! வயது 28 கட்டிளங்காளை! உழைத்து உழைத்து பிரபுகளுக்கு சோறூட்டிக்கொண்டிருந்த சீனத்து விவசாயிகளைத் தட்டி எழுப்பினான்- புதிய மக்களாட்சிக்கு அவர்களை திரட்டினான் 1934ம் ஆண்டு வரை சியாங்கே மாகாணத்திலேயே இருந்து கொண்டு விவசாயிகளிடையே ஒரு மாபெரும் புரட்சிக்கு அடிகோலினான்.

காலத்தின் மாறுதல்களை கவனித்து தக்க சமயத்தை எதிர் நோக்கிக்கொண்டிருந்த இந்த இளைஞன்தான் மாசே—துங்!

ஜப்பானியரின் சீனப்படையெடுப்பு துவங்கிய காலத்தில் மக்களின் அவதி இன்னும் அதிகரிக்கத் தொடங்கியது. போர் போர் என்ற போராட்ட நிலையும் அதனால் விலைவாசிகள் உயர்வும் பஞ்சமும் மக்களை புதிய புரட்சிக்கு வழிகாண்பித்தது. இந்த ஜப்பானிய எதிர்ப்பு நாட்டு மக்களுக்கு தேசிய விழிப்பையும், விவசாயிகளுக்கு போர் முறையையும் கம்யூனிஸ்ட்கட்சிக்கு ஒரு பலமான வளர்ச்சியையும் தந்தது,

இந்த போர் நிலையை கவனிக்கசர்வதேசசங்கம் அனுப்பிய கமிஷன் ஜப்பானியருக்கும் — சீனருக்கும் தகராறிலே இருந்த வடபகுதி சீனம் சர்வதேசங்கத்தின் கண் காணிப்பிலே இருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தது அமெரிக்க ஏகாதிபத்தியமோ மஞ்சூரியா எனும் இப்பகுதியில் ஜப்பானுக்கிருக்கிற உரிமையில் தலையிட விரும்பவில்லை என்று கூறிவிட்டது.

சியாங்கின் கொமின்டாங்அமெரிக்கரின் செல்லப் பிள்ளையாக இருந்த காரணத்தினாலும் வடபகுதி கம்யூனிச ஆதிப்பு பிரதேசமாக இருந்த காரணத்தினாலும் வடபகுதியை ஜப்பானுக்கு தத்தம் செய்துவிட்டு வடபகுதியிலிருந்த கொமின்டாங் தேசிய படையினரை திருப்பி அழைத்துக் கொண்டது! மாசேதுங் எதிர்பார்த்திருந்த நல்ல சமயம் கிடைத்துவிட்டது. வேற்று நாட்டாரான ஜப்பானியரை எதிர்ப்பதற்கான படை[…] குடிகளிடையே திரட்டினான் […]துங்! ஜப்பானியரின் யுத்தவெறியினால் வீடிழந்து நிலமிழந்து நின்ற நிலப்பிரபுத்துவம் கூட இந்த போரிலே கலந்து கொண்டது.

நாடு முழுவதுமிருந்த—பள்ளிமாணவர்கள் ஜப்பானிய எதிர்ப்பு கோஷங்களை எழுப்பினர் ! ஜப்பானிய படையெடுப்பை அலட்சியம் செய்த சியாங் கோமின்டாங் மக்களின் அலட்சியத்திற்குற்பட்டது. மாணவர்களின் எழுச்சி சியாங்கால் கட்டுப் படுத்தமுடியாத அளவுக்கு மீறி எழுந்தது சரித்திரம் படித்த சீன மாணவர்கள் வரும் கால சரித்திரத்தை ஆக்கும் சிற்பிகளாக மாறினர் ! அரசாங்க எதிர்ப்பை துச்சமென ஒதுக்கினர்—இந்த பலம் பொருந்திய எதிர்ப்பு தேசியவிழிப்பை உண்டாக்கி விட்டது. தேசிய பூர்விக மக்கள் பணம் படைத்த நிலப் பிரபுகள் உள் நாட்டு பண்ணையர்கள் அவ்வளவு பேரும் ஜப்பானிய எதிர்ப்பு கீதங்களை ஒலித்தனர் நாட்டு மக்களோ கொமின்டாங் நம்பிக்கை இழந்தனர் மாசேதுங்கினிடம் நம்பிக்கை வைத்தனர் ! மாணவர்கள் போர் வீரர்களாக மாறினார்கள்- குடியானவர்கள் சீனத்து பெருங்குடியினரே போர் வீரர்களாக மாறினார்கள் — தங்கள் தாயகத்தை மீட்க! பொன்னான சீனத்தின் சுதந்திரத்தைக் காப்பாற்ற!

கொரில்லாக்கள் ஆயிரமாயிரம், காடுகளில் கூடினர். மலைகளில் குகை அமைத்தனர்—பெருமளவிலே இருந்த ஜப்பானியரை — ஆயுத மேந்திய பயிற்சி பெற்ற போர் வீரர்களைஒளிந்திருந்து தாக்கினர் வெற்றிமேல்-வெற்றியும் கண்டனர்!

இந்த எதிர்ப்பை வெற்றிகரமாக்க— ஜப்பானியரை ஒழித்துக் கட்ட மாசேதுங் மூன்று வேண்டுகோள் விடுத்தார் கொமின் டாங் கட்சியை நோக்கி! நியாயமான கோரிக்கைகள் நாட்டு நலனிலே அக்கறை கொண்டவர்கள் விடும்சாதாரணக் கோரிக்கைகள் தான்!

1. உள் நாட்டுப் போரில் சமரசம் மாற்றானை நாட்டிலேஇருந்துவிரட்ட கூட்டு முன்னணி (2) மக்களுக்கு அடிப்படை உரிமைகளும் சுதந்திரமும் (3) ஜப்பானியரை எதிர்த்து போரிட ஆயுதப் பயிற்சி!

இந்த மூன்று கோரிக்கைகளையும் நிராகரித்தது—சியாங் கொமின்டாங்! இத்தோடு நின்று விடவில்லை ஜப்பானிய எதிர்ப்பை கைவிட்டுவிட சொல்லியது ! போர் வீரர்களை வீட்டுக்கழைத்தது! போராட்டத்தை நடத்திய மாசேதுங்கையும் அவரது சகாக்களையும் வேட்டையாடியது! மாசேதுங்குக்கு ஒரு சோதனை ! வெளி நாட்டாரை எதிர்ப்பதை விட உள் நாட்டு ஆதிக்ககாரர்களையும் எதிர்க்கவேண்டும்! ஒரு புறத்தில் கொமின்டாங்குடன் செய்து கொள்ள இருந்த மத்தியஸ்தமும் வெற்றி காணவில்லை.

எனவே மாசேதுங் விவசாயிகளை திரட்டினார் தொழிலாளர்களை திரட்டினார்— பணம் படைத்தோர் நிலம் படைத்தோர் திரண்டனர்—மாணவர்கள் போர் முழக்கம் செய்தனர். ஆயுதம் ஏந்தினர்! தங்கள் தாயகத்தைக் காப்பாற்ற நீண்டதோர் பிரயாணத்தை துவங்கினர் ஆறுகள் பலவற்றைக் கடந்து மலைகள் பலவற்றைத் தாண்டி சாலைகள் இல்லாத இடங்களிலே செப்பனிட்டு உணவு எதிர்ப்பாராமல் நடந்து சென்றனர்—போர் ஒலி இருந்தது தாயகத்தை காப்பாற்றுவோம் என்று திட நம்பிக்கை இருந்தது சுதந்திரத்தை காணவேண்டும் தன் வாழ் நாட்[illegible]ள்ளாக என்ற ஆர்வம் இருந்தது அடைந்தனர் நடந்தனர்—நடந்து கொண்டே இருந்தனர்! எண்ணிக்கை நம்மை பிரமிக்க வைக்கும்—100,000—ஆம் ஒரு லட்சம்! உணவுக்கு ஆங்காங்கே தொல்லைகள் ஏற்பட்டதுண்டு ! பசி-பட்டினி ஆனால் ஆர்வம் நாட்டை மீட்க!இப்படி இவர்கள் சென்ற தூரம் 8,000 எண்ணாயிரம் மைல்கள் பதினோரு மாகாணத்தை கடந்து சென்றிருக்கிறார்கள் இடையிலே எதிர்த்து நின்ற சியாங் கொமின்டாங்கின் 411 பட்டாளங்களை முறியடித்து முன்னேறினார்கள் ஜப்[…]யரின் அணி வகுப்பைக் கண்[…]ர் போரிட்டனர்!

தேசிய விழிப்புக்கொண்டமாபெரும் சக்திக்கு முன்னால் எவ்வளவு பலம் பொருந்திய சர்க்கார்தான் என்ன செய்ய முடியும் ஆயுத பலம்அவர்களை என்ன செய்ய முடியும் உலகவரலாற்றிலே எந்த படையும் சாதிக்காத மாபெரும் காரியம் இது! ஹன்னிபாலுக்கு தெரியாதது— அலெக்ஸாண்டர் உணராதது—ஸெனடான் கூட தன்னுடைய பெரும்பயணத்திலே சாதிக்க முடியாத மாபெரும் சாகஸத்தை இந்த மாசேதுங் செய்து காட்டினான்.

சர்க்கார் செய்ய வேண்டிய--செய்ய தவறிய காரியத்தை நாடு கண்டது. உண்மையான தலைவன் யாரென்பதை நிர்ணயிக்க காலமா செல்லும்? சியாங்கின் படைத் தளபதிகள் கூட வெறுத்தனர் இந்த செய்கையைமாசேதுங்கிடம் சேர்ந்தனர்! சங் ஷே லிங், ஹாங்-ஹு-செங், இருவரும் சியாங்கின் அபிமான தளபதிகள் அவர்கள் கூட இந்த மாசேதுங் மாபெரும் சாதனைக்கண்டு மலைத்தனர் ! 1936 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 12ல்சியாங்கே ஷேக்கையே கைது செய்கிற அளவுக்கு வளர்ந்து.விட்டது அவர்களின் நாட்டுப்பற்று! பின் விடுதலையடைந்தான் சியாங்.

மக்கள் சக்திக்கு முன்னே ஜப்பானிய படையெடுப்பு குறைந்துகொண்டு வந்தது உவான் வீழ்ச்சிக்குப் பின் ஜப்பானியரே தான் வாங்கினர்! இந்த போராட்டத்திலே மசேதுங்குக்கு வளர்ந்திருந்த செல்வாக்கை குறைக்க வெகுவாக பாடு பட்டான் சியாங்! மசேதுங்கோ மக்கள் பாராட்டிய தலைவன்! இந்த வளர்ச்சியை குறைக்க மாசேதுங்கும் அவனது படைவீரரும் வேட்டையாடப் பட்டனர்சிறைச்சாலைகள் திறக்கப்பட்டன. கொலைக்கைதிகளும் கிரிமினல்குற்றவாளிகளும்கூட சிறையிலே இடமில்லாதகாரணத்தால் வெளியிலே அனுப்பப்பட்டனர் மாசேதுங்கின் அனுதாபிகள் சிறையடைக்கப்பட்டனர்.

சீனம் முழுவதும் கொதித்தெழுந்தது மாசேதுங்கின்போராட்டத்திற்கே உதவிசெய்தனர். சியாங்-துங்போராட்டம் தொடர்ந்து நடந்தது ஜப்பானியரை துரத்த பயன் பட்ட செஞ்சேனை மக்கள் விடுதலைப் படையாகமாறிற்று கூ—டே என்ற நண்பன் இந்தபோராட்டத்தின் தலைமை யேற்றான்!

சியாங் அமெரிக்காவின் உறவிலே 43 லட்சம் போர் வீரர்கள் பலகோடி ரூபாய்கள் பெறுமான தளவாடங்கள் கொண்டு போராடினான்! ஆனால் மக்கள் சக்தி வெற்றி கண்டது தேசிய சக்தி வெற்றிமுரசமிட்டது!

1949-ம் ஆண்டு ஏப்ரல்மீ 21ந் தேதி சீனம் முழுவதும் மக்கள் விடுதலைப் படையின் தலைமையிலே நின்றது. சியாங்—ஏகாதிபத்தியக் கூட்டுறவிலே மக்களை உதாசீனம் செய்தவன்—பார்மோசா தீவிலே ஓடி ஒளிந்தான்!

"அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் வளர்ப்பு நாயான சியாங் இந்த வேகமான முடிவுக்கு வந்தது ஒரு ஆச்சரியமான சம்பவம் என நான் கருதவில்லை! மக்கள் எண்ணத்தையும் பலத்தையும் உதாசீனப்படுத்துகிறவர்களுக்கு ஏற்படும்சாதாரணமுடிவே இதுதான்!ஆயுதம் ஏந்திய ஒரு சில கூலிகளை நம்பி— மக்களின் குறைகளை கண்ணெடுத்தும் பார்க்காத மமதைக்காரர்களுக்கு ஏற்படும் முடிவுதான் அது. இருபத்திரெண்டு ஆண்டு சியாங்கின் இரத்த வெறி பிடித்த ஆட்சியிலும் — ஒரு நூற்றாண்டு ஏகாதிபத்திய ,வெறியர்களின் ஆட்சியிலும் சரித்திரம் கூற வேண்டிய—கூறிய தீர்ப்பே இதுதான்

கூ—டே

ராஜா பார்லி
பிஸ்கட்ஸ்
குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்.
[…] சலந்துபிள்ளை, 115, திண்டுக்கல்ரோடு மதுரை.

# இத்தாலிய...

(24-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டான். மற்றோர் சமயம் அவன் சென்ற கப்பல் பாறையிலே மோதுண்டு சுக்கு நூறாகியது. அவனது நிகரற்ற நீச்சல் திறமையால் உயிர் தப்பினான். ஆனால் அவனது கண்ணெதிரிலேயே அருமை இத்தாலிய நண்பர்களை இறப்பு எனும் அலைக் கரங்களால் கடல் கட்டித் தழுவி விட்டது. அந்த ஆபத்தான அணைப்பிலிருந்து அவர்களை விடுவிக்க, முயன்றும் அந்தோ! அவனால் முடியவில்லை. எஞ்சிய சிலருடன் பக்கத்து பட்டின முற்றுகையில் பங்கு கொண்டான். தளபதியும் ஆனான். வெற்றியும் கிடைத்தது. ஆனால் அவனது உள்ளம் இழந்த தோழர்களை எண்ணி வேதனையால் மெலிந்தது. உற்ற தோழர்களை இழந்த துயரால் துடி துடித்தான். வாழ்வே வரண்ட பாலை வனமாய்த் தோன்றியது.

இருண்ட அவன் வாழ்விற்கு ஒளியூட்ட, உடைந்த உள்ளத்திற்கு மருந்திட, அருகிலே இருந்து அன்பு மொழி பேச, துணைவி ஒருத்தி தேவை என அவன் நெஞ்சு கூறியது. ஒரு நாள் கப்பலின் தளத்திலே நின்று கரையை நோக்கிக் கொண்டிருந்தான். கரையிலே ஓர் உயர்ந்த குன்று. குன்றின் மீது பல கோல மாளிகைகள் இவை தென்பட்டன. பின்னர் தொலை நோக்காடி (Teles cope) மூலம் பார்க்கும்போது துடியிடையாள் ஒருத்தி தோற்ற மளித்தாள் அந்தப் பகுதியிலே கரையை அடைந்தான் கன்னியைக் காண வேண்டுமென்ற களிப்பால்; வேகமாய் நடந்தான் வேல் விழியாள் உலவிய திக்கை நோக்கி வழியிலே ஏற்கெனவே அறிமுகமான மனிதன் குறுக்கிட்டு அவளது இல்லம் வந்து போகுமாறு பரிவுடன் அழைத்தான். அவனைப் பின் தொடர்ந்தான், குமரியைக் காணக் கொடுத்து வைக்கவில்லையே என அவன் யாரிடமும் சொல்லவில்லை. ஆனால் அவனது சோகப் பெருமூச்சு அதைத்தான் சொல்லியது. வீட்டையடைந்ததும் அவன் கண்கள் சந்தித்தது வேறு யாரையுமல்ல. அந்த அதிசய அழகியைத்தான். ஆச்சரியம் தாங்க முடியவில்லை நெடுநேரம் ஒருவரை ஒருவர் உற்று நோக்கினர். அவர்களின் பார்வை நெடுநாள் பழகிய நண்பர்கள் பழங்கால நினைவை ஞாபகம் படுத்துவது போல இருந்தது.

கடைசியாக "நீ என்னை மணக்க வேண்டும்" என உரைத்தான் கரிபால்டி. அதன் பிறகு அவர்கள் போட்டுக்கொண்ட உறவு முடிச்சை இறப்பு எனும் உளிகொண்டே துண்டிக்கச் செய்ய முடிந்தது. அனிடா ரைபராஸ் (Anita Riperas) என்பது அழகியின் திருப்பெயர். அவளின் தந்தை வேறொரு வாலிபனுக்கு- இந்த வனிதை வாழ்க்கைப்பட விரும்பாத வாலிபனுக்கு வாக்களித்திருந்தான். இந்த சிக்கலின் சீரழிந்த நேரத்தில்தான் சிங்கமெனத் தோன்றினான் கரிபால்டி. நாட்டுவிடுதலைக்குப் போராடிய வீரன், நங்கையாகிய தனது விலங்கையும் நொறுக்குவான் என்ற நம்பிக்கையில் அவனது தோள்களைப் பற்றினாள். முன்னர் வாக்களிக்கப்பட்ட வரன் வரட்டுப் பிடிவாதம் காட்டவே கன்னியைக் கப்பலுக்கே அழைத்து வந்துவிட்டான் கரிபால்டி. பின்னர் மாண்டி விடியோ என்ற இடத்தில் மணமும் நிகழ்ந்தது. அவர்களின் பத்து ஆண்டு காதல் வாழ்வு பாரிலேயே யாரும் அநுபவிக்காத புதுமை இன்பம் நிறைந்திருந்தது. நீலக்கடலும் நீண்ட நிலப்பரப்பும் அவர்களின் நிலாச்சோறுமுற்றங்களாயின. காதல் வானிலே ஜோடிப் புறாக்களெனப் பறந்தனர். முதல் கடற்போரிலே குண்டு பட்டு காயமுற்றனள். ஆனால் நெஞ்சம் கலங்கினவளல்ல. காதலனின் பணியிலே பங்கு கொள்வது தனது நீங்காக் கடமை எனக்கொண்டாள். குதிரைச்சவாரியிலும் குறிப்பட்ட பயிற்சி அடைந்திருந்தாள். அவளது கொழுநன் தென் … நாட்டு கொரில்லாப் படை…க்குத் தலைமை பூண்ட நேரத்திலே பல நாட்கள் புரவிமீதமர்ந்து காடு, மலை, நதிகளெல்லாம் கடந்தனள். வானக் கூரையின் கீழ் கட்டாந்தரையிலே கழித்த இரவுகள் எத்தனை எத்தனையோ! சிலநேரங்களிலே பல ஆயிரம் குதிரை வீரர்கள் பின்தொடர்ந்தனர். ஒரு நேரத்திலே அனிடாவின் குதிரை கொல்லப்பட்டது. அவளும் கைதியானாள்! போர் முடிவிலே அவளது கணவனும் கொல்லப்பட்டான் என செய்தி வந்தது. காவலாட்களுடனே கரிபால்டியின் பிணத்தைக் கண்டுபிடிக்க அனுமதிக்கப்பட்டாள். அவள் தேடிய இடத்திலே அவனது போர்க் கருவிகள்தான் கிடந்தன. அவனைக் காணோம். தப்பித்து விட்டான் என்பதை உணர்ந்த தையல் போதை மயக்கத்திலேயிருந்த காவலாளிகளை ஏமாற்றிவிட்டு கடும் வேகத்திலே செல்லும் ஓர் குதிரை மீது பறந்தனள். அடர்ந்த ஆரண்யத்திலே, காடு மேடெல்லாம் சுற்றி, வரண்ட சமவெளிகளிலெல்லாம் அலைந்து. வெள்ளம் நிறைந்த நதிகளை நீந்தி, கணவாய் பலவற்றைக் கடந்து, நாலு நாட்களுக்குப்பின் கரிபால்டியைக் கண்டனள். மீண்டும் முதல் குழந்தையின் பிரசவத்திற்கு 12 நாட்களுக்குப் பின்பு, மழைக் காலத்திலே பச்சைக் குழந்தையையும் ஏந்திக்கொண்டு வனாந்திரங்களிலே சுற்றினாள் கடைசியாக கரிபால்டி தனக்கு பூரண அதிகாரம் இல்லாத உத்யோகம் சலிப்பூட்ட, வேலையிலிருந்து நீங்கி மாண்டி விடியோ (Monte Video) நகரில் ஓய்வாக வாழ்ந்தான்.

கரிபால்டியின் ஓய்வுக்கு பிரிவுபசாரம் சொல்ல வேண்டிய சூழ்நிலை அங்கும் தயாராகியது. பக்கத்து அர்ஜெண்டைனா, மாண்டி விடியோவை சமருக்கு அழைத்தது. கரிபால்டிக்கு ராணுவத்திலே முக்கிய அலுவல் வழங்கப்பட்டது. இத்துடன் புதிய இத்தாலியப் படை ஒன்றை உருவாக்கினான். அந்த நகரிலே விடுதலைக் கிளர்ச்சிக்காக நாடு கடத்தப்பட்ட பல இத்தாலியர் வாழ்ந்தனர். அவர்களையும் மற்றவரையும் திரட்டி புகழ் பெற்ற "இத்தாலியப் படை"யை அமைத்தான். அதற்கென உடையும், கொடியும் கண்டான். அந்த வீரர்கள் செஞ்சட்டையை அணிந்திருந்தனர். நடுவிலே எரிமலை பொறிக்கப்பட்ட கருப்புக்கொடியைத் தங்கள் சின்னமாய்க் கொண்டனர். கருப்பு நிறம் இத்தாலியின் துக்கத்தின் அறிகுறி யென்றும், எரிமலை, உள்ளத்திலே குமுறுகின்ற உணர்ச்சித் தீயின் அடையாளம் எனவும் விளக்கம் கூறினான். இந்தப்படைக்களம் பலவற்றிலே, வாகை மாலைசூடியது. இப்படை ஆற்றலினால்தான் அந்த மண்டலம் விடுதலையுடன் தலைநிமிர முடிந்தது. இதனது புகழ் மாநிலமெங்கும். அமெரிக்காவைத் தாண்டி ஐரோப்பிய மண்ணிலே, இத்தாலிய நாட்டிலெல்லாம் பரவத் தொடங்கியது. இத்தாலியத் தாயகம் கரிபால்டியைக் காணத் துடித்தது.

12-ஆண்டுகள் உருண்டோடிமறைந்தன. ஐரோப்பிய வானிலே மீண்டும் சுதந்தர தாரகையின் உதயம். பிரஞ்சு நாட்டு அரசியலையே குலுக்கிய 1848-ம் ஆண்டு வந்தது. பிரான்சு குடியரசெனப் பிரகடனப் படுத்தியது சிசிலி மக்களின் சீற்றமான கிளர்ச்சி, நகரின் கொந்தளிப்பு, வெனிஸ் பகுதியின் விடுதலைப் போர் என நிகழ்ச்சிகள் வேறு திசையிலே திரும்பின. ஆஸ்திரியாவும் உள்நாட்டுக் கலவரங்களிலே ஒடுங்கிக் கிடந்தது. சார்லஸ் ஆல்பர்ட் மன்னனும் சமயம் வந்தது சழக்கர்களை அழிக்க என சந்தோஷித்தான்.

இவை அத்தனையும் கரிபால்டிக்குத் தெரியாது. ஆனால் எந்த சார்லஸ் மன்னன் பனிரெண்டு ஆண்டுகளுக்குமுன் அவனது மரண ஓலையில் கையெழுத்திட்டானோ அவனே லம்பார்டி சமவெளியில் இவனது உதவியை நாடுகிறான் என்பதை மட்டும் உணர்ந்திருந்தான். தனதுசொந்தத்துறைமுகமாகிய நைஸிலே வந்து இறங்கினான். மக்கள் அஞ்சா வீரனை ஆர வாரத்துடன் வரவேற்றனர், சில நாட்களிலே ரேபார் பெல்லா (Rover bella) என்ற அரசாங்கத்தலை நகரிலே சார்லஸ் மன்னனைச்சந்தித்தான் தனது சகாயமான வாள் வலிமையை அவன் பொருட்டு அர்ப்பணிப்பதாக மண்டியிட்டுக் கூறினான். மமதை நிறைந்த மன்னனோ கரிபால்டியைக்கண்டபடி திட்டி வேறு இடம் பார்க்கச் சொல்லி விரட்டினான் வேதனையடைந்த கரிபால்டி மிலான் நகரம் சென்றான் அங்குள்ள தற்காலிக சர்க்கார் அவனுக்கு வேலை அளித்தது. அவனுடன் நல்ல உடையற்ற குறை ஆயுதபாணிகளான பலரைபடையாக அனுப்பியது ஆனால் சில நாட்களிலே 3000 வீரர்களைத் திரட்டி விட்டான். சார்லஸ் மன்னனை தளகர்த்தராகக் கொண்டிருந்த படை மிலான் நகரைக சரணடைவது என்ற முடிவுக்கு வந்தது 5 மாதங்களுக்கு முன் ஆஸ்திரியரை தெருச்சண்டையிலே விரட்டிய தீரமான நகர மக்கள் வேந்தனை வேம்பென வெறுத்தனர். ஆஸ்திரியருக்கு ஆதரவாக இருந்த போப்பாண்டவர் மீதும் புகைச்சல் கிளம்பியது. விடுதலைக்காக களம் பல அமைக்க, கடல் கடந்து வந்த கரிபால்டிக்கு இச்சம்பவம் ஆறுத்துயரை அளித்தது. ஆஸ்திரியருடன் செய்த உடன்படிக்கைக்கு சம்மதம் மறுத்து கோபக்கனல்கக்க போர்க் கோலம் பூண்டான். ஆல்ப்ஸ் மலைச்சாரலிலே மூன்று வாரங்கள், தனியான போரொன்றை நடத்தினான் இதைப் போர் என்பதைவிட கண்டனம் என்பது பொருந்தும், ஆஸ்திரியரின் ஆற்றல்மிக்க சேனைகளின் முன் இவன் நிற்க முடியாவிடினும் மக்களின் இருதயங்களிலே இத்தாலியின் லட்சியக் கோரிக்கை-மக்களுடையது, மன்னர்களுடைய தல்ல மதகுருக்களுடையதல்ல என்பதை நட்டுவிட்டான்

இந்த நேரத்தில் அவனது உணர்ச்சிக்கு அணை கோலியது அவன் உடல் நிலை காய்ச்சல் நோயால் அல்லலுற்றான்—ஆனால் சில நாட்களிலேயே "மக்கள் போரு"க்காக படை திரட்டினான் முதலிலே சிசிலித் தீவைத்தாக்க நினைத்தான். ஆனால் ரொமக்னாப் பகுதியில் ஆஸ்திரியரின் அட்டகாசம் மிகுந்தது, தனது படையை அப்பக்கம் திருப்பினான். ஆனால் எல்லையிலேயே யுத்த மந்திரியான ரோஸி (Rossi) என்பவனின் ஆணையால் மறிக்கப்பட்டான். காரணம் கரிபால்டி போன்ற வீரன் எங்கு மக்களைப் புரட்சிப் புயலுக்குத்தயார் செய்து விடுவானோ என்ற அச்சம். கரிபால்டிக்கும் அவனது ஆணைப்படி நடக்க ஆசை இல்லை யென்றாலும் நண்பனாய் இருக்கின்றானே எனத் தயங்கினான். ஆனால் எதிர்பாராத சம்பவமொன்று நிலைமையையே தலைகீழாக்கியது. ரோஸி (Rossi) என்ற யுத்த மந்திரி எவனோவொருவனின் வாளுக்கு விருந்தாக்கப்பட்டான். தனது உயிருக்கும் ஆபத்தோ என அஞ்சிய போப்பாண்டவரும் குடியானவன் வேடத்திலே வேறு இடத்திற்கு ஓடிவிட்டார். அரசாங்கம் அல்லோல கல்லோல மாகியது.

ரோம் நகரிலே குடியரசுத் தலைவர்கள் திரண்டனர். நாடாளும் வகையைத் தீட்ட அரசியல் நிர்ணய மன்றம் கூடியது. மாஜினியின் தலைமையிலே புது அரசுக்கு எதிராக பிரான்சு, ஆஸ்திரியா, ஸ்பெயின்— அத்தனை நாடுகள் ஒன்று சேர்ந்து ஆயத்தமாயின. ரோம் நகரம் முற்றுகையிடப்பட்டது. அழிந்து விடுவோம் என்று அறிந்தும் அஞ்சாது எதிர்க்கத்துணிவு கொண்டனர். மாஜினியும் ரோம் மாநகரின் மண்ணிலே மாண்டு ஒழிவது என்ற முடிவுக்கு வந்தான். கரிபால்டி இந்த நேரத்தில் காட்டிய நெஞ்சு உறுதியும் தீரமும் மயிர்க்கூச் செறிவன. அவனது நண்பர்கள் பலரும் கோரமானப்போருக்கு பலியாயினர். இவனுக்கும் வாழ்வே கசந்தது. இறப்பைத் தவிர வேறு எண்ணம் அவனது இதயத்தில் இடம் பெறவில்லை. பளபளக்கும் வாளுடனே போர்க்களத்தில் நுழைந்தான். 2 மணி நேரம் சுழலெனச் சுற்றி வந்தான். அதற்குப்பின் என்ன நடந்தது. என்பதே அவனுக்குத் தெரியாது. காலை மலர்ந்ததும் தனது உடலம் முழுதும் ரத்தம் தோய்ந்திருப்பதைக் கண்டான். ஆனால் அவனது உடலிலே ஒரு சிறு காயம்கூடக் காணோம். மீண்டும் தொடங்கிப் போராடினான். அது சமயம் தலைநகரிலே சட்டசபை கூடியுள்ளதென்றும், அவன் அவசியம் கலந்துகொள்ள வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டது. உடனே டைபர் நதியைக் கடந்து, இத்தாலியப் புரவி மீதமர்ந்து வேகமாய் சட்டசபையை அடைந்தான். புழுதியும் இரத்தக் கறையும் படிந்த உடையுடனும் உறைக்குள் செல்ல முடியாது வளைந்த உடைவாளுடனும் வந்து நின்றான். சட்டசபை, சரணாகதி அடைந்து விடுவது, தெருக்களிலே போரிட்டு இறப்பது, அல்லது மலைக்குச் சென்று மறைந்து வாழ்வது என மூன்று பிரச்னைகளை விவாதித்தது, கரிபால்டிக்கு சரணாகதி சம்மதமில்லை. எலிகளைப்போல போரிட்டு இறப்பது புத்திசாலித்தனமல்ல என எண்ணினான். "நாம் எங்கு செல்கிறோமோ அங்கு ரோம் இருக்கிறது" என முழங்கினான். மூன்றாவது யோசனையை வரவேற்று சொற்பொழிவாற்றி விட்டு சென்றுவிட்டான். இவன் இல்லா நேரத்தில் சரணாகதிக்கு ஓட் அளித்தது. மாஜினியும் கலந்து கொள்ளவில்லை. துயரம் தாங்காமல் பிரான்சுக்கும் பின் சுவிட்சர்லாந்திற்கும் ஓடினான். கரிபால்டி தனது படைகளை அழைந்து தோழர்களே! ரோம் நகரைப் பிரியப்போகிறோம். எங்கு போகிறோம் என்பது எனக்கே தெரியாது. ஆனால் புதுப் புது பேரும் புகழும் காத்துக் கிடக்கின்றன உங்களுக்கு ஊதியம் கிடையாது, ஓய்வு கிடையாது, உணவும் கிடைத்த இடத்தில்தான். இந்த விதிகளுக்குக் கட்டுப்பட்டவர்கள் என்னைப் பின் தொடரட்டும், மற்றவர் சரணாகதியடையட்டும் என முழங்கினான். 1000 பேர் பின் தொடர்ந்தனர். இந்தப்படை ரோம் நகர தெருக்கள் வழியே மௌனமாய் சென்றது இதன் பிறகு இவர்களுக்கு வந்த இடுக்கண் கொஞ்ச நஞ்சமல்ல பசி. தாகம். நீண்ட பயணம், போர்க்களம், சாவு—இவைகளுடன் போராடினர். இறுதியில் கரிபால்டி அமெரிக்கா ஓடிவிடவேண்டிய நிலைமையே வந்தது ஆனால் மீண்டும் காலம் வந்த நேரத்தில் வெற்றிக் கொடியை நாட்டி இத்தாலியின் பெருமையை மேதினிக்கு அறிவித்தான். சிசிலி நாட்டையும் ஜெயித்து ஐக்கிய இத்தாலியின் அங்கமாக்கினான்

இத்தகைய மாவீரன், தனது 75 வது ஆண்டிலே தனது இல்லத்திலே இறந்தான். எளிமையே உருவான கரிபால்டி எந்த சலுகையும் எதிர்பார்க்கவில்லை. கடமையைச் செய்தோம் என்று களிப்பு அவனுக்குஇருந்தது. கரிபால்டி இறந்தானே தவிர அவனது இறவாத செயல்கள் உலக மக்களிடை அவனது அழியாத ஞாபகச் சின்னத்தைச்செதுக்கி விட்டிருக்கின்றன.

---

# உரோம புரி...

(23-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் வந்திருப்பதாக மக்கள் கஷ்டப்படவேண்டாமென்று தேறுதல் கூறி மக்களை அசட்டையாக இருக்கச் செய்து ஆஸ்திரிய ராணுவத்தை ஏவித் தோற்கடித்தான். இதை யறிந்தான் மாஜினி. உடனே போப் ஆண்டவர் வசத்திலிருக்கும் மத்திய இத்தாலியில் போய் புரட்சியைக் கிளப்பினான். இதே நேரத்தில் பர்கோமில் கரிபால்டியின் தலைமையில் புரட்சி நடந்து கொண்டிருந்தது,

மக்களின் எழுச்சியைக் கண்டவுடனே போப் ஆண்டவர் உரோமாபுரியை விட்டு ஓடினார். சில தினங்கள் வரை எவ்வித அரசாங்கமும் இல்லாமல் உரோமாபுரி இருந்தது

---

# திராவிட இயக்கத்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு ஜஸ்டிஸ் கட்சி வளர்வதைக் கண்ட எதிரிகள் சில பார்ப்பனரல்லாதாரைக் கூட்டிக்கொண்டு கடுமையான எதிர்ப் பிரசாரம் செய்தனர். ஆனால் ஜஸ்டிஸ் கட்சியினரும் விடாமல் கூட்டங்கள் நடத்தி பொது மக்கள் உள்ளத்தில் உணர்ச்சியூட்டி பார்ப்பனரல்லார் உயர்வுக்கென்று உழைக்கத் தனிக்கட்சி ஒன்று இருந்தே தீரவேண்டும் என்னும் முடிவுக்குப் பொதுமக்கள்வருமாறுசெய்து விட்டனர். ஆங்காங்கே அன்றாடம் பல கூட்டங்கள் நடப்பதும் பார்ப்பனரல்லாமக்களின் உணர்ச்சி நாளுக்கு நாள்பெருகுவதுமாக நிலைமை வளர்ந்தது.

பார்ப்பனரல்லாதாரின் இந்தவளர்ச்சியைக் குலைக்க எஸ், கஸ்தூரி ரங்கய்யங்கார், ஏ, ரங்கசாமி அய்யங்கார், கோவிந்தராசய்யர். கருணாகர மேனன் திவான் பகதூர் பி. கேசவ பிள்ளை முதலியோர் பெரிதும் முயன்றும் தோல்வி கண்டனர்.

இந் நிலையில் உடல் நலிவு பற்றி டாக்டர் நாயர் லண்டன் சென்றார். போகும்போது டாக்டர் நடேச முதலியாரிடம் கட்சிப் பொறுப்பை ஒப்படைத்துச் சென்றார். லண்டனில் நம் மக்கள் நிலைப்பற்றின் தீவிரப் பிரசாரம் செய்து தனித்தொகுதியை வற்புறுத்தி அதனைப்பெறும் வேலையைச் செய்வதற்காக இந்தியா வந்து இங்குள்ள தலைவர்களை உற்சாக மாக வேலைச்செய்யத் தூண்டி விட்டு மீண்டும் லண்டன் சென்றவர் இந்தியா திரும்பாமல் 1919 ஜூலை 17 ல் உயிர் நீத்தார்

பிறகு மாண்ட்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தம் இந்தியாவுக்கு வழங்கப்பட்டு அதன்படி 20-11-1920-ல் முதல் பொதுத் தேர்தல் நடந்தது. ஜஸ்டிஸ் கட்சி தேர்தலில் நின்றது- அன்னிபெசண்டின் ஹோம்ரூல் கட்சி தேர்தலில் எதிர்த்து நின்று போட்டியிட்டது. காங்கிரசை இச் சமயம் காந்தியார் கைப்பற்றிவிட்டபடியால், தேர்தலில் காங்கிரஸ் போட்டியிடவில்லை. தேர்தலில் ஜஸ்டிஸ் கட்சி பெருவாரியாக ஸ்தானங்கள் பெற்றதால், ஜஸ்டிஸ் கட்சித் தலைவரான சர் தியாகராயரை அப்போதைய கவர்னர் வெலிங்டன் அழைத்து மந்திரிசபை அமைக்கக் கோரினார். ஆனால் தியாகராயர் மந்திரி பதவியை ஏற்காமல், ஏ சுப்பராயலு ரெட்டியாரை முதல் மந்திரியாகவும், பனகல் அரசரை 2-வது மந்திரியாகவும், கே. வி. ரெட்டி நாயுடுவை 3-வது மந்திரியாகவும் நியமித்தார். சர். பி. ராஜகோபாலாச்சாரி சட்ட சபைத் தலைவராக கவர்னரால் நியமிக்கப்பட்டார். இதுதான் சென்னையில் முதல் மக்கள் மந்திரிசபை. இந்த முதல் மாகாணச் சுய ஆட்சிச் சட்டசபையை 1921 ஜனவரி 12-ந் தேதி கானாட்டுக் கோமகன் திறந்துவைத்தார்.

ஆனால் முதல் மந்திரி திவான்பகதூர் ஏ, சுப்பராயலும் ஒரே ஆண்டில் மரணமடைந்துவிட்டதால் பனகல் அரசர் முதல் மந்திரியாகி, சர். கே. வி. ரெட்டி, 2-வது மந்திரியாகி சர். ஏ. பி. பாத்ரோ 3-வது மந்திரியானார்.

1923 நவம்பரில் 2-வது பொதுத் தேர்தல் நடந்தது. இதிலும் ஜஸ்டிஸ் கட்சி வெற்றிபெற்றது. கவர்னர் முறைப்படி கட்சித் தலைவரான சர். தியாகராயரை மந்திரிசபை அமைக்க அழைத்தார். முன்னைய மந்திரி சபையில் தமிழரே இல்லாதிருந்தது தமிழ் நாட்டில் பெருங்குறையாகப் பேசப்பட்டதையறிந்த சர் தியாகராயர் பனகல் அரசர். திவான்பகதூர், சிவஞானம் பிள்ளை, ஏ. பி: பாத்ரோ என மந்திரிசபை அமைக்கப்பட்டது. இது இரண்டாவது மந்திரிசபையாகும். இந்தச் சட்டசபைக்குக் கனம் எஸ் டி. சுவாமிக்கண்ணுப்பிள்ளை தலைவராக நியமிக்கப்பட்டார். இச்சட்டசபைக் காலத்தில் கவர்னரும் மாறி, கோஷன் பிரபு கவர்னரானார். ஆனால் எஸ். டி. சுவாமிக் கண்ணுப்பிள்ளை சில மாதங்களே சட்டசபைத் தலைவராயிருந்து மரணமடைந்துவிட்டபடியால் பேராசிரியர் எம். ரத்தினசாமி பிறகு சட்டசபைத் தலைவரானார்.

இச்சந்தர்ப்பத்தில் 1925 ஜூன் 29-ந் தேதி சர். பி. தியாகராயர் காலமானார். பார்ப்பனரல்லாதார் சமுதாயம் சோகத்தில் ஆழ்ந்தது பின் பனகல் அரசர் கட்சித்தலைவரானார்.

1926 நவம்பரில் 3-வது பொதுத் தேர்தல் நடந்தது. இம்முறை எஸ். சீநிவாச அய்யங்கார் தலைமையில் சுயராஜ்யக் கட்சி என்னும் பெயரில் காங்கிரஸ் தேர்தலில் கலந்தது. இத் தேர்தலில் எதிரிகளின் பலத்த விஷமப் பிரசாரத்தினால் ஜஸ்டிஸ் கட்சி ஆதரவிழந்தது. காங்கிரஸ் கட்சியோ பதவி ஏற்க முன்வரவில்லை. பிறர் உதவியுடன் மந்திரிசபை அமைக்கப் பனகல் ஒப்புக்கொள்ளவில்லை. எனவே டாக்டர் சுப்பராயன் 1926-ல் மந்திரி சபையமைத்தார். இச்சட்டசபையில் சி. வி. எஸ். நரசிம்மராஜு சட்டசபைத் தலைவரானார்.

இவ்வாறு ஜஸ்டிஸ் கட்சி வீழ்ச்சியடையவே, கட்சியையும். பத்திரிகைகளையும் வலுப்படுத்தும் வேலை துவக்கப்பட்டது. 'ஜஸ்டிஸ்' பத்திரிகையின் ஆசிரியராக சர். ஏ. இராமசாமி முதலியாரும், உதவி ஆசிரியராக டி. ஏ. வி. நாதனும் அமர்ந்தனர். 'திராவிடன்' பத்திரிகை ஆசிரியராக, சனகசங்கரகண்ணப்பரும் உதவியாசிரியராக பு. செல்வராசனும் அமர்ந்தனர். பத்திரிகைகளைத்திறம்பட நடத்தி பதினாயிரக் கணக்கில் செலவழியுமாறு செய்து மீண்டும் மக்கள் மனத்தில் உணர்ச்சியை எழுப்பினர். 1927 ல்பனகல் அரசர் தலைமையில் மதுரையில் மாகாண மாநாடு கூடியது கோயமுத்தூரில் எஸ். குமாரசாமி ரெட்டியார் தலைமையில் ஒரு மாநாடு கூடியது. கட்சியைப் பலப்படுத்தப்பல திட்டங்கள் வகுக்கப் பட்டன. இந்நிலை பனகல் அரசர் 1928 டிசம்பர் 16-ந் காலமாகிவிட்டார்.

டாக்டர் சுப்பராயன் மந்திரி சபையில் முதலில் ஆர். என். ஆரோக்கிய சாமி முதலியாரும் ஏ. ரங்கநாதமுதலியாரும் மந்திரிகளாயிருந்தனர் இவ்விருவரும் சிறிது காலத்திற்குள் ராஜிநாமாச் செய்து விட எஸ். முத்தையா முதலியாரும் எம். ஆர். சேதுரத்தினமய்யரும் மந்திரிகளாயினர். டாக்டர். சுப்பராயன் மந்திரி சபை ஜஸ்டிஸ் கட்சியின் முழு ஆதரவின் மீதே நடந்துக்கொண்டிருந்தது.

காங்கிரசில் பார்ப்பனீயம் தலைதூக்கி நின்று வ. வெ. சு. ஐயர் போன்றவர்கள் பார்ப்பனர்கள் வேறு மற்றவர்கள் வேறு என்ற வைதீக மனப்பான்மையைக் காங்கிரசுக்குள் வளர்க்க முயன்று அதற்குக் காங்கிரஸ் பணத்தைச் செலவழிக்க முயன்றதால், தமிழ்நாட்டுக் காங்கிரசை விட்டுப் பெரியார் பிரிந்தார். இவருடன் டாக்டர் பி. வரதராசலு நாயுடு, திரு வி. கலியாணசுந்தரனார் முதலியோரும் பிரிந்துவிட்டனரெனினும், அவ்விருவரும் பின்னர்க் காங்கிரசில் ஒட்டிக் கொண்டனர். பெரியாரோ பார்ப்பனரல்லாதார் முன்னேற்றத்துக்கான தீவிரத் திட்டம் ஒன்று வகுத்து, அதை ஒப்புக்கொண்ட ஜஸ்டிஸ் கட்சியுடன் சேர்ந்து தமிழ்நாடு முழுவதும் தீவிரமாக வேலைசெய்தார். 1926-ல் சுயமரியாதை இயக்கம் துவக்கி நாடெங்கும் அதற்குக் கிளைகள் ஏற்படச் செய்தார். துவக்கத்தில் மாயவரம் நடராசன், பூவாளூர் பொன்னம்பலம். எஸ். வி. லிங்கம், நாகை காளியப்பன், அழகிரிசாமி, சாமி சிதம்பரனார், சித்தையன், பு; செல்வராசன், சி. கணேசன், டி. எம். பார்த்தசாரதி, சிவஞானம், கபாலி, தங்கராஜ், ஜீவானந்தம் முதலியோர் பெரியாருக்குத் துணைவராக நின்று தீவிரமாக உழைத்தார்கள். 1929 பிப்ரவரி 17, 18-ந் தேதிகளில் செங்கற்பட்டில் முதல் சுயமரியாதை மாநாட்டைக் கூட்டினார். பார்ப்பனீயத்தை அரசியலில் மட்டும் வேரறுத்தால், அது சமுதாயத்தில் தலைதூக்கி மீண்டும் பார்ப்பனரல்லாதாரைக் குலைக்க முன்வந்துவிடுமென்பதைப் பெரியார் நன்கு விளக்கி, அரசியலைவிடச் சமுதாயத்தில் பார்ப்பனீயத்தை விரட்டி வேரறுப்பதே முதல் வேலையாகச் செய்யவேண்டியதென்னும் திட்டத்தை வகுத்தார். சமுதாயத்தில் பார்ப்பனீயத்தை விரட்டும் வேலையைச் செய்யச் சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்தார். சமுதாய வளர்ச்சிக்கான பல புரட்சிகரமான முன்னேற்றச் சீர்திருத்தங்களை எடுத்துப் பேசினார் நாட்டிலுள்ள மக்களுட் பெரும்பாலோர் மனத்தைக் கவர்ந்தார். சுயமரியாதைக் கட்சி நாட்டில் வலுப்பெறத் தொடங்கியது.



சர். ஏ. டி பன்னீர்செல்வம்

இதன் பயனாக 1929-நவம்பரில் நடந்த பொதுத்தேர்தலில் ஜஸ்டிஸ் கட்சி மீண்டும் வெற்றிபெற்றது. 1930-ல் திவான்பகதூர் முனுசாமி நாயுடு 4-வது மந்திரி சபை அமைத்தார். சர். பி. டி. ராஜனும், திவான் பகதூர் குமாரசாமி ரெட்டியாரும் இதில் மந்திரிகளாக அமர்ந்தனர்.

பிறகு 1932-ல் கட்சித் தலைவர் மீது நம்பிக்கையற்றுவிடவே பொப்பிலியரசர் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். எ... பிடி பொப்பிலி ...யரச... மந்திரியானார். இந்த முறை... சபை 3 வருட காலமே ... பெறவேண்டியது சைமன் கமிஷ... அறிக்கை வெளிவரத் தாமதமான... காரணத்தால் 7 ஆண்டுகள் நடந்... இந்தக் காலத்தில் இப்போது செட்டிநாட்டரசாயிருக்கும் முத்தையா செட்டியாரவர்கள் ஏ. டி. பன்னீர்செல்வம் ஆகியோர் மந்திரிப் பதவிகள் வகித்தனர்.

சைமன் கமிஷன் அறிக்கைப்படி வந்த சீர்திருத்தப்படி 1935-ல் நடந்த பொதுத் தேர்தலில் ஜஸ்டிஸ் கட்சி அடியோடு வீழ்ச்சியடைந்துவிட்டது. காங்கிரஸ்காரர்கள் வெற்றிபெற்றனரெனினும் 1936-ல்தான் அவர்கள் மந்திரிசபை அமைத்தனர்.

காங்கிரசுக்காரர்கள் மந்திரி சபை சி. இராஜகோபாலாச்சாரியை முதன் மந்திரியாகக் கொண்டு அமைக்கப்பட்டது. இம் மந்திரிசபை வந்தவுடன் தமிழுக்கு உலைவைக்கும் நோக்கத்துடன் இந்தியைக் கட்டாயப்பாடமாக்கினர்.

பெரியார் இதனை எதிர்த்து மாபெரும் கிளர்ச்சியைத் துவக்கினார். நாடெங்கும் பல மாநாடுகளும் அன்றாடம் பல கண்டனக் கூட்டங்களும் நடைபெற்றன. தினந்தோறும் மறியல் நடந்து அதன் பயனாக 1200 பேர் சிறைசென்றனர். பெரியாரும் கைது செய்யப்பட்டு 3 ஆண்டுச் சிறைவாசம் ஏற்றார்.

இந்நிலையில், பெரியார் சிறையிலிருக்கையில் 1938 டிசம்பர் இறுதியில் நடந்த ஜஸ்டிஸ் மாநாட்டின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அ... சர்க்கமோ மாநாட்டில் தலைமைவகிக்க இவரை விடுதலை செய்யவில்லை. எனவேதான் தலைமைப் பீடத்தில் பெரியாரின் படம் வைத்து மாநாடு நடந்தது. பெரியார் எழுதியனுப்பிய தலைமைப் பிரசங்கம் சர். ஏ டி. பன்னீர் செல்வத்தால் படிக்கப்பட்டது.


பிறகு 22—5—39-ல் பெரியார் விடுதலையானார். 21—2—40-ல்கட்டாய இந்தி ரத்து செய்யப்பட்டது. திருவாரூரில் நடந்த ஜஸ்டிஸ் மாகாணமாநாட்டுக்கும் பெரியாரே தலைவரானார்.

அந்த ஜஸ்டிஸ் கட்சியைத்தான் "அண்ணாத்துரை தீர்மானம்" திராவிடர் கழகமாக சேலத்திலே மாற்றியது. திராவிடர் கழகத்திலிருந்துதான் 1949 செப்டம்பர் 17-ல் திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றியது.

---



தஞ்சைமாவட்ட தி. மு. கழக முதல்மாநாடு, மாயவரத்தில் நடராசன்பந்தலில் சிறும்சிறப்புடன் நடைபெறும் காட்சி. பந்தலின் முகப்பு இது.



சென்னையில் டில்லி மந்திரி மஹதாப் வந்த காலை கருங்கொடி ஏந்தி நிற்கிறார்கள் கழகக் காளையர்.

# இயக்க நாடகங்களில் நடித்த நம்மவர்கள்



'வாழமுடியாதவர்களில்'
கைதியாக கருணாநிதி



காகப்பட்டராக அண்ணா



சிவாஜி உருவில் சம்பத்



தேவகி, வேலைக்காரி முதலிய படங்களில் நடித்தவரும்—ஒரு நல்ல எதிர்காலத்திற்குரியவருமான நமதியக்கத் தோழர். M. N. கிருஷ்ணன்.



சந்திரோதயத்தில் அண்ணா



நடிகர் மகாலிங்கம் (மகிழ்நன்) நமது இயக்க நாடகங்களில் பெண் உருவில் நடிப்பவர்.



K. R. ராமசாமி நாடகக் குழுவின் நடிகர்
P. S. தெட்சணாமூர்த்தி



"சந்திரமோகனில்"
அண்ணாவும், கே. ஆர். ராமசாமியும்



'பராசக்தி'யில் முக்கிய வேடம் தாங்குகிறார் நடிகர் ராசேந்திரன்.



D. V. நாராயணசாமி



இயக்கப் பிரச்சாரத்தை நாடக
மூலம் நடத்திவரும் நடிகவேள்
M. R. ராதாவும்—தோழியர்
M. R. மங்களமும்



நடிகர் V. S. நடேசன் வேலைக்காரியில்
முனாதன் உருவத்தில்